உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 29 வெள்ளிக்கிழமை (13.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 168



03 சூதாட்டத்துக்கு தூண்டுகின்றனர்



08 கல்லூரிக்கு கட்டடம் அமைக்கும் படையினர்



16 இந்தியா முயல்கிறது தன் விருப்புக்களை நிறைவேற்ற



23 அல்குவைதாவின் அடுத்த தலைவர்



24 ஓய்வெடுக்கப் போறாராம் ரஜனி

# இனிவரும் காலத்தில் அரசுடனான பேச்சு கடினமாகும்

யாழ்ப்பாணம், மே 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரச தரப்பு வழங்கும் உறுதிமொழிகள் எவையும் நிறைவேற்றப்படாத நிலையில், இனிவரும் காலங்களில் பேச்சுக்கள் கடினமானதாகவே இருக்கும் என்று கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கும் இடையில் நேற்று மீண்டும் நடைபெற்ற பேச்சுக்களின் போது இந்த விடயம் தம்மால் அரச தரப்புக்கு எடுத்துக் கூறப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

"இதுவரை நடந்த பேச்சுக்களில் உறுதியளிக்கப்பட்ட விடயங்கள் எவற்றையும் அரசு நடைமுறைப்படுத்தவில்லை. ஒருபுறத்தில் அரசு எம்முடன் பேசுகின்ற அதேநேரம் வடக்கு - கிழக்கில் மக்களின் காணிகள் அரச படைகளால் அபகரிக்கப்படுகின்றன. இத்தகைய நிலைமை தொடருமானால் இனி இடம்பெறும் பேச்சுக்கள் கடினமானவையாகவே இருக்கும்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம் என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நேற்றைய பேச்சுக்களில் வடக்கு - கிழக்கில் தற்போது இடம்பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது எனவும் அவர் கூறினார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில்

(04ஆம் பக்கம் பார்க்க)

## செனட் பற்றியும் ஆராயப்படுகிறது

அரசு - கூட்டமைப்பு பேச்சுகளில் செனட் சபையை மீண்டும் ஸ்தாபிப்பது தொடர்பாகவும் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்று இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகவும் ஆராயப்படுகிறது.

- இவ்வாறு அமைச்சரவைப் (04ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சித் தேர்தலில் அரசின் மனுக்கள் ஏற்பு

## நீதிமன்றம் நேற்று வழங்கியது தீர்ப்பு

கொழும்பு, மே 13

**உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் நிராகரிக்கப்பட்ட 61 வேட்பு மனுக்களில் 45 வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டது. இதனடிப்படையில் யாழ். தேர்தல் மாவட்டத்துக்கு உட்பட்ட 19 உள்ளூராட்சி சபைகளுக்குமான அரச தரப்பு வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. 16 வேட்புமனுக்களை நீதிமன்றம் நிராகரித்தது.**

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக அரச மற்றும் எதிர்த் தரப்புக்களின் வேட்புமனுக்கள் பல உள்ளூராட்சி மன்றங்களில் நிராகரிக்கப்பட்டன.

இவ்வாறு 67 உள்ளூராட்சி சபைகளில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து கட்சிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையீடு செய்திருந்தன. அவை தொடர்பான விசாரணையின் தீர்ப்பு நேற்று வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 19 சபைகளில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. பெயரில் ஏற்பட்ட குழப்பம் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பது

(29ஆம் பக்கம் பார்க்க)



அரச தரப்பு வேட்புமனுக்கள் ஏற்கப்பட்ட மகிழ்ச்சியுடன் நீதிமன்றத்தில் இருந்து வெளியே வரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த.

## தேர்தல் உடன் இல்லை

கொழும்பு, மே 13

நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்த்து ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்த முடியாது என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதத்தில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய இந்தத் தேர்தல் நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாகப் பிற்போடப்பட்டது. நேற்று நீதிமன்றத் தீர்ப்பு வெளியான

(29ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசராக ஷிரானி

கொழும்பு, மே 13

உயர் நீதிமன்ற பிரதம நீதியரசராக ஷிரானி பண்டாரநாயக்கவை நியமனம் செய்வதற்கு நாடாளுமன்றச் சபை அங்கீகாரம் வழங்கி உள்ளது.

பிரதம நீதியரசராக இதுவரை பதவி வகித்து வந்தவரான அசோக டி சில்வா பதவி விலகிச்

(04ஆம் பக்கம் பார்க்க)

## லசந்த வழக்கில் திருப்பம்

கொழும்பு, மே 13

கொழும்பிலிருந்து வெளியாகும் 'சண்டே லீடர்' ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையுடன் மூத்த இராணுவ அதிகாரி ஒருவரைத் தொடர்புபடுத்தும் வகையில் சாட்சியமளிக்குமாறு தீவிரவாத முறிடியப்புத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி தன்னைக் கேட்டுக் கொண்டார் என்று இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரி ஒருவர் நீதிமன்றத்தில் பகிரங்கமாகச் சாட்சியம் அளித்துள்ளார்

கல்கிசை நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற விசாரணையில், விளக்கமறியலில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரி கந்தேகெதர பிரியவன்ச இவ்வாறு கூறியுள்ளார்.

இவர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்

(29ஆம் பக்கம் பார்க்க)

## இரு புதிய சேவைகள் மூலம் 30 ஆயிரம் பேருக்கு வேலை

கொழும்பு, மே 13

இலங்கை அபிவிருத்தி அதிகாரிகள் சேவை, இலங்கை அபிவிருத்தி உதவியாளர் சேவை என்ற புதிய இரு சேவைகளை ஆரம்பித்து, 30 ஆயிரம் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை தகவல் திணைக்களக் (04ஆம் பக்கம் பார்க்க)

## பரிந்துரைகளைச் செயற்படுத்த வலியுறுத்து

பிரஸல்ஸ், மே 13

ஐ.நா. நிபுணர் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றம் வலியுறுத்தி உள்ளது.

இலங்கை விவகாரம் உள்ளிட்ட மூன்று விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக அவசரமாகக் கூடிய ஐரோப்பிய நாடாளுமன்றத்தில், நேற்று (29ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைக் குழு மீது பழியைப் போடுகிறது அரசு

கொழும்பு, மே 13

இறுதிக் கட்டப் போரின் போது சரணடைய உள்ளவர்களின் பெயர்ப் பட்டியலைத் தரும்படி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கேட்கப்பட்டது. அவர்கள் அதை வழங்கவில்லை. யுத்தக் களத்துக்குச் செல்வதற்கான அனுமதியை மட்டுமே அவர்கள் கோரினர். இதனாலேயே புலிகளின் தலைவர்கள் இறுதி நேரத்தில் சரணடைவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியில் முடிந்தது.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்று நடந்தது.

இறுதிக்கட்டப் (04ஆம் பக்கம் பார்க்க)

# குற்றத்துக்கு மேல் குற்றம் புரிகிறது அரசு

## விக்கிரமபாகு கருணாரட்ண குற்றச்சாட்டு



கொழும்பு, மே 13

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நியமித்த நிபுணர் குழு இலங்கை மீது சுமத்தியுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்புவதற்காக அரசு மேலும்மேலும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது.

- இவ்வாறு புதிய இடதுசாரிகள் முன்னணித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண குற்றம் சாட்டி உள்ளார். (29ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

டோனி



# முதலிடத்தைக் கைப்பற்றியது சென்னை

-டிலீப்-

நுழைந்தது சென்னை அடுத்த சுற்றுக்கு. தகர்ந்தது டெல்லியின் அடுத்த சுற்றுக் கனவு.

சென்னையில் நடந்தது ஐ.பி.எல் ஆட்டம். தொடரின் 56 ஆவது ஆட்டம் நடந்தது நேற்று. மோதியது சென்னை சூப்பர் கிங்ஸ் - டெல்லி டெயர் டெவில்ஸ். புதுத் தலைமையில் களம் புகுந்தது டெல்லி. சேவாக் விடைபெற்றதால் ஹோப்ஸ் பொறுப்பெடுப்பு. நடந்தது நாணயச் சுழற்சி. வென்றது சென்னை. எடுத்தது துடுப்பெடுத்தாட முடிவு.

ஹஸி - விஜய் ஆரம்பித்தனர் சென்னையின் ஆட்டத்தை. ஆரம்பம் சிறப்பாய் அமையவில்லை சென்னைக்கு. வீழ்த்தப்பட்டது முதலாவது ஓவரிலேயே விக்கெட். ஐந்து ஓட்டங்களுடன் இப்ரான் பதான் பந்தில் முடிந்தது ஆட்டம். ரெய்னா வந்தார் அடுத்து. ரெய்னா முழக்கம் இரண்டாவது ஓவரில். மக்டொனால்ட் பந்தில் பறந்தது பவுண்டரி, சிக்ஸர். ஐந்தாவது ஓவர் அகாகர் வீசினார். விஜய் அடுத்தடுத்து அனுப்பினார் சிக்ஸர். அழைக்கப்பட்டார் அரொன். வீழ்த்தினார் ரெய்னா விக்கெட்டை. விடைபெற்றார் ரெய்னா 10 பந்துகளில் 14 ஓட்டங்களுடன்.

நுழைந்தார் பத்திரிநாத். ஆறாவது ஓவரின் இறுதிப் பந்து தவறவிடப்பட்டது விஜயின் பிடி. ஏழாவது ஓவரின் முதலாவது பந்து மீண்டும் தவறவிடப்பட்டது விஜயின் பிடி. மெதுவாகியது சென்னையின் அதிரடி ஆட்டம். அருமையாய் வெளியேறியது பவுண்டரிகள். 49 ஆவது பந்தில் எட்டியது அரைச்சதம். வெற்றிக்குப் போதாது வேகம். அடுத்த ஓவரில் எடுக்கப்பட்டது அதிரடி. பதினொராவது ஓவரில் சரிக்கப்பட்டது விஜயின் விக்கெட். வீழ்த்தப்படுகையில் 33 பந்துகளில் 35 ஓட்டங்கள். சரித்தவர் அகாகர்.

வந்தார் டோனி. அடங்கிய சென்னையின் அதிரடி மீண்டும் அனல் கக்கியது. வந்த வேகத்தில் ஓங்கி அடித்தெடுத்தார் பவுண்டரி. மக்டொனால்ட் வீசினார் அடுத்த ஓவர். முதலாவது பந்தில் பறந்தது சிக்ஸர். அடுத்த பந்தில் பவுண்டரி. இது டோனியின் விளாசல்.

அமர்களமான அதிரடிகளால் 86 பந்தில் 100 ஓட்டங்கள் பூர்த்தி. அகாகர் வீசினார் 19 ஆவது ஓவர். டோனி - பத்திரிநாத் அடித்து துவைத்தெடுப்பு. 41 பந்துகளில் பத்திரிநாத் பெற்றார் 50 ஓட்டங்கள். 113 பந்துகளில் சென்னையின் ஓட்ட எண்ணிக்கை 150 ஐ தொட்டது. இறுதி ஓவர் பதான் வீசினார். ஓட்டங்கள் குவிப்பதற்காய் ஓடியும் எடுக்கப்பட்டது ஓட்டங்கள். வீழ்ந்தது இதனால் பத்திரிநாத் விக்கெட். 56 பந்துகளில் 96 ஓட்டங்கள் பகிரப்பட்டது இணைப்பாட்டமாய். பத்திரி 43 பந்துகளில் 55 ஓட்டங்கள். எஞ்சியிருந்தது இரண்டு பந்துகள். போட்டுத்துவைத்தெடுத்தார் டோனி. 28 பந்துகளில் டோனியின் அரைச்சதம் பூர்த்தி. இறுதியில் 31 பந்துகளில் 5 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 63 ஓட்டங்கள்.

சென்னை பெற்றுக் கொண்டது 176 ஓட்டங்கள். இழந்தது 4 விக்கெட்டுக்கள். அரொன் பந்து வீச்சு பரவாயில்லை. வீசியது 4 ஓவர்கள். கொடுத்தது 20 ஓட்டங்கள். எடுத்தது ஒரு விக்கெட்.

கடின இலக்கை விரட்டத் தொடங்கியது டெல்லி. நமன் ஓஜா - டேவிட் வோர்னர் நுழைந்தனர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாய். இரண்டாவது ஓவர் வீசினார் பொலஞ்சர். ஓஜா அடித்தார் இரண்டு பவுண்டரிகள். ஆரம்பமானது டெல்லியின் ஓட்ட வேட்டை. தொடர்ந்தது மூன்றாவது ஓவரிலும். மோர்கலின் பந்தில் பறந்தது இரண்டு சிக்ஸர்கள். வீழ்ந்தது விக்கெட் அடுத்த பந்தில். 14 பந்துகளில் பெற்றுக்கொடுத்தார் 25 ஓட்டங்கள்.

விக்கெட் வீழ்வுடன் சென்னையின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது ஆட்டம். 33 பந்துகளில் பெற்றுக்கொண்டனர் 50 ஓட்டங்கள். சென்னையின் சுழலில் திணறியது டெல்லி. அஸ்வின் சரித்தார் இங்கிராம் விக்கெட். பிராவோ முடித்து வைத்தார் வோர்னரின் ஆட்டத்தை. மத்திய வரிசையில் வேணுகோபால் ராவ் சிறப்பான ஆட்டம். 20 பந்துகளில் 2 பவுண்டரிகள், சிக்ஸர்கள் அடங்கலாய் பெறப்பட்டது 30 ஓட்டங்கள். அஸ்வின் அதற்கு மேல் ஆட்டத்தை தொடர்வதற்கு விடவில்லை. பின்வரிசை வீரர்கள் பெரிதாய் சோபிக்க வில்லை. பதான் இறுதி மட்டும் கடும் போராட்டம். 34 பந்துகளில் 44 ஓட்டங்கள். 3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அதிரடியாய் அடித்தது.

போராட்டத்தால் இருபது ஓவர்களில் டெல்லி பெற்றது 158 ஓட்டங்கள். சென்னை கைப்பற்றியது 6 விக்கெட்டுக்கள். அஸ்வின் வீசியது 4 ஓவர்கள். கொடுத்தது 19 ஓட்டங்கள். எடுத்தது 2 விக்கெட்டுக்கள். ரெய்னாவின் சுழலில் வீசப்பட்டது 4 ஓவர்கள். கொடுக்கப்பட்டது 16 ஓட்டங்கள். இறுதியில் 18 ஓட்டங்களால் கிடைக்கப்பெற்றது வெற்றி. டோனிக்கு வழங்கப்பட்டது ஆட்டநாயகன் விருது.



## இன்றைய ஆட்டம்

- கொச்சி ருஸ்கேர்ஸ் எதிர் புனே வாரியர்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- சேவாக் – டெல்லி (11 ஆட்டங்கள் 424 ஓட்டங்கள்)
- கெயில் – பெங்களூர் (6 ஆட்டங்கள் 398 ஓட்டங்கள்)
- மைக் ஹஸி – சென்னை (10 ஆட்டங்கள் 393 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை (11 ஆட்டங்கள் 26 விக்கெட்டுக்கள்)
- முனாப் பட்டேல் – மும்பை (11 ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)
- பொலஞ்சர் – சென்னை (9 ஆட்டங்கள் 14 விக்கெட்டுக்கள்)

## DLF Indian Premier League அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| சென்னை சூப்ப கிங்ஸ் | 12 | 08 | 04 | 0 | 0 | + 0.544 | 16 |
| மும்பை இந்தியன்ஸ் | 11 | 08 | 03 | 0 | 0 | + 0.314 | 16 |
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 11 | 07 | 03 | 0 | 1 | + 0.863 | 15 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 11 | 07 | 04 | 0 | 0 | + 0.464 | 14 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 05 | 06 | 0 | 1 | - 0.587 | 11 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 11 | 05 | 06 | 0 | 0 | - 0.624 | 10 |
| புனே வாரியர்ஸ் | 11 | 04 | 07 | 0 | 0 | - 0.003 | 08 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 12 | 04 | 08 | 0 | 0 | - 0.363 | 08 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 10 | 04 | 06 | 0 | 0 | - 0.432 | 08 |
| டெக்கான் சார்ஜஸ் | 11 | 03 | 08 | 0 | 0 | - 0.177 | 06 |

DLF INDIAN PREMIER LEAGUE

# கிரிக்கெட் சபைத் தேர்தல் திலங்க, தர்மதாஸ களத்தில்

ஸ்ரீலங்கா கிரிக்கெட் (இலங்கை கிரிக்கெட் சபை) நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால மற்றும் முன்னாள் இடைக்கால நிர்வாகக் குழுத் தலைவர் ஜயந்த தர்மதாஸ, பதுரெலிய கிரிக்கெட் கழகத்தின் தலைவர் சுமித் பெரேரா ஆகியோர் போட்டியிடுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

2004 ஆம் ஆண்டிலிருந்து ஸ்ரீலங்கா கிரிக்கெட்டிற்குத் தேர்தல் நடத்தப்படவில்லை. அதன்பின் இடைக்கால நிர்வாகக் குழுக்களினாலேயே அந்தச் சபை நிர்வகிக்கப்பட்டது. எனினும் 3 மாதங்களுக்குள் இந்தத் தேர்தலை நடத்துமாறு உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் மேற்படி மூவரும் போட்டியில் குதிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

47 வயதான திலங்க சுமதிபால 1997-1998, 2000-2001, 2003-2004 ஆகிய காலங்களில் மூன்று தடவைகள் இந்தச் சபையின் தலைவராகப் பதவி வகித்தார். தற்போது நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ள திலங்க சுமதிபால இந்தத்தேர்தலில் போட்டியிடப்போவதாக நேரடியாகத் தெரிவிக்கவில்லை. ஆனால் 'நிச்சயமாக போட்டியிடுவதற்கான குழுவொன்றை நான் அமைப்பேன்' என்று அவர் கூறியுள்ளார்.

'தலைவர் பதவிக்குப் போட்டியிடுவது குறித்து நான் இன்னும் தீர்மானிக்கவில்லை. இதற்காக நான் குழுவொன்றை அமைப்பேன் அதன்பின் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அங்கத்துவக் கழகங்களுடன் கலந்துரையாடல் நடத்துவேன். அவர்கள் நான் போட்டியிட வேண்டுமென விரும்பினால் அவர்களை நான் ஏமாற்றப்போவதில்லை' என்றார்.

இந்தத் தேர்தலில் திலங்க சுமதிபாலவுக்கும் ஜயந்த தர்மதாஸவுக்கும் இடையில் போட்டி நிலவக்கூடும் எனக் கருதப்படுகிறது. 2004 ஆம் ஆண்டு விளையாட்டுத்துறை அமைச்சினால் ஸ்ரீலங்கா கிரிக்கெட் இடைக்கால நிர்வாக குழுத் தலைவராக நியமிக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டுவரை அந்தப் பதவியை வகித்தவர் ஜயந்த் தர்மதாஸ.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பின் தலைவர் பதவிக்குப் போட்டியிடுமாறு பல கழகங்கள் என்னை அணுகியுள்ளன. அதை நான் ஏற்றுக்கொண்டேன். நான் நேசிக்கும் இந்த விளையாட்டுக்காக எந்த சவாலையும் சந்திக்கத் தயார் என்று ஜயந்த தர்மதாஸ தெரிவித்தார்.

(15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூதாட்டத்துக்குத் தூண்டுகின்றனர்



இங்கிலாந்தைச் சேர்ந்த கிரிக்கெட் சூதாட்டத் தரகர்கள் தனக்கு தொலைபேசி மூலம் அழைப்பை மேற்கொண்டு இந்திய வீரர்களுடன் உள்ள நெருக்கத்தை பயன்படுத்தி அவர்களை ஐ.பி.எல். போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபடுமாறு செய்ய வேண்டுமென்று மிரட்டுவதாக மொடல் அழகி லிசா மாலிக் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பிரபல மொடல் அழகி லிசா மாலிக் பொலிவூட் படங்களிலும் நடித்துள்ள இவர் 'டான்சிங் குயின்' உட்பட பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். இவருடைய பல நிகழ்ச்சிகளில் இந்திய கிரிக்கெட் அணி மற்றும் ஐ.பி.எல் போட்டியில் பங்கேற்கும் வெளிநாடுகளைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்று ஆட்டம் போட்டு வருகின்றனர். மேலும் கடந்த ஆண்டு ஐ.பி.எல் போட்டிகள் முடிவில் நடைபெற்ற விருந்து நிகழ்ச்சிகளில் லிசா மாலிக் தினந்தோறும் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் லிசா மாலிக் நேற்று முன்தினம் ஒஷிவாரா பொலிஸ் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார். அதில் லண்டனைச் சேர்ந்த ரசாக் அக்கா ராஸ் என்பவரிடமிருந்து எனக்கு அடிக்கடி தொலைபேசி அழைப்பு வருகிறது. தன்னை சூதாட்டத் தரகர் என்று கூறிக்கொள்ளும் அவர் இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுடன் உங்களுக்கு நெருக்கமான பழக்கம் உள்ளது. இதனைப் பயன்படுத்தி அவர்களை ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளில் சூதாட்டத்தில் ஈடுபடுமாறு செய்யவேண்டும். இந்த வேலைக்காக உங்களுக்கு 50 லட்சம் ரூபா பணம் தருவோமென்று கூறி மிரட்டுகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த புகாரின் பேரில் அடையாளம் தெரியாத ஒருவருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர். மேலும் அவரிடமிருந்து மீண்டும் தொலைபேசி அழைப்பு வந்தால் உடனே எங்களுக்குத் தகவல் தெரிவிக்கவேண்டுமென்று லிசா மாலிக்கிடம் பொலிஸார் கூறினார்கள்.

இதுபற்றி ஒஷிவாரா பொலிஸ் நிலைய அதிகாரிகள் கூறுகையில்; மொடல் அழகி லிசா மாலிக் புகார் பற்றி விசாரித்து வருகிறோம் - என்றனர். (15)

# சதை தின்னும் ஐ.பி.எல்.வீரர்கள்



ஐ.பி.எல் விருந்துபசாரங்களில் கிரிக்கெட் வீரர்கள் தவறாக நடந்து கொள்கின்றனர். நடனப் பெண்களின் சதையை தான் பார்க்கின்றனர், என்று, தென்னாபிரிக்க நடனப் பெண் பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளார்.

ஐ.பி.எல் தொடரில் பார்வையாளர்களை மகிழ்விக்க, அழகிகளின் நடனத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொடரில் மும்பை அணிக்கான போட்டிகளில் நடனம் ஆடுவதற்காகத் தென்னாபிரிக்காவில் இருந்து 40 பெண்கள், ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இரவில் போட்டிகள் முடிந்ததும் நடக்கும் 'பார்ட்டிகளில்', நடக்கும் சம்பவங்கள் குறித்து கேபிரியல்லா (22) என்ற நடனப் பெண், சமீபத்தில் வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில், 'கிரிக்கெட் வீரர்கள் தகாத முறையிலும், அருவருக்கத் தக்கவகையிலும் நடந்து கொள்கின்றனர். இவர்கள் எங்களைப் பெண்களாக பார்ப்பதில்லை. வெறும் சதைப் பிண்டமாகத்தான் பார்க்கின்றனர்,' என்று தெரிவித்து இருந்தார்.

இப்படி ''உண்மையை' வெளியிட்டதால், கடந்த வாரம் இவர் மும்பை அணியின் ஒப்பந்தத்தில் இருந்து நீக்கப்பட்டார். இது குறித்து கேபிரியல்லா கூறியதாவது:

பொதுவாக 'பார்ட்டிகளின்' போது, அனைத்து இடங்களிலும் கமராக்கள் பொருத்தப்பட்டு, வீரர்கள் என்ன செய்கின்றனர் என்று கண்காணிக்கப்படுவார்கள். அப்படி இருந்தும் அவர்கள், எங்களைச் சுற்றித் தான் நின்று கொள்வார்கள்.



அவர்களை விட்டு நாங்கள் எங்கும் செல்ல முடியாது. மொத்தத்தில் எங்களை மாமிச பிண்டமாகத் தான் நடத்துகின்றனர். இதில் எந்தவொரு குறிப்பிட்ட வீரரையும் தெரிவிக்க விரும்பவில்லை. நாங்கள் சந்தித்த இந்திய வீரர்களில் டோனி, ரோகித் சர்மா-இருவரும் எப்போதும், நாகரீகமுடன் நடந்து கொள்வார்கள்.

இதைத்தான் எனது 'டுவிட்டரில்' தெரிவித்தேன். ஆனால், என்னை தொடரில் இருந்து நீக்கிவிட்டனர். உண்மையில் என்ன தவறு செய்தேன் என்றே தெ[illegible]யவில்லை. ஏதோ மிகப்பெரிய தவ[illegible] செய்த கிரிமினல் போல என்ன[illegible] நடத்தினர். எனது தரப்பு நியாயம் என்ன என்பதை சொல்வதற்குக் கூட வாய்ப்புத் தரவில்லை. இவ்வாறு கேபிரியல்லா தெரிவித்தார்.

(15)

# அறிமுகமாகிறது பகலிரவு டெஸ்ட் போட்டி

டெஸ்ட் போட்டியை பகல் - இரவு ஆட்டமாக நடத்துவது தொடர்பான ஐ.சி.சி.யின் திட்டத்துக்குப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆதரவு தெரிவித்துள்ளது.

லண்டனின் லோட்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் கூட்டத்தில், சர்ச்சைக்குரிய நடுவரின் தீர்ப்பை மறு ஆய்வு செய்யும் முறை டெஸ்ட் போட்டியை பகல் - இரவாக நடத்துவது உள்ளிட்ட விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டு வருகின்றது.

பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, ஆகியவை முதல் தர கிரிக்கெட் போட்டிகளை சோதனை முறையில் நடத்தியுள்ளதால் அவர்களிடம் இருந்து கருத்து கேட்கப்பட்டது. அவர்களும் தங்களின் பதிலை தெரிவித்துள்ளனர். இதில் பாகிஸ்தான் முழு ஆதரவை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் முதல் தர போட்டியின் இறுதி ஆட்டத்தை பகல் இரவாக நடத்தியது. ஒரேஞ்ச் நிறத்தினாலான பந்தை கொண்டு நடத்தப்பட்ட இந்த ஆட்டத்துக்கு பெரிய அளவில் ரசிகர்கள் கூட்டம் வரவில்லை. ஆனால் அவர்கள் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்துப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகி சுல்தான் ராணா கூறுகையில், பகல் - இரவாக டெஸ்ட் போட்டியை நடத்த ஆதரவு தெரிவித்து அறிக்கை அனுப்பியுள்ளோம் என்றார். (15)


# இழப்பு எங்களுக்குத்தான்

கிரேக் செப்பர்ட்

அணித் தலைவர் சேவாக் விளையாடாதது டெல்லி அணிக்கு மிகப் பெரிய இழப்பாகும் என்று அந்த அணியின் பயிற்சியாளர் கிரேக் செப்பர்ட் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டி தொடரில் அவர் அதிக ஓட்டங்களை எடுத்த வீரராக தற் போது உள்ளார். அவரது அதிரடியான ஆட்டத்தால் தான் டெல்லி அணி ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றி பெற்றது.

தலைவர் அணியின் முக்கிய வீரர் என்ற முறையில் அவரை இழந்து விட்டோம். நாங்கள் கடந்த சில போட்டிகளில் சிறப்பாக ஆடி வருகிறாம். தொடர்ந்து வரும் ஆட்டங்களில் மிகப்பெரிய அச்சுறுத்தல் கொடுப்போம் என்ற நம்பிக்கை உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (15)





# ஷரபோவா, ஜெகோவிச் முன்னேற்றம்

இத்தாலியின் தலைநகர் ரோமில் நடைபெற்று வரும் இத்தாலி திறந்த ரெனிஸ் போட்டியில் சேர்பியாவின் ஜொகோவிச், ரஷ்யாவின் மரிய ஷரபோவா உள்ளிட்டோர் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

புதன்கிழமை நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் இரண்டாவது சுற்றில் சேர்பியாவின் ஜொகோவிச் 6-0, [illegible]-3 என்ற நேர் செட்களில் போலந்தின் லூகாஸ் குபாட்டை வீழ்த்தினார்.

பிரித்தானிய வீரர் அன்டி முர்ரே 6-2, 2-6, 6-3 என்ற நேர் செட்களில் பெல்ஜியத்தின் முன்னணி வீரரான சேவியர் மலிஸயும், சுவிர்சலாந்தின் ஸ்டானிஸ்லஸ் வாவ்ரிங்கா 6-1, 3-6, 6-2 என்ற செட் கணக்கில் இத்தாலியின் பிலிப்போ வாலண்ட்ரியையும் தோற்கடித்தனர். மற்றொரு ஆட்டத்தில் ஆர்ஜென்டீனாவின் ஜூயன் இக்னேசியோ 6-4, 6-2 என்ற நேர் செட்களில் பிரான்ஸின் சைமனை வீழ்த்தினா[illegible].

ஷரபோவா வெற்றி

மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் ரஷ்யாவின் மரிய ஷரபோவா 6-1, 6-1 என்ற நேர் செட்களில் சக வீராங்கனையான மகரோவாவையும், ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர் 6-1, 7-5 என்ற நேர் செட்களில் இவெட்டா பெனிசோவாவையும் வீழ்த்தினர். ஸ்லோவேகியாவின் போலோனா 6-4, 6-2 என்ற நேர் செட்களில் ஜெர்மனியின் ஆன்ட்ரியா பெட்கோவிக்கை தோற்கடித்தார். இவர்கள் அனைவரும் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியள்ளனர். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து விதிகளை மீறியோருக்கு அபராதம்

வீதிப் போக்குவரத்து விதி முறைகளை மீறி வாகனம் செலுத்திய 4 பேருக்கு யாழ்.நீதிமன்றம் 7ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸார் மேற்கொண்ட வீதிப் போக்குவரத்துச் சோதனை நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட நான்கு பேரும் யாழ்.நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த யாழ்.மேலதிக நீதிவான் ஏ.பிரேம் சங்கர் அதிவேகமாக வாகனம் செலுத்திய நபருக்கு 2 ஆயிரம் ரூபாவும் ஒளி சமிக்ஞையின்றி வாகனம் செலுத்தியவருக்கு 2ஆயிரம் ரூபாவும் கவனயீனமாக வாகனம் செலுத்திய நபருக்கு 2 ஆயிரம் ரூபாவும், காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய நபருக்கு ஆயிரம் ரூபாவும் அபராதமாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டார். (ம-9)

## இருபுதிய... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்த விடயம் தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:- ஜனாதிபதி ஏற்கனவே வழங்கிய வாக்குறுதியின்படி மேற்படி இரு சேவைகளும் ஸ்தாபிக்கப்படும். இலங்கை அபிவிருத்தி அதிகாரிகள் சேவைக்கு 15ஆயிரம் பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். இலங்கை அபிவிருத்தி உதவியாளர்கள் சேவைக்கு ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தி எய்திய 15 ஆயிரம் இளைஞர், யுவதிகளும் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். ஓகஸ்ட் முதலாம் திகதி இந்தச் சேவைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றுவரும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத் தரங்கு நிகழ்வின் இரண்டாவது கருத்தரங்கு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

''ஒழுங்கான சமுதாயத்தின் வழிகாட்டிகள் மாணவர் சமுதாயமே'' என்பதை மாணவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும் எனும் நோக்கில் இத்தகைய விசேட கருத்தரங்கை மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இளைய சமுதாயத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பாலியல் ரீதியான அச்சுறுத்தல்கள், அவற்றின் பின்விளைவுகள் இடம் பெற்று வரும் சமூகச் சீரழிவுகள் தொடர்பான கருத்தூட்டல்கள் தகுதிவாய்ந்த வளவாளர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வளவாளர்களாக மகப்பேற்று நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர்பவானி, சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆகியோர் கலந்துகொள்வர்.

## செனற்பற்றியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அரசு - கூட்டமைப்பு பேச்சுகள் சாதகமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல என்பதை சமீபத்தைய தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டியுள்ளன. இருந்தும், கூட்டமைப்பு குறிப்பிடத்தக்க பெரும்பான்மை தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அரசு - கூட்டமைப்பு பேச்சுகளில் எட்டப்படும் முடிவுகள் குறித்து ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்படும்.

செனட் சபையை மீண்டும் ஸ்தாபித்தல், 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் செல்லும் தீர்வுகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்த அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## இனிவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலர் இன்னும் மீளக்குடியமர்த்தப்படாதிருக்கும் நிலை பற்றியும் பேச்சுக்களில் ஆராயப்பட்டுள்ளது.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் சுதந்திரக் கட்சி தனது கூட்டமைப்பில் இருக்கும் ஏனைய கட்சிகளுடன் பேசி தீர்க்கமான முடிவு ஒன்றுக்கு இன்னும் வரவில்லை என்று நேற்றைய சந்திப்பில் அரச தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டப் பேச்சில் அது பற்றிய அரசின் முடிவு தெரிவிக்கப்படும் என்று அரச தரப்புப் பிரதிநிதிகள் தெரிவித்தனர் என்றுசுரேஷ் கூறினார்.

நேற்றைய பேச்சுக்களின் போது தடுப்பில் உள்ள புலிச் சந்தேகநபர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றைக் கூட்டமைப்பு அரசிடம் கையளித்துள்ளது.

நேற்றைய பேச்சில் அரச தரப்பில் அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், நிமல் சிறிபால டிசில்வா, பேராசிரியர் ரஜீவ விஜேய சிங்க ஆகியோரும் கூட்டமைப்பின் சார்பில் தலைவர் சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந் திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். அடுத்த பேச்சு ஜூன் மாதம் 26ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (உ-15)

## செஞ்சிலுவைக்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போரின் போது புலிகளின் தலைவர்கள் சரணடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை, பாதுகாப்புச் செயலர் மூர்க்கத்தனமாக நிராகரித்துவிட்டார் என்று 'விக்கிலீக்ஸ்' இணையதளத்தில் வெளிவந்த செய்தி குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'விக்கிலீக்ஸ்' என்பது ஒரு செய்தி இணையதளம். அதன் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு இல்லை. ஒரு நாடு எம் மீது குற்றஞ்சாட்டினால் அதற்கு அரசு பதில் அளிக்கலாம்.

இருந்தும், நடந்தது இதுதான். நோர்வே அரசும் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவரும் இறுதிக்கட்டப் போரின் போது சரணடைய உள்ளோர் தொடர்பாகக் கவனம் செலுத்தும்படி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்தனர்.

இதையடுத்தே, அரசு சரணடையவுள்ள புலிகளின் பட்டியலை வழங்கும்படி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் அரசு கேட்டுக் கொண்டது. இருந்தும் பட்டியல் வழங்கப்படவில்லை. மாறாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு யுத்தக் களத்துக்குச் செல்வதற்கான அனுமதியைப் பெறுவதிலேயே அதிக கவனம் செலுத்தியது.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ-சி)

## பிரதம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதை அடுத்து புதிய நியமனம் வழங்கப்படுகிறது.

இதேவேளை, லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணையாளராக உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி எஸ். பால பட்டபெண்டியை நியமிக்கவும், பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராக பேராசிரியர் தயாசிரி பெர்னான்டோவை நியமிக்கவும் நடாளுமன்றச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இவர்களின் பெயர்களை ஜனாதிபதி சிபாரிசு செய்திருந்தார். அவற்றை நாடாளுமன்றச் சபை நேற்று அங்கீகரித்தது. (உ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புதிய தேற்றமொன்று பிறக்கிறது

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இதுவரை அரசாங்கம் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தினாலும், அதுவே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதி அல்ல. அரசாங்கம் தொடர்ந்து அந்த நிலைப்பாட்டிலேயே உள்ளது. ஆகையால் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் நாம் பேசுவோம்-

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்வைக்கும் நியாயமான கோரிக்கைகளைச் செவி மடுத்து அவற்றை நான் செயற்படுத்த முயற்சிப்பேன். ஆனால் புலிகளுக்கு தேவையானவற்றை எந்தக் கட்சி முன்வைத்தாலும் நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் -

இவ்வாறு ஊடகவியலாளருடன் செவ்வாய்க்கிழமை நடத்திய சந்திப்பில் வைத்து ஜனாதிபதி தெரிவித்தார்.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப் பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தி தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை, உகந்த தீர்வை வழங்குவது நாட் டின் தலைவர் என்ற வகையில் அவருக்குள்ள கடமையாகும்.

ஆனால் ஏற்கனவே, இந்த நாட்டின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் தமிழ்த் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழ் மக்களுக்குரிய, தமிழ் பேசும் மக்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை, வலுவான அதிகாரங்களை வழங்க இதுவரை வகைசெய்யப்படவில்லை.

சிங்கள அரசியல் தலைமைத்துவங்களின் பலவகைப் பாகுபாடுகள் நிறைந்த போக்கும், இனவாத நோக்கும், தமிழர்களை இரண்டாம்தர பிரசைகளாகவே எப்போதும் வைத்திருக்க வேண்டும் என்ற மேலாண்மைத் தனமுமே இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் தொடர்ந்து இந்த நாட்டை அர்க் கெடுத்தி வருவதற்கு மூலகாரணம்.

தமிழர்கள், தமக்கு இந்த நாட்டில் ஆட்சி அதிகாரத்தில் சமஅந்தஸ்து வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை முன்வைத்த போது, அதனை நிராகரித்து உதாசீனம் செய்த காலத்தில் இருந்து, சிங்கள அரசியல் தலைமைகள், தமிழ் மக்கள் பக்கத்தினால் முன்வைத்த வழங்கப்படக் கூடிய தீர்வு வடிவங்களை எல்லாம், நாங்கள் இந்த நாட்டின் பெரும்பான்மையினர் என்ற பலத்தைக்கொண்டு காலால் தட்டிவிட்டார்கள்.

அந்த வகை அரசியல் செருக்கின் விளைவே, சாத்வீக போராட்டங்கள் வெற்றிபெறாத இறுதிக்கட்டங்களில் வன்முறைப் போராட்டங்கள் வெடித்து, 2009 இறுதிப்போர் வரை வீச்சுக்கொண்டதற்கு அடிப்படைக் காரணம்.

சமசரத் தீர்வுகளுக்கான பேச்சுவார்த்தைகள் பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், ஜே.ஆர் - ராஜீவ் ஒப்பந்தம், பிரேமதாஸ - விடுதலைப் புலிகள் உடன்பாடு, ரணில் - விடுதலைப் புலிகள் போர் நிறுத்த ஒப்பந்தம் என்று பல வடிவங்களில் முகிழ்த்து எழும்பிய ஒப்பந்தங்கள் எந்த வகையிலும் முழுமைத்துவம் பெறாமல் பொய்யாய், பழங்கதைகள் ஆகிவிட்டன.

தமிழர்களின் உரிமைகளுக்கான, இதுவரையான அரசியல் பரிணாம மாற்றங்கள் அவர்களின் பிரிக்கமுடியாத உரிமைகளை வழங்கும் திசையில் சில மிகச் சிறு முன்னேற்றங்களுடன் முடங்கிவிட்டன.

இத்தகைய சூழ்நிலையிலேயே, பெரும் பிகுபண்ணி, மஹிந்த ராஜபக்ஷவின் முதலாம் தவணைக்குரிய பதவிக் காலத்தில்; அனைத்துக்கட்சி மாநாடு ஒன்று கூட்டப்பட்டு, சுமார் நான்கு வருட காலத்தின் பின்னர், தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அவர்களின் நியாயமான கோரிக்கைகளைத் தானும் வழங்க வல்லமைகுன்றிய நிலையில், அரசின் அடிப்பெட்டிக்குள் அமுங்கிப் போனமை அண்மைக்கால விழுக்காடு!

இத்தனைக்குப் பின்னர் தொடங்கப்பட்டிருப்பதே அரசு - தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு இடையேயான அரசியல் பேச்சுவார்த்தை. இனப்பிரச்சினைக்கு அர்த்தபுஷ்டியுள்ள தீர்வைக் கண்டறிவதற்கான முயற்சியில் இரண்டு தரப்புகளும் ஈடுபட்டிருக்கின்றன என்று நம்பத்தக்க வகையில் அது தொடங்கப்பட்டது.

நந்தவனத்தில் ஓர் ஆண்டி
அவன் நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டுவந்தான் ஒரு தோண்டி
அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி

- என்ற சித்தர் பாடலை நினைவு படுத்துகிறது அரசு - கூட்டமைப்பு பேச்சுவார்த்தையின் நிலை!

கடவுளே அதுவே முடிவாகி விடக்கூடாது என்பதே தமிழ் மக்களின் பிரார்த்தனை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி அல்ல என்ற ஒரு பெரிய குண்டைப் போட்டிருக்கிறார் நாட்டின் தலைவர். நாடாளுமன்றத்தில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களை பெரும் எண்ணிக்கையில் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே. ஆகப் பிந்தி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரே தமது ஏகப்பிரதிநிதிகள் என்று தமிழ் மக்கள் தீர்ப்பளித்து உள்ளனர். இவற்றுக்குப் புறம்பாக, கூட்டமைப்பினரே தமது ஏகப்பிரதிநிதிகள் என்று எடுத்துக் கூறுவதற்கு தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியாக வேறு என்ன செய்ய வேண்டும் என்று நாட்டின் தலைவர் எதிர்பார்க்கிறார்? கருதுகிறார்?

பல எலி சேர்ந்தால் புற்றெடுக்காது என்பது தமிழில் பேச்சு வழக்கு மொழி. கடந்த ஆட்சிக் காலத்தில் அனைத்துக்கட்சி மாநாடு சுமார் நான்கு வருடங்களாக நூற்றிமூன்று தடவைகள் (அப்பாடா!) கூடிக்கலைந்து கண்ட பலன் என்ன?

எல்லாத்தரப்புகளுடனும் பேசுவோம் என்று இப்போதும் தலைப்பாகை கட்டுவது அரசு விரும்பும் தனது சொந்தத் தீர்வை தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கான தந்திரோபாயமா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

தமக்குரிய உரிமைகள் வழங்கப்படவில்லை என்று தமிழர்கள் என்ன ஐக்கிய நாடுகள் சபையிடமா முறையிடமுடியும்?

தமிழ் மக்களின் சகல பிரதிநிதிகளுடனும் பேசியே குறிப்பிட்ட தீர்வுக்கு வந்தோம் எனக் கூறி தமதுசொந்தத் தீர்வை திணிப்பதற்கான உத்தியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏகப்பிரதிநிதிகள் அல்லர் என்ற யதார்த்தத்துக்கு புறம்பான அரச தலைவரின் தேற்றத்துக்கான மூலக்கால். அவ்வளவே.

# அரியாலையில் தொடரும் மண் அகழ்வை நிறுத்த நடவடிக்கை எடுக்கக்கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 13

அரியாலை மணியம்தோட்டப்பகுதியில் மண் அகழ்வது தடைசெய்யப்படவேண்டும் என்று அப்பகுதி மக்கள் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நல்லூர்ப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலே மேற்படி கோரிக்கையை மக்கள் அமைச்சரிடம் முன்வைத்தனர்.

மேலும் சட்ட விரோதமாக மண் எடுக்கப்படுவதை நாங்கள் எவருமே விரும்பவில்லை. மண் அகழ்வினால் எமது வளங்கள், விவசாய உற்பத்திகள் பாதிக்கப்படுவதாகவும் இந்தப் பகுதியில் மண் அகழ்வதை முழுமையாக தடைசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் கோரினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மணல் எடுப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து தான் உணர்வதாகவும் இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவும் உரியவர்களுடன் தொடர்புகொள்வதாகவும் தெரிவித்தார். (எ-7)

# போதையில் 'ரகளை' செய்த நபருக்கு 3 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், மே 13

மதுபோதையில் நின்று வீதிப்போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த நப ருக்கு யாழ். நீதிமன்றம் 3 ஆயிரம் ரூபா அப ராதம் விதித்தது.

கடந்த 10 ஆம் திகதி உரும்பிராய் வீதியில் மாலைநேரம் மது போதையில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தும் பாதசாரிகளை அவதூறான வார்த்தைகளால் பேசியும் ரகளை புரிந்த நபரைக் கைது செய்த கோப்பாய் பொலிஸார் யாழ். நீதி மன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்த னர்.

வழக்கை விசாரணைசெய்த யாழ். மேலதிக நீதிவான் ஏ. பிரேம்சங்கர் குறித்த நபருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

புகையிரத வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த ஆர். குகநேசன் என்பவருக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (ம-9)

# கல்வியியற் கல்லூரி 'ராகிங்' வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 13

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற ''ராகிங்'' விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை அடுத்த மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் ஆங்கிலமொழி மூலமான பாடநெறிக்கு புதிதாக இணைக்கப்பட்ட புகுமுக மாணவர்கள் மீது முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் மேற்கொண்ட ''ராகிங்'' கலாட்டாவையடுத்து அங்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் 15 பேரைக் கைது செய்து யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தியிருந்தனர்.

யாழ். மாவட்ட நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா மூன்று கட்ட விசாரணைகளை மேற்கொண்டதுடன் நான்காம் கட்ட விசாரணைகளுக்காக நேற்று வழக்கை ஒத்திவைத்திருந்தார்.

நேற்றைய தினம் குறித்த 15 முகிழ் நிலை ஆசிரியர்களும் விசாரணைகளுக்கு சமுகமளித்திருந்தபோதும் யாழ். மாவட்டபதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ம-9)

## சிறுவர் விளையாட்டுக்களில் இறை சிந்தையை வளர்ப்போம்

ஞானக்கதிர்

சிறுபிள்ளைகள் விளையாட்டுக்களில் அதிக விருப்புடையவர்கள். இவர்களுடைய இயல்பு ஊக்கத்துக்கேற்ப விளையாட்டுக்களில் ஈடுபட வழிப்படுத்த வேண்டியது பெரியவர்களின் பொறுப்பாகும்.

பிள்ளைகளின் விளையாட்டு நாட்டத்தை அடிப்படையாக வைத்தே தமிழில் பிள்ளைத் தமிழ் பாக்களைப் பாடினர். பிள்ளைத் தமிழ்ப் பருவங்கள் பெரும்பாலும் விளையாட்டுக்குரிய பெயர்களாலேயே சுட்டப்படுகின்றன. நிலாவைப் பார்த்து இரசித்து விளையாடும். பருவம் அம்புலி. சிறுபறை அடித்து அனுபவிக்கும் பருவம் சிறுபறை கழற்சிக்காயைக் கொண்டு விளையாடும் பருவம் கழங்கு. இவ்வாறே சிற்றில், சிறுதேர், அம்மானை, ஊசல் என்ற பெயர்களும் ஏற்பட்டன.

விளையாட்டின் போதும் இறை நாட்டத்தை ஏற்படுத்துதல் எதிர்கால வாழ்வியலின் ஏற்றத்திற்கு வழிப்படுத்தும் பக்தி இயக்கத்தின் மூலவராக கொள்ளத்தக்க காரைக்கால் அம்மையாரின் சிறுபராயம் பற்றிக் குறிப்பிடும் சேக்கிழார்

''வண்டல பயில்வன எல்லாம் வளர்மதியும் புனைந்த சடை
அண்டர் பிரான் திருவார்த்தை அணைய வருவன பயின்று....''
எனக் காட்டுகிறார்.

வண்டல் என்பது சிறு குழந்தைகள் விளையாடும் ஒரு வகை விளையாட்டாகும். இந்த விளையாட்டில் கூட கோயில் கட்டி விளையாடும் பழக்கத்தை அம்மையார் கொண்டிருந்தார். வாய் திறந்து வார்த்தைகளைப் பேசும் போது இறைவனைப் பற்றியே பேசினார். இவையே இறை சிந்தையுடனான வாழ்க்கைக்கு அம்மையாரை வழிப்படுத்தின.

சமயப் பழக்கங்கள் சிறு பிள்ளைப் பராயத் திலிருந்தே ஊட்டப்பட வேண்டியன. பிள்ளைகளைக் கோயிலுக்கு அழைத்துச் செல்வதும் இறை தரிசனம், பெரியோர் தரிசனம் மேற்கொள்ள வழிப் படுத்துவதும் சிறு பராயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியவையாகும்.

சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்களைத் தேர்வு செய்யும்போது அவர்களது மூளை விருத்திக்கு அவை உகந்தவையா என அறிவு பூர்வமாகச் சிந்திக்கும் பெற்றோர் பலர் உளர். கோயில் பழக்கம், சமய உணர்வுகள் என இவற்றையும் பயிற்றுவிக்கக் கூடிய வகையில் சிறு பிள்ளைகளை வழிப்படுத்துவது நல்லதல்லவா?

சிற்றாடை உடுத்துச் சிறுகோயில் கட்டி மட்டில்லா மகிழ்வுறும் மழலைகள் நம் மண்ணில் துளிர்க்கட்டும்.

ச. லலீசன்
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலாளரின் சுதந்திரத் தொழிலுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டியது அவசியம்

**மே தினக் கூட்டத் தீர்மானத்தில் தமிழரசுக் கட்சி**

யாழ்ப்பாணம், மே 13

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் எமது பகுதிக் கடற்றொழிலாளர்கள் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் நீக்கப்படவில்லை. கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தொழிலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட வேண்டியது அவசியம்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மேலும்வருமாறு:

✱ விசம் போல் ஏகிறி வரும் வாழ்க்கைச் செலவால் நாட்டின் முழு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் அவற்றைச் சமாளிக்க முடியாத நிலையிலும் உள்ளனர். குறிப்பாக, உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தினர் இதனால் மிகவும் பாதிக்கப்பட் டுள்ளனர். உழைப்பில்லாமல், நிவாரணம் இல்லாமல் அகதிகளாக உள்ள மக்களின் நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட வேண்டும்.

✱ வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் அடிப்படையில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படல் வேண்டும். அதிலும் தேர்தல் காலத்தில் அரசு வாக்குறுதி அளித்தபடி அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்.

✱ ஜனாதிபதி செயலகம் மற்றும் ஓய்வூதியப் பணிப்பாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2006ஆம் ஆண்டின் சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் மீளாய்வு செய்ய வேண்டும் என அரசிடம் கோருகின்றோம்.

✱ யுத்த காலத்திலும் கல்விச் செயற்பாடுகளைச் சீர் குலைக்காமல் செயற்பட்ட பெருமைக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமும் பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா சமூகமும் அந்தப் பெருமையைத் தொடர்ந்து பேண வேண்டும். அந்த வகையில் தற்போது எழுந்துள்ள கருத்து வேறுபாட்டை சுமுகமாகப் பேசித் தீர்க்க வேண்டும். கல்விச் செயற்பாடுகள் தடங்கலின்றியும் அச்ச சூழ்நிலை எதுவுமின்றியும் புரிந்துணர்வுடன் தொடர நடவடிக்க எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

✱ யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகள் தமது விவாசாய நடவடிக்கைகளைத் திருப்தியாக மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களை இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இடைத்தரகர்களின் சுரண்டல்களின்றித் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப் படுத்துவதற்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும்.

✱ யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குக் கடற்பகுதிகளிலும் கிழக்குப் பகுதியான வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவு கடற்பகுதிகளிலும் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதால் எமது பகுதி கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. அத்துடன் கடல்வளமும் பாதிக்கப்படுகிறது. இது மிகவும் கவலைக்குரியதாகும்.

எனவே, கடற்றொழிலாளர் அமைப்புகளுடன் இலங்கை - இந்திய அரசுகள் கலந்தாலோசித்து இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தவிர்க்க வேண்டும். கட லில் மீனவர்கள் சுதந்திரமாக உயர் சக்தி வாய்ந்த படகுகளிலும் மீன் பிடிக்கக் கூடியதாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

✱ யுத்தம் முடிவடைந்த நிலையிலும் எமது பகுதி கடற்றொழிலாளர்கள் மீதான மீன்பிடிக் கட்டுப்பாடுகள் இன்னும் அமுல் படுத்தப்படுவது நீக்கப்பட வேண்டும். அவர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்யும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

மேலும், இந்திய மீனவர்கள் மற்றும் தென்னிலங்கை மீனவர்கள் தமது தொழிலுக்காகப் பல நாள்கள் படகுகளைப் பாவிக்கும் உரிமை எமது மீனவ சமூகத்துக்கும் வழங்கப்பட வேண்டும் எனக் கோருகின்றோம்.

✱ கள் உற்பத்தியில், ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அவர்கள் திறமைக்கு ஏற்பக் கேட்கப்படுகின்ற பனை தென்னைகளிலிருந்து கள் இறக்குவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

ஊற்றுக் கள்ளு கழிக்கப்ப டக் கூடாது. முழுக் கள்ளும் அடைத்து விற்பனை செய்ய வேண்டும். பனை, தென்னை மூளவளத்தினால் வருகின்ற வருமானத்தின் இலாபத்தில் உற்பத்தியாளர்களுக்கு, தொழிலாளர்களுக்குப் பங்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அந்த மக்களுக்கான நலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

## கழிவு நீர்க் கால்வாய் புனரமைப்பு


யாழ்ப்பாணம், மே 13

பாசையூர் அந்தோனியார் ஆலய மைதானத்துக்கு அருகில் செல்லும் பிரதான கழிவு நீர் கால்வாய் புனரமைப்புச் செய்யப் படுகின்றது.


இந்தக் கால்வாய் நீண்டகாலமாகச் சேதமடைந்து கழிவுநீர் செல்வதில் தடையேற்பட்டு தேங்கி நின்றது. இதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவியது.

இவற்றைக் கருத்தில் கொண்டு இந்தப் பகுதி மாநகர சபை உறுப்பினர்கள் எடுத்த நடவடிக்கையால் புதிய கால்வாய் அமைக்கப்பட்டு வருவதாக மக்கள் தெரிவித்தனர். (ம-135)

## ஆலயத் திருக்காட்சிகள்



யாழ்.வண்ணை காமாட்சி (நாச்சிமார்) அம்மன் ஆலயப் பூங்காவனத் திருவிழாவில் சுவாமி வீதியுலா வருகிறார். (ம)



சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் சப்பரத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சுவாமி சப்பரத்தில் வீதியுலா வருகின்றார். (ம-86)



அராலி கிழக்கு ஆவாரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலய இராஜகோபுர குடமுழுக்கு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ம-86)

## சுயதொழில் பயிற்சிக்கு அலுவலகம் திறப்பு

யாழ்.மாவட்டப் பெண்களுக்கான சுய தொழில் பயிற்சித் திட்டத்துக்கான அலுவலகம் சங்கானையில் ஆரம்பித்து வைக்கப்பட வுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் தேசிய அருங்கலைகள் பேரவையும் இஷாரா பெஷன் ஆடை நிறுவனமும் இணைந்து நடத்தும் இந்த செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.48 மணிக்கு பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அமைச்சர் [illegible] தலைமையில் நடைபெற வுள்ளது.

தேவை



பக்கவடிவமைப்பாளர்
Pagemaker
குறைந்தது 2 வருட அனுபவம்

கணினித் தட்டெழுத்தாளர்
Typesetter
அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது

கணினி வரைகலைஞர்
Graphics Designer
குறைந்தது 2 வருட அனுபவம்

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Email : uthsajevi@gmail.com
விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி இன்று 13.05.2011
(பொருத்தமானவர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச தரப்பில் நடத்தப்படும் அனைத்து வன்செயல்களையும் உடன் நிறுத்துக

## நிபுணர்குழு பரிந்துரைகளில் இதுவும் ஒன்று

கொழும்பு,மே13

அரசால் மேற்கொள்ளப்படும் அனைத்து வன்செயல்களும் நிறுத்தப்பட வேண்டும் என்று ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் இரண்டாவது பரிந்துரையாகப் 'பொறுப்புக் கூறலை முன்நகர்த்துவதற்கான ஏனைய உடனடி நடவடிக்கைகள்' என்ற தலைப்பில் வரும் பரிந்துரைகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

அ.வன்னியில் பலியானவர்கள் மற்றும் உயிர் தப்பியவர்கள் அனைவரதும் கௌரவம் மற்றும் உரிமைகளை அங்கீகரிக்கும் விதத்தில் பின்வரும் குறுகியகால நடவடிக்கைகளை இலங்கை அரசு செயற்படுத்த வேண்டும்.

1.அரசால் மேற்கொள்ளப்படும் சகல வன்செயல்களும் முடிவுக்கு வரவேண்டும்; அதன் துணைப் பகுதிகள் மற்றும் சகல ஆயுதக் குழுக்கள், அரசின் சார்பில் செயற்படும் அல்லது அரசால் சகித்துக் கொள்ளப்படும் அனைத்தினதும் வன்செயல்களும் நிறுத்தப்பட வேண்டும்.

2.எஞ்சியிருக்கும் மனித எச்சங்கள் அனைத்தையும் தேடிக் கண்டுபிடிக்க உதவி புரிந்து மீளப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்ய வேண்டும். இறந்தவர்களுக்கான கலாசார சடங்குகளை நிறைவேற்றிக்கொள்ள உதவ வேண்டும்.

3.குடும்ப உறுப்பினர்கள் மேற்கொண்டு விசாரணைகள் நடத்தக் கேட்கும்போதும் சிவில் உரிமைகள் தொடர்பாகவும் பேரங்கள் பேசாமல் கட்டணம் இன்றி மரியாதையுடன் விரைவாக இறந்தவர்களுக்கும் காணாமற்போனவர்களுக்குமான சான்றிதழ்களைக் கேட்கும்போது வழங்க வேண்டும்.

4.உயிருடன் இருக்கின்ற அனைவரதும் கலாசார விழுமியங்கள் மற்றும் பாராம்பரிய வழக்கங்களுக்கு மதிப்பளித்து அவர்களுக்கு மனவள சமூக ஆதரவை அல்லது அனுசரணையை வழங்க வேண்டும்.

5.இடம்பெயர்ந்த அனைவரையும் விடுவித்து தமது முன்னைய வீடுகளுக்குத் திரும்ப உதவ வேண்டும். அல்லது அவர்களின் விருப்பத்துக்கு ஏற்ப மீளக் குடியமர்வுக்கு அனுசரணை வழங்க வேண்டும்.

6.உயிர்தப்பியுள்ள அனைவரும் மாமூல் வாழ்க்கைக்குத் திரும்புகையில் உதவுவதற்கு இடைக்கால நிவாரணங்களைத் தொடர்ந்து வழங்க வேண்டும்.

ஆ.வலுக்கட்டாயமாகக் காணமல் போகச் செய்யப்பட்டவர்கள் என்று கூறப்படும் நபர்களின் இருப்பிடங்கள் மற்றும் அவர்களுக்கு நேர்ந்த கதி தொடர்பாக இலங்கை அரசு புலனாய்வு செய்து வெளியிட வேண்டும்.

இதுதொடர்பாகப் பலவந்தமாக மற்றும் தன் முனைப்பின்றி காணாமற் போனவர்கள் தொடர்பாகத் தொழிற்படும் (சர்வதேச) குழுவினை இலங்கைக்கு வருகை தருமாறு இலங்கை அரசு அழைக்க வேண்டும்.

### அவசரகாலம் உடன் ரத்தாக வேண்டும்

இ. நாட்டில் இன்றுள்ள அரசியல் நிலைமையில் இலங்கை அரசானது அவசரகால சட்ட விதிகளை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும். மற்றும் இலங்கையின் சர்வதேசக் கடப்பாடுகளுக்கு மாறாகக் காணப்படும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் சகல பிரிவுகளையும் திருத்தியமைக்க வேண்டும். மேலும் விடுதலைப்புலிகள் எனச் சந்தேகத்துக்குரியவர்கள் மற்றும் இந்த விதமாக ஏனைய சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவர் தொடர்பாகவும் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1.இப்பொழுது தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரது பெயர்களையும் வெளியிடல், அவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருந் தாலும் அவ்வாறு தடுத்து வைத்திருப்பதற்கான சட்ட அடிப்படையை அவர்களுக்கு அறிவித்தல்.

2.தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் தம் குடும்பத்தவர்களையும் சட்டத்தரணிகளையும் சந்திப்பதை வழமையாக்குதல்.

3.அவ்வாறு தடுத்து வைப்பதற்குக் கூறப்படும் நியாயவாதத்தை நீதிமன்றத்தில் எதிர்த்து வாதாட அவர்களை அனுமதித்தல்.

4. பாரதூரமான குற்றமிழைத்தவர்கள் என்பதற்குப்போதுமான ஆதாரமுள்ளவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல், ஏனையவர்களை விடுவித்தல். மேற்கொண்டும் அவர்களைத் துன்புறுத்தாமல் சமூகத்தில் மீளவும் ஒன்றிணைவதற்கு அனு மதித்தல்.

5.அரச வன்முறைகள் மற்றும் நடமாடும் சுதந்திரம், கூட்டம் நடத்துதல், கருத்து வெளிப்பாடு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அல்லது பீதி நிலைக்கு வழி செய்யும் அனைத்தையும் அரசு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். (ப)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 13

புலோப்பளை அறத்தி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழமைபோல் நடைபெறவுள்ளது. (ற-313)

***

யாழ்ப்பாணம், மே 13

தென் மட்டுவில் வேரங்கேணி கந்தசுவாமி கோயிலின் தேர்த்திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (313)

## விநாடிவினா போட்டிகள்

தென்மராட்சி, மே 13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் - 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்பு மாணவர்களுக்கான வலய மட்ட கணித விநாடி வினாப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

தமிழ்-ஆங்கில மொழி மூலம் போட்டிகள் நடத்தப்படவுள்ளன எனவும் மாணவர்களுக்குரிய போட்டி சுட்டெண்களை வலய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-207)

## ஊக்குவிப்பு...



முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு 300 துவிச்சக்கர வண்டிகளும் மாவட்ட கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கென 7 மோட்டார் சைக்கிள்களும் வடமாகாண சபையின் நிதியுதவியுடன் அண்மையில் வழங்கப்பட்டன. கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, மாணவன் ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி ஒன்றை வழங்குகிறார். வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் இரவீந்திரன் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவருக்கு மோட்டார் சைக்கிளுக்கான பத்திரத்தைக் கையளிக்கிறார். (14)

# வலி.வடக்கில் மீளக்குடியமர்ந்தோர் காணித் துப்புரவுக்குக் கொடுப்பனவு

## பரப்புக்கு 950 ரூபா வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 13

வலி.வடக்கில் கடந்த வாரம் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் வளவுகளைத் துப்புரவு செய்ய பரப்பொன்றுக்கு 950 ரூபா வழங்கப்படவுள்ளது.

வலி.வடக்குப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வறுத்தலைவிளான், மாவிட்டபுரம், தெல்லிப்பழை ஆகியன உட்பட 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள பகுதிகளில் மக்கள் போக்குவரத்துச் செய்வதற்குரிய முறையில் பாதைகளில் அடர்ந்து படர்ந்துள்ள பற்றைகளைத் துப்புரவு செய்கின்ற பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

அடுத்த கட்டம் குடியிருப்பாளர்களின் காணிகளைத் துப்புரவு செய்வதற்குத் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பரப்பொன்றுக்கு 950 ரூபா வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது காணிகளைத் துப்புரவு செய்ய விரும்புபவர்களின் உரிய விவரங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

## நிபுணர் குழு அறிக்கையை எதிர்த்து

# மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளில் பிரேரணை நிறைவேற்றுவது கேலிக்கூத்து

## ஐக்கிய தேசியக் கட்சி சாடுகிறது

கொழும்பு, மே 13

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை ஆங்கில மொழியில் அனுப்பிவைத்து அதற்கு எதிராக பிரேரணை ஒன்றை நிறைவேற்றும்படி அரசு மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது. இருந்தும், இந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு முன் வைக்கவில்லை - இப்படி ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கின்றது.ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது.இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐ.தே.கவின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிபுணர் குழு அறிக்கையை சிங்களத்தில் மொழிபெயர்த்து அதனை ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்காது, அதற்கு எதிராக பிரேரணை நிறைவேற்ற முனைவது கேலிக்கூத்தாகும். அந்த அறிக்கையில் உள்ளவைகளை முழுமையாக வாசித்தவர் யார்? தமிழிலும், சிங்களத்திலும் அறிக்கையை மொழிபெயர்ப்பு செய்து, ஊடகங்களில் வெளியிடப்படாதது ஏன்?

அறிக்கையில் என்ன இருக்கிறது என்று தெரியாது நாட்டு மக்களிடம் கையெழுத்து பெறுதல், மாகாண, உள்ளூராட்சி சபைகளில் பிரேரணை நிறை வேற்ற முயற்சித்தல் முட்டாள்தனமானது அல்லவா?

அதனால் நிபுணர்குழு அறிக்கையை உடனடியாக சிங்களத்தில் மொழிபெயர்ப்பு செய்து வெளியிட்டு, அது தொடர்பாக பேச்சு நடத்துமாறு அரசுக்கு வலியுறுத்தல் விடுக்க வேண்டும் என அனைத்து நாடாளுமன்ற, மாகாண, உள் ளூராட்சி சபை உறுப்பினர்களிடமும் மக்களிடமும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு சந்தர்ப்பத்தில் நிபுணர் குழு அறிக்கையை நிராகரிப்பதாகக் கூறும் அரசு, இன்னொரு சந்தர்ப்பத்தில் அந்த அறிக்கைக்கு தெளிவுபடுத்தலை வழங்க எதிர்பார்க்கின்றது. இதன் மூலம், நிபுணர் குழு அறிக்கையை நியாயப்படுத்த அரசு முயற்சிக் கின்றமை புலப்படுகின்றது.

இலங்கையையும், இந் நாட்டு இராணுவத்தையும் யுத்தக்குற்றச்சாட்டிலிருந்து முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினால் மட்டுமே காப்பாற்ற முடியும். அவராலேயே இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் பதிலளிக்க முடியும்.- என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனக் கல்லூரியில் படையினர் 3 மாடிக் கட்டடம் அமைக்கின்றனர்

## கோத்தபாயவின் நண்பர்களின் நிதி உதவியுடன்

யாழ்ப்பாணம், மே 13

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் மூன்று மாடிக் கட்டடம் அமைக்கும் பணியில் படையினரின் பொறியியல் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் நண்பர்கள் உதவிய 25 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்படுகிறது.

14 வகுப்பறைகள் மூன்று மாடிகளிலும் 'பவிலியன்' இரண்டு மாடிகளைக் கொண்டதாகவும் இந்தக்கட்டடத் தொகுதி அமைகின்றது.

193 அடி நீளமும் 25 அடி அகலமுமான இந்தக் கட்டட நிர்மாணப் பணிகளை குடாநாட்டில் பணியாற்றும் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். தினமும் 40 படையினர் இந்தப் பணியில் ஈடுபடுகின்றனர்.

கடந்த மார்ச் மாதம் ஆரம்பமான கட்டடப் பணிகள் ஆறு மாத காலத்தில் பூர்த்தியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.



இந்தக் கட்டடம் அமையும் இடத்தில் கல்லூரியின் மாணவர் விடுதி அமைந்திருந்தது. கடந்த கால இராணுவ நடவடிக்கையால் இந்தக் கட்டடம் அழிவடைந்தது. அந்த இடத்தில் வகுப்பறைகள் கொண்ட கட்டடம் அமைக்கப்படுகின்றது.

இந்தக் கட்டடம் அமைக்கும் பணிகளைப் படையினரின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்கள் நேற்றுப் பார்வையிட்டனர்.

பலாலி படைத் தலைமையக ஊடகத் துறைப்பொறுப்பாளர் மேஜர் மல்லவராட்சி, 515 ஆவது படையணியின் சிவில் நிர்வாக அதிகாரி லெப்.கேணல் அநுர எக்கநாயக்க ஆகியோர் இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

கல்லூரியின் உப அதிபர் எம்.மணிசேகரன் தகவல் தருகையில்:

அமைக்கப்பட்டுவரும் கட்டடத்தின் நடுவில் 'பவிலியன்' அமையும். இருபக்கங்களிலும் வகுப்பறைகள் அமைக்கப்படும். ஒரு பக்கத்தில் அழகியல் கூடம் அமையும் - என்றார் அவர். (ஐ)

# யாழ்.நகரில் மும்முரமாக வெசாக் அலங்காரம்

கொழும்புத்துறை, மே 13

வெசாக் பண்டிகையை முன்னிட்டு யாழ்.நகரில் வெசாக் பந்தல்கள், வெளிச்சக்கூடுகள் புத்தரின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் காட்சிகள் என்பவற்றை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

கடந்த ஆண்டு வெசாக் கொண்டாட்டத்தின் போது யாழ். பொது நூலக சூழலில் அமைக்கப்பட்ட அலங்காரங்கள், பந்தல்கள் போன்ற வடிவமைப்புக்கள் இந்தமுறையும் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 17ஆம், 18 ஆம் திகதிகளில் வெசாக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த அலங்கார வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆரியகுளம் நாக விகாரைப் பகுதி மற்றும் குடாநாட்டின் இராணுவ நிலைகள், பிரதான சந்திகளில் வெசாக் பந்தல்கள், வெளிச்சக்கூடுகள், வர்ண விளக்கு அலங்காரங்கள் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (ம-135)

# நல்லூர் பிரதேச சபையின் நூலக வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 13

நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தின் நூலக வார நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

தொடர்ந்து எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளில் கட்டுரைப்போட்டி, பொது அறிவுத் தேடல் போட்டி, சஞ்சிகை ஆக்கப்போட்டி என்பன நடைபெறவுள்ளன.

ஆர்வமுடையவர்கள் கோண்டாவில் பொது நூலகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிகத் தகவல்களைப் பெறமுடியும் என பொது நூலகர் செல்வி கே.அனிதா அறிவித்துள்ளார். (ம-313)

# சிட்டிவேரம் ஆலயத்திருவிழாவில் கேளிக்கை நிகழ்வுகளுக்குத் தடை

தென்மராட்சி, மே 13

வரணி, சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய இந்த வருட பெருந் திருவிழாவின் போது கேளிக்கை நிகழ்வுகள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருவிழாக்கள் காலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திருவிழா உபயகார்கள் விரும்பினால் பகல் வேளை சமயம் தொடர்பான ஆன்மிக நிகழ்வுகள் நடத்தலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆலய பெருந்திருவிழா தொடர்பாகத் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவுகள் எடுக்கப்பட் டுள்ளன.

உற்சவ காலத்தில் ஆலய சுற்றாடலில் மது போதையில் காணப்படுவோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

ஆலயப் பெருந் திருவிழா எதிர்வரும் 16 ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 29ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுபெறும். (ம-207)

# சர்வதேச தாதியர் தின நிகழ்வுகள் நேற்று உணர்வு பூர்வமாக இடம்பெற்றன

யாழ்ப்பாணம், மே 13

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு யாழ்.தாதியர் கல்லூரியில் தாதியர் தினம் நேற்றைய தினம் கொண்டாடப்பட்டது.

தாதியர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு தாதியர் கல்லூரி மண்டபத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

தாதிய உத்தியோகத்தராக முன்னேறி உன்னத தொழிலாகப் பேற்றப்படுவதற்குக் காரணமாக இருந்த ''தீபமேந்திய சீமாட்டி'' என்று அழைக்கப்படும் செல்வி புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையாரை நினைவுகூர்ந்து நன்றி செலுத்தும் முகமாகவும் தாதியரைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாகவும் அவரது பிறந்ததினமாகிய மே மாதம் 12 ஆம் திகதி சர்வதேச தாதியர் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில், நேற்றைய தினம் யாழ்.தாதியர் கல்லூரியில் இந்த நிகழ்வு தாதிய மாணவர்களால் கொண்டாடப்பட்டது.




இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா, செயலாளர் பிரசாத், தாதிய பரிபாலகி திருமதி வி.கருணாகரன், வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர், சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அனைவரும் கையில் தீபமேந்தி நைற்றிங்கேல் வாக்குறுதி நிறைவேற்றி நிகழ்வை ஆரம்பித்தனர். நிகழ்வில் தாதிய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ம-4)

# யாழ்.பிரதேச செயலர் பிரிவில் 1,328 குடும்பங்கள் குடியமர்வு

## வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள்

யாழ்ப்பாணம், மே 13

வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த ஆயிரத்து 328 குடும்பங்கள் யாழ். பிரதேச செயலர் பிரிவிலுள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகளில் இதுவரை மீளக்குடியமர்ந்துள்ளன.

பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின்போதே பிரதேச செயலர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இதுவரையும் ஆயிரத்து 328 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 631 அங்கத்தவர்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாம்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு மீளக் குடியமர்த்தப்பட்டவர்களாவர்.

முகாம்களில் இருந்து இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மீளக்குடியமர்ந்தவர்களுக்கான 5 ஆயிரம் ரூபா உதவிப் பணம் ஆயிரத்து 501 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 21 குடும்பங்களுக்கு அது வழங்கப் படவேண்டியுள்ளது.

20 ஆயிரம் ரூபா ஆயிரத்து 738 குடும்பங்களுக்கு வழங்கப் பட்டது. இன்னமும் 10 குடும்பங்களுக்கு அது வழங்கப்படவேண்டும். 25 ஆயிரம் ரூபா ஆயிரத்து 543 குடும்பங்களுக்கு வழங்கப் பட்டது. அந்தத் தொகை 111 குடும் பங்களுக்கு இன்னமும் வழங்கப்படவேண்டும்.

யு.என்.எச்.சி.ஆர்.நிறுவனத்தின் உணவு அல்லாத பொருள்கள் ஆயிரத்து 332 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 156 குடும்பங்களுக்கு அது வழங்கப்படவேண்டியுள்ளது. [illegible] நிறுவனத்தின் உணவு அல்லாத பொருள்கள் ஆயிரத்து 653 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தகரக் கூரைகள் 374 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. 80 குடும்பங்களுக்கு அது வழங்கப்பட வேண்டியுள்ளது. சிமெந்து 680 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 198 குடும்பங்களுக்கு வழங்கப் படவேண்டியுள்ளது.

தற்காலிக குடியிருப்புக்கள் 151 குடும்பங்களுக்கும் துவிச்சக்கர வண்டி 100 குடும்பங்களுக்கும் சிக்கன அடுப்பு 211 குடும்பங்களுக்கும் விவசாய உபகரணங்கள் 100 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-14-9)

# சிறுதானியப் பயிர்கள் பாதிப்பு

வரணி, மே 13

வரணி இடைகுறிச்சி பிரதேசத்தில் மாவில் வயலில் விவசாயிகளால் பயிரிடப்பட்ட சிறுதானியப் பயிர்கள் மழை வெள்ளம் காரணமாகப் பாதிப்படைந்துள்ளன.

கடந்த பெரும்போக நெல் அறுவடையின் பின் விவசாயிகள் ஒன்று சேர்ந்து பயிரிடப்பட்ட சிறுதானியப் பயிர்களே இவ்வாறு மழை வெள்ளம் காரணமாக அழிவடைந்துள்ளதாக மேற்படி பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் 56 ஆயிரத்து 870 பேர் மீளக்குடியமர்வுக்காகக் காத்திருக்கின்றனர்

## யாழ்.அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், மே 13

யாழ்.மாவட்டத்தில் இன்னும் 56 ஆயிரத்து 870 பேர் மீளக் குடியேற்றத்துக்காகக் காத்திருக் கின்றனர் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுத் தரவுகளின் அடிப்படையில் மேற் குறித்த தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

குடாநாட்டில் தற்போது மீளக் குடியமர்வுகள் இடம்பெறுகின் றன. இந்த நிலையில் வேல ணைப் பிரதேச செயலர் பிரி வில் 93 குடும்பங்களைச் சேர்ந்த 376 பேரும், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், காரைநகர்ப் பிரதேச செயலர் பிரிவில் 114 குடும்பங் களைச் சேர்ந்த 350 பேரும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 872 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 399 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரி வில் 648 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 584 பேரும், சண்டிலிப்பாய்ப் பிரதேச செய லர் பிரிவில் 228 குடும்பங்களைச் சேர்ந்த 737 பேரும் மீளக்குடிய மர்வதற்காகக் காத்திருக்கின்றனர்.

சங்கானைப் பிரதேச செய லர் பிரிவில் 660 குடும்பங் களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 551 பேரும், உடுவில் பிரதேச செய லர் பிரிவில் 189 குடும்பங் களைச் சேர்ந்த 698 பேரும், தெல்லிப்பழைப் பிரதேச செய லர் பிரிவில் 9 ஆயிரத்து 884 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 359 பேரும், கோப் பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 464 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 589 பேரும், சாவகச் சேரி பிரதேச செயலர் பிரிவில் 616 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 167 பேரும் காத்திருக் கின்றனர்.

பருத்தித்துறை பிரதேச செய லர் பிரிவில் 110 குடும்பங் களைச் சேர்ந்த 350 பேரும், மருதங்கேணி பிரதேசசெயலர் பிரிவில் ஆயிரத்து 606 குடும் பங்களைச் சேர்ந்த6 ஆயிரத்து 669 பேரும் என 15 ஆயிரத்து 495 குடும்பங்களைச்சேர்ந்த 56 ஆயிரத்து 870 பேர் மீளக் குடியமர்வுக்குக் காத்திருக்கின் றனர்.

இவர்கள் கட்டம் கட்டமாக காலக்கிரமத்தில் தத்தமது பகுதிகளில் மீளக்குடியமர்த்தப் படவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 13

வங்கியியல் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற இளம் வங்கியாளர்களைக் கௌரவிக் கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதி யில் உள்ள உயர்பட்டப்படிப்புகள் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி யின் ஆளுநர் சபையும் கே.சிவ கணநாதன் நினைவு நிதியமும் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள இந்த நிகழ்வில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி ஆகியவற்றில் இருந்து பலர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபைத் தலைவர் பேராயர் கலாநிதி டானியல் தியாகராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலாநிதி அருள் சிவகணநாதன் கலந்து கொள்வார். (ம-313)

# தந்தை கொல்லப்பட்டிருக்கலாம்; சந்தேகம் வெளியிடுகிறார் மகன்

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணம் பேருந்து நிலை யத்தில் கடந்த மாதம் 8 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட அன்ரனி டேவிட் (வயது - 67) என்பவர் கொல்லப்பட்டிருக் கலாமென அவரது மகன் சந்தேக மெழுப்பியுள்ளார்.

தனது தந்தை சடலமாக மீட் கப்பட்ட போது அவரிடமிருந்த கைத்தொலைபேசி காணாமல் போயிருந்ததாகவும், அவரது கைப்பை கைபிடி அறுந்திருந்த தாகவும் கூறும் அவரது மகன் டெனிஸ், இது தனக்குச் சந் தேகத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

தனது தகப்பனுக்கும் தகப் பனின் சகோதரர்களுக்குமிடையே காணி தொடர்பான தகராறு இருந் ததாகவும் தனது தகப்பனின் சகோதரர்களுக்கு தகப்பனின் மரணத்துடன் தொடர்பு இருப் பதாகவும் தான் சந்தேகப்படுவ தாகக் கூறும் மகன் டெனிஸ், பிடரியில் காயம் காணப்படுவ தால் தகப்பனின் மரணம் கொலை யாக இருக்கலாமெனப் பிரேத பரிசோதனை செய்த மருத்து வரும் சந்தேகம் வெளியிட்டுள்ள தாகவும் தனது தந்தையின் மரணம் கொலை என்றே தான் நம்புவதாகவும் கூறுகிறார்.

தந்தையின் மரணத்தில் சந் தேகம் இருப்பதாக ஏப்ரல் 9 ஆம் திகதி அன்று தான் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த தாகவும், பொலிஸார் இதுவரை தனது முறைப்பாடு தொடர்பாக எது வித நடவடிக்கையும் எடுக்க வில்லையெனவும்டெனிஸ்கவலை தெரிவித்துள்ளார். (த-120)

## கல்விக்காக...




*அறிவூட்டல்: ''ஒழுங்கான சமுதாயத்தின் வழிகாட்டிகள் மாணவர்கள்'' என்னும் தலைப்பில் யாழ் மகளிர் அபிவிருத்தி நிலையம் யாழ்.வைத்தீஸ்வராக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேற்று நிபுணர் கலாநிதி டாக்டர் பவானி, கல்லூரியின் அதிபர் கு.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் உரையாற்றுகின்றார். விருந்தினரும் மாணவரும் அமர்ந்திருக்கின்றனர். (311)*

# மனைப் பொருளாதாரத் திட்டம் அடுத்த மாதத்துக்குள் குடாநாட்டில்

யாழ்ப்பாணம், மே 13

யாழ்.குடாநாட்டில் மனைப் பொருளாதாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அடுத்தமாதம் இரண்டாம், மூன்றாம் திகதிக்குள் மனைப் பொருளாதாரத் திட்டத்தை இங்கு நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார்.

நல்லூர்ப் பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே அமைச்சர் மேற் கண்ட தகவலைக் கூறினார்.

மனைப் பொருளாதாரத் திட்டம் ஏனைய பகுதிகளில் செயற்படுத்தப்படுகின்றது. இங்கு அது இன்னமும் நடை முறைக்கு வரவில்லை.

அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சரிடம் கோரிக்கை விடுக் கப்பட்டது.

இது குறித்துக் கருத்துத் தெரி வித்த அமைச்சர் மேற்கண்ட வாறு கூறினார்.

அனைத்துப் பிரதேச செய லர் பிரிவிலும் தெரிவு செய்யப் பட்டவர்களுக்கு மனைப் பொரு ளாதாரத்திட்டத்தில் வாய்ப்பு கள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ம-7)

# கால்நடைகளின் கழிவுகள் கொட்டப்படுவதால் துர்நாற்றம்

தென்மராட்சி, மே 13

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டக் காணிகளில் கால்நடைகளின் கழிவுகள் இனந் தெரியாதோரால் கொட்டப் படுவதால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.

பற்றைக் காடுகளாகக் காணப் படும் பகுதிகளில் நாளாந்தம் கால் நடைகளின் எலும்புகள் உட்பட கழிவுகள் கொட்டப்படு கின்றன.

இவற்றை யார் கொண்டு வந்து கொட்டுவது என்று தெரி யாமல் உள்ளதாகவும் தெரிவித் தனர்.

அந்தப் பகுதியில் கட்டாக் காலிகளாக அலையும் கால் நடைகள் இறைச்சிக்காக வெட்டு வோர் அதன் கழிவுகளை அந்த இடத்திலேயே கைவிட்டுச் செல் கின்றார்கள். அத்துடன் இறைச் சிக் கடைகளில் உள்ள கழிவுகளை யும் கொண்டு வந்து அந்த இடத் தில் போடுகிறார்கள் என்றும் இவர் கள் யார் என்று தெரியாமல் மக்கள் தவிப்பதாகவும் தெரி விக்கப்பட்டது. (ம-207)

# சட்டவிரோதமாகப் பயன்படுத்திய வலைகள் மீட்பு

யாழ்ப்பாணம், மே 13

சட்டவிரோதமான முறை யில் மீன்பிடிப்பதற்குப் பயன் படுத்தப்பட்டு வந்த தடை செய்யப்பட்ட ஒரு தொகுதி தங்கூசி வலைகள் குருநகர் கடல்நீரேரிப் பகுதியில் யாழ். கடற் றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்கள அதிகாரிகளால் கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மீட்கப்பட்டுள்ளன.

தங்கூசி வலைகளைப் பயன் படுத்தி மீன்பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்ட நிலையில் மீனவர்கள் சட்டவிரோதமான முறையில் இந்த வலைகளைப் பயன்படுத்துவது தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து குருநகர் கடல்நீரேரிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கை யின் போதே ஆயிரம் கிலோ நிறையுடைய வலைகள் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள் ளன என திணைக்கள அதிகாரி கள் தெரிவித்தனர்.

மீன்பிடிப்பதற்காகத் தடை செய்யப்பட்ட வலை மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்து வதைத் தவிர்க்குமாறு யாழ் குடாக்கடல் நீரேரிப் பகுதியில் தொழிலில் ஈடுபடும் மீனவர் சங்கப் பிரதி நிதிகளுக்கு கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்தில் அதிகாரிகளால் வலியுறுத்தப் பட்டிருந்தது.

அதனையும் மீறி இந்த வலை களைப் பயன்படுத்தி வந்த தனாலேயே அவற்றைத் தடுப் பதற்காக வலைகளைக் கண்டு பிடித்து மீட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வலைகள் கடல் பரப் பில் உள்ள சிறுதீவுகளில் கடலில் அடையாளப்படுத்தப்பட்ட சில பகுதிகளிலும் மறைத்து வைக் கப்பட்டிருந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட் டன.

சாதாரண வலைகளுடன் கடலுக்குச் செல்லும் மீனவர் கள் தாம் மறைத்து வைத்திருக் கும் தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி கடலுணவுகளைப் பிடித்து அந்த வலைகளை மீண்டும் அங்கு மறைத்து வைத்து விட்டுக் கரை திரும்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில், மீட்கப் பட்ட தங்கூசி வலைகளை இதுவரை எவரும் உரிமை கோர வில்லை. அவ்வாறு உரிமை கோரும் பட்சத்தில் தடைசெய் யப்பட்ட மீன்பிடி முறையைக் கையாண்டதற்காக அவர் களுக்கு எதிராக வழக்குத் தாக் கல் செய்ய முடியும் என்று திணைக்கள உதவிப் பணிப் பாளர் அ.ரவீந்திரன் தெரிவித் தார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் முச்சக்கர வண்டி சாரதிகளிடம் தமிழ்-முஸ்லிம் வேறுபாடு இருக்கக்கூடாது

## மன்னார் நகரசபைத் தலைவர் தெரிவிப்பு



மன்னார்,மே13

மன்னாரில் முச்சக்கர வண்டி சாரதிகளிடம் தமிழ் - முஸ்லிம் என்ற பிரச்சினை காணப்படுகிறது. இனி இவ்வாறான பிரச்சினைகள் இருக்கக்கூடா என மன்னார் நகர சபையின் தலைவர் ச.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள முச்சக்கரவண்டி சாரதிகளுக்கும் மன்னார் நகர சபை உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது சபை தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற வேறுபாட்டைக் காட்டாது. குறித்த சபை தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சமமான வேலையைச் செய்யவுள்ளது.

முச்சக்கரவண்டிகளின் சாரதிகள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து சமூகத்தினுள் பிரிவினைகளை ஏற்படுத்தக்கூடா. முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் மக்களுக்குச் சேவை செய்யவே உள்ளனர். உங்களை மக்கள் வாழ்த்தவேண்டும்.

மன்னார் நகரத்தில் சமூகங்களுக்கிடையில் ஒற்றுமை பேணப்படவேண்டும். நாம் அனைவரும் சட்டத்தை மதித்தவர்களாக இருக்கவேண்டும். நாம் அனைவரும் வேறுபாடின்றி ஒற்றுமையாக எமது கடமையைச் செய்ய வேண்டும்.

இதற்கு மன்னார் நகரசபை முழு ஒத்துழைப்பையும் வழங்கும். - என்றார் அவர்.

(எ-601)

## முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு வவுனியாவில்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அரசுடன் இணைந்ததன் பின்னரான முதலாவது பேராளர் மாநாடு நாளை சனிக்கிழமை வவுனியா நகர மண்டபத்தில் கட்சியின் தலைவரும் நீதியமைச்சருமான சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெறவுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

நாடெங்கிலுமிருந்து ஏராளமான பேராளர்கள் பங்குகொள்ளும் இந்த மாநாட்டில் கட்சியின் புதிய உறுப்பினர்கள் தெரிவாவதுடன் செயற்குழுவும் தெரிவுசெய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மாநாட்டின் இறுதியில் கட்சியின் தலைவரின் விசேட உரையும் இடம்பெறவுள்ளது. (எ-21)

# முன்னாள் போராளிகள் தொடர்பாக இராணுவத்துக்கு தவறான தகவல்கள்

கிளிநொச்சி,மே 13

முன்னாள் போராளிகளின் செயற்பாடுகள் தொடர்பாக இராணுவத்தினருக்கு பொது மக்கள் சிலர் தவறான தகவல்களைத் தெரிவித்து வருகின்றனர் என்று போராளிகளின் உறவினர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி, இராமநாதபுரம் பகுதியில் உள்ள பொதுமக்கள் சிலர் இராணுவத்தினருக்கு வழங்குகின்ற தவறான தகவல்களால் புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகள் சிலர் சிக்கல்களுக்குள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தடுப்பு முகாம்களில் புனர்வாழ்வு பெற்று வந்த முன்னாள் பேராளிகள் சிலர் மேற்படி கிராமத்திலுள்ள தமது வீடுகளுக்கு வந்துள்ளனர். முன் விரோதம் காரணமாக இவர்களின் கடந்த காலச் செயற்பாடுகள் தொடர்பாகத் தவறாக இராணுவத்தினருக்குப் பொதுமக்கள் சிலர் தகவல் தெரிவித்து வருவதால் அவர் கள் மீது விசாரணை மற்றும் எச்சரிக்கை விடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சமூகத்துடன் இணைந்து சக வாழ்வு வாழ வேண்டும் என நினைக்கும் முன்னாள் போராளிகள், உளரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர் என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே, இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் மேலும் கேட்டுள்ளனர். (எ)

## அதிபர் இல்லாத பாடசாலை; மாணவர் பாதிப்பு

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் அதிபர் இல்லாது இயங்கி வருகிறது. இசுறு பாடசாலையாக இது தெரிவு செய்யப்பட்டபோதும் இப்பாடசாலைக்குரிய அதிபர் நியமிக்கப்படவில்லை.

அதிபர் இல்லாது இந்தப் பாடசாலை இயங்குவது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தடையாக உள்ளதாகப் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(எ-410)

# வன்னிப் பகுதிக்கான அஞ்சல் சேவை இந்த வருடத்துக்கு முன் வழமைக்கு

## வடமாகாண அஞ்சல் மா அதிபர் தகவல்

வன்னி மாவட்டங்களின் தபாலகங்கள் 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழும், 'என்றிப்' திட்டத்தின் கீழும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவை எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்கு முன்னதாக நிர்மாணிக்கப்பட்டு முடிவடையும். இதன் பின்னர் இப்பகுதிக்கான தபால் சேவைகள் அனைத்தும் வழமைக்குத் திரும்பிவிடும் என வட மாகாண அஞ்சல்மா அதிபர் என்.இரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இதற்கென 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் மூலம் இரண்டு கட்டமாக 56 மில்லியன் ரூபாவும் 'என்றிப்' திட்டத்தின் கீழ் 198 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான், மாங்குளம் ஆகிய இடங்களும் வவுனியா மாவட்டத்தில் நெருங்கேணியும் கிளிநொச்சி மாவட்டத்தில் பளை, பூநகரி ஆகிய இடங்களும், மன்னார் மாவட்டத்தில் நெட்டாங்கண்டல் ஆகிய இடங்களில் தபாலகங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

வவுனியாவில் இருந்து தினமும் எடுத்துவரப்படும் தபால் பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு அன்றைய தினமே விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன எனவும் இதனால் ஏற்கனவே இங்கிருந்து தபால் விநியோக நடவடிக்கையின் கால விரயம் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்து தபால் விநியோக நடவடிக்கைகளைச் சீரான முறையில் பேணுவதற்கு வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான தபால் லொறி ஒன்றையும் சேவையில் ஈடுபடுத்து முகமாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

(எ)

## சித்திரை புத்தாண்டு கொண்டாட்டம்

கிளிநொச்சி, மே 13

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வாக சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-405)


இரண்டாம் ஆண்டில் நீங்காத நினைவுடன்...

சொரூபன் சுருதியன்



பிறப்பு
13.03.2005

இறப்பு
13.05.2009

உயர்ந்தவனாய் உனை வளர்க்க
நினைத்திருந்தோம்
நடக்கவில்லை
உன் நிழலில் இளைப்பாற
நினைத்திருந்தோம்
முடியவில்லை
பிரியமானவனே உன் பிரிவால்
மூண்ட துயர் தீரவில்லை
வாழும் வரை வேதனை தான்
மனம் ஆறிட ஒரு
வழியுமில்லை

உன் நினைவுடன்:
அம்மப்பா, அம்மம்மா
பெரியப்பா, பெரியம்மா,
அண்ணா, தங்கைமார், தம்பி
கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(4139) (28)

கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் (காளி) காமாட்சி அம்பாள் ஆலய
முன்னாள் உப செயலாளர் சுப்பிரமணியம்
வெற்றிவேலாயுதம் அவர்களின் அன்புத் தாய்
திருமதி
அன்னலட்சுமி சுப்பிரமணியம்

அவர்கள் 09.05.2011 திங்கட்கிழமை சிவபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆலய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட அவரின் குடும்பத்தாரின் துக்கத்தோடு நாமும் இணைந்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(4132) ஆலய பரிபாலன சபை.

உத்தியோகபூர்வ முடிவுகள்

சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 608
திகதி 11/05/2011

சுப்பர் இலக்கம் 26

வெல்லப்பட்ட இலக்கங்கள் 01 32 40 49

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 14,089,005.60 | - |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 50,000.00 | 11 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 2,000.00 | 245 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000.00 | 511 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 100.00 | 12431 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 40.00 | 7210 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 179009 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 28503 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசுத்தொகை ரூ. 8,232,740.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுப்படியாகும்
ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது
பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு 14,346,176.80

தேசிய லொத்தர் சபை
WWW.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிய நிதி இல்லாததால் வன்னியில் சங்கங்கள் நெல்லைக் கொள்வனவு செய்ய முடியாத நிலை

## கிளிநொச்சி விவசாயக் கூட்டத்தில் தலைவர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 13

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் நிதிவளம் இல்லாததால் விவசாயிகளிடமிருந்து மொத்தமாக நெல்லைக் கொள்வனவு செய்யமுடியாதுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் மு.ப 10 மணியளவில் மாவட்டச்செயலகத்தில் அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், நெல் சந்தைப்படுத்தும் சபை என்பன முன்னர் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து வந்தன. ஆனால் தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லை முழுமையாகக் கொள்வனவு செய்வதில்லையென இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் சுட்டிக் காட்டினர். இதற்குப் பதிலளித்த சங்கத் தலைவர் கூட்டுறவு என்பது பாரம்பரியமாக இருந்ததொன்று. இதன் கீழுள்ள கூட்டுறவு அமைப்புக்கள் தங்களின் சக்திக்கு ஏற்றவகையில்தான் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். சங்கங்களின் நிதிவளத்துக்கு அமைவாக மொத்த உற்பத்தியில் மூன்று சதவீத நெல்லை மட்டுமே சங்கங்களால் கொள்வனவு செய்ய முடியும். மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் போர் காரணமாக மோசமான பாதிப்புக்களைச் சந்தித்துள்ளன. இதனையும் கருத்திற்கொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விவசாயக் குழுக்கூட்டத்தில் விவசாய மற்றும் கால்நடை வளங்களுடன் தொடர்புடைய திணைக்கள அதிகாரிகள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (க)

# போக்குவரத்து வசதிகளை கண்டறியாத முல்லைக் கிராமங்கள்

முல்லைத்தீவு, மே 13

முல்லைத்தீவு மாவட்டத்தின் சில கிராமங்களுக்கு இதுவரை போக்குவரத்து வசதிகள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பல தரப்பினரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகத் துணுக்காய் பிரதேசத்திலுள்ள சில கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லை. இவற்றுள் புத்துவெட்டுவான், மருதங்குளம், தேறாங்கண்டால் ஆகிய கிராமங்கள் அடங்கும். துணுக்காயில் இருந்து கொக்காவில் வரை செல்லும் பிரதான வீதியின் மையப் பகுதிகளில் இந்தக் கிராமங்கள் அமைந்துள்ளன. இந்தக் கிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் வேறு இடங்களிலுள்ள பாடசாலைகளுக்குக் கால்நடையாகவும் சைக்கிளிலும் சென்று வருகின்றனர். ஆனால் ஏழ்மையான குடும்பங்களைச் சேர்ந்த பல மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலையில் தமது கல்வியை இடைநிலையில் கைவிட்டுள்ளனர்.

மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள இந்தக் கிராம மக்களுக்கு இனியும் காலதாமதம் செய்யாது போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதே அந்தப் பகுதி மக்களின் முக்கிய கோரிக்கையாகவுள்ளது. (க)

# ஓட்டோக்கள் தொடர்பாக அதிக முறைப்பாடுகள்; இதனை ஆராய்வதற்கு மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார், மே 13

முச்சக்கர வண்டிகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து மன்னார் நகர சபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதால் இதனை ஆராயும் பொருட்டு கலந்துரையாடல் ஒன்று மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மு.ப. 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மன்னார் நகரசபையின் தலைவர் சந்தானபிள்ளை, ஞானப்பிரகாசம், உபதலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகரசபை உறுப்பினர்கள், மன்னார் நகர சபையின் செயலாளர் வேனாட் குரூஸ், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் துரம், தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் பற்றிக் வினோ முச்சக்கர வண்டி உரிமையாளர்கள், முச்சக்கர வண்டி சங்கப் பிரதிநிதிகள்,





இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் முச்சக்கரவண்டிச் சாரதிகள் தொடர்பாக மக்களால் மன்னார் நகரசபைக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக முச்சக்கரவண்டி உரிமையாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

முச்சக்கரவண்டியில் பயணிக்கும் இளம் யுவதிகளை முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் சிலர் புகைப்படம் எடுப்பதாகவும் ஒரு சிலர் தீய வார்த்தைகளால் கதைப்பதாகவும் அதிக முறைப்பாடுகள் தம்மிடம் பதிவாகியுள்ளதாக நகரசபையின் செயலாளர் வேனாட் குரூஸ் தெரிவித்தார்.

இதேவேளை, மன்னாரில் சேவையிலீடுபட்டு வரும் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடல் நகர சபைத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. (க-601)

# வன்னியில் வீதி அபிவிருத்திப் பணிகள்

வன்னிப் பிரதேசத்தில் வீதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. யுத்தத்தின் காரணமாகவும் பெய்த பெருமழை காரணமாகவும் வன்னிப் பிரதேசத்திலுள்ள வீதிகளில் அநேகமானவை மோசமாக [illegible] சேதமடைந்து காணப்[illegible]ன்றன. இதனால் பொதுமக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்து வருகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு கிளிநொச்சி வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் வீதி அபிவிருத்திப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இ[illegible]ன் முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்றுபாலங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 வீதிகள் மற்றும் இரண்டு பாலங்களும் புனரமைக்கப்படவுள்ளன. இவற்றில் சில வீதிகள் கிரவல் வீதிகளாகவும், சில வீதிகள் தார்வீதிகளாகவும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# வீதிக்கருகில் சந்தை; பயணிகளுக்கு இடைஞ்சல்

கிளிநொச்சி பிரதான வீதியொன்றுக்கு அருகில் பொதுச் சந்தை இயங்கி வருவதனால் இந்த வீதியில் பயணிப்போர் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுச் சந்தியிலிருந்து அறிவியல் நகருக்குச் செல்லும் பிரதான வீதிக்கு அருகிலேயே இந்தப் பொதுச் சந்தை அமைந்துள்ளது. இந்த வீதியூடாகப் பாரவூர்திகளும் சென்று வருவதனால் விபத்துக்கள் ஏற்படுவதற்கான ஏதுநிலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

முன்பு சந்தை இயங்கிய காணியில் படையினர் உள்ளதால் பிரதான வீதிக்கருகில் சந்தையை நடத்தவேண்டிய அவலநிலை தோன்றியுள்ளது. அத்துடன் சந்தையையொட்டி சிறியளவிலான வர்த்தக நிலையங்களும் காணப்படுவதால் வீதியோரத்தில் நெரிசல் நிலை தோன்றியுள்ளது.

இது தொடர்பாக வர்த்தகர்கள் பலமுறை உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்தபோதிலும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இதேவேளை, சந்தை அமைந்துள்ள வீதியிலுள்ள புகையிரதப் பாதையின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அங்குள்ள வர்த்தக நிலையங்களை அகற்றுமாறு அதிகாரிகள் வர்த்தகர்களைக் கேட்டுள்ளனர். இந்த நிலையில் மாற்றிடம் எதுவும் தமக்கு வழங்கப்படாத நிலையில் தாம் எங்கே செல்வதென வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர். எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்திப் பொருத்தமான காணியொன்றைச் சந்தைக்கு வழங்க வேண்டுமென வர்த்தகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

# சங்கத்தில் கடன்பெ[illegible]ற பலர் அதனை திருப்பிச் செலுத்தாததால் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தில் கடன்பெற்ற மூவர் அதனைத் திரும்பச் செலுத்தாததால் ஏனையவர்களுக்குக் கடன் வழங்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிக்கனக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து 94 பேருக்கு சுழற்சி முறையில் கடன் வழங்கப்பட்டது. இதில் 40 பேர் கடனைத் திரும்பிச் செலுத்தவில்லை. இதனால் ஏனைய உறுப்பினர்களுக்கு கடன் வழங்க முடியாத நிலை தோன்றியிருப்பதாக சங்கத்தின் பொருளாளர் க.கருணாகரன் தெரிவித்தார். இந்தக் கடனை வழங்கும்போது விதிக்கப்பட்ட சட்ட திட்டங்களின் பிரகாரம் கடன் பெற்றவர்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தாம் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தியிருந்தால் ஏனையவர்களும் நன்மையடைந்திருப்பர். ஆனால் இவர்களின் செயலால் ஏனையவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே இனியும் தாமதம் செய்யாது தாம் பெற்ற கடனை இவர்கள் செலுத்தவேண்டும். இத[illegible] ஏனையவர்களும் பயன் பெறுவர். தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை மேற்கொள்ள வேண்டிவரும் எனவும் அவர் தெரிவித்தார். (க-500)

# ஒட்டுசுட்டான் விவசாயிகளுக்கு இலங்கை வங்கியால் விவசாயக் கடன்கள்

முல்லைத்தீவு, மே 13

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு இலங்கை வங்கியால் விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் நெல், வெங்காயம், மிளகாய், நிலக்கடலை போன்றவற்றைச் செய்கை பண்ணும் பொருட்டே இந்த விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. கமநல சேவை நிலைப் பெரும்பாக உத்தியோகத்தரின் சிபார்சுடன் கமக்கார அமைப்பின் அனுசரணையின்பேரில் விவசாயிகள் மூவர் கொண்ட குழுக்களாக இணைந்து அவர்களே ஒருவருக்கொருவர் பிணையாளிகளாக ஒப்பமிட்டு இந்தக் கடன்களைப் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

விவசாயிகளால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியாக இருக்குமாயின் அவர்களால் கோரப்பட்ட கடன் தொகை அவரவர் வங்கிக் கணக்குகளில் இடப்படும்.

இந்தக் கடனை மிகக் குறைந்த வட்டியுடன் ஆறுமாத தவணையில் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் வட்டிவீதம் அதிகரிக்கப்படுவதுடன் செலுத்தாத கடன் தொகை சட்ட நடவடிக்கை மூலம் அறவிடப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
13 மே 2011 வெள்ளிக்கிழமை

# அதிபர், ஆசிரியர்களை 'சிறை'வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தினர் பெற்றோர்கள்

## 1000 பாடசாலைத் திட்டம் குளறுபடியானதால் அதிரடி

இரத்தினபுரி,மே13

எம்பிலிப்பிட்டிய கல்வி வலயத்துக் குட்பட்ட தொரப்பனே மகா வித்தியாலயத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை திரண்டு வந்த பிரதேசவாசிகளும், பெற்றோர்களும் பாடசாலையை முற்றுகையிட்டு அதிபர், பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 21 பேரை பாடசாலைக்குள் 'சிறை'வைத்து ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற் கொண்டனர்.

அதிபர் அவரது அலுவலகத்திலும், பிரதி அதிபர் வேறோர் அறையிலும், 19 ஆசிரியர்கள் விஞ்ஞான ஆய்வு கூடத்திலும் தடுத்து வைக்கப்பட்டனர்.

ஆயிரம் சிறந்த பாடசாலைகள் திட்டத்தில் தொரப்பனே மகா வித்தியாலயத்தின் பெயர் நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்தே பெற்றோர் இந்த முற்றுகையை மேற்கொண்டனர்.

பாடசாலையின் முன்னால் உபவாசத்தை மேற்கொண்டுள்ள 14 பேரின் உயிரைக் காப்பாற்றுமாறும், பாடசாலையின் பெயரை மீண்டும் பட்டியலில் சேர்க்குமாறும் இவர்கள் கோஷம் எழுப்பினர்.

சிறு பிள்ளைகள் பலர் அவர்களது வகுப்பறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களது பாதுகாப்புக்கு பெற்றோர் உடனிருந்தனர். அதேசமயம் பாடசாலையில் சிரேஷ்ட மாணவர்கள் வீதியில் போராட்டம் நடத்தும் பெற்றோர்களுடன் இணைந்துகொண் டனர்.

எம்பிலிப்பிட்டிய- ஓறு பொக்க வீதியில் தொரப்பனே பகுதியில் நடந்த இந்தப் போராட்டத்தில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பிரதேசவாசிகள் உட்பட சுமார் இரண்டாயிரம் பேர்வரை கலந்துகொண்டனர். போராட்டக்காரர்கள் வீதியின் நடுவே அமர்ந்து கொண்டதால் போக்குவரத்துகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.

போராட்டக்காரர்களைக் கலைக்கப் பொலிஸார் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை.

இந்தப் பாடசாலை சிறந்த ஆயிரம் பாடசாலைகள்பட்டியலில் சேர்க்கப்பட்டு மதிப்பீடும் செய்யப்பட்டிருந்தது. இந்தப் பாடசாலை பிரதேச அரசியல் வாதியொருவரின் தலையீட்டால் பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்றும் பெற்றோர்கள் தெரிவித்தனர். (ச-5)

# ஒருகோடி செலவில் அமைக்கப்பட்ட புத்தரின் உடற்பாக மண்டபம் திறப்பு



மட்டக்களப்பு,மே13

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒரேயொரு பௌத்த விகாரையான ஸ்ரீமங்களாராம ரஜமஹா விகாரையில் மட்டக்களப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் அருண் தம்பிமுத்துவின் சொந்த நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட புத்த பெருமானின் உடற்பாக மண்டபம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த மண்டபத்தை நிர்மாணிக்க சுமார் 10 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளதாக விகாராதிபதி அம்பிட்டடிய சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட தங்கமுலாம் பூசப்பட்ட புத்தர் சிலையும் இங்கு வைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் அருண் தம்பிமுத்து தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அமைச்சர் ராஜித சேனாரட்ன, கிழக்கு பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் திலக் விஜயவர்தன உட்படப் படைஅதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ச-21)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீள்குடியேற்ற அமைச்சர் பார்வையிட்டார்

மட்டக்களப்பு,மே13

கடந்த 30 வருட யுத்தம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி மற்றும் களுவாஞ்சிக்குடி பிரதேசங்களை மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் பார்வையிட்டார். இதன்போது யுத்தம் காரணமாக சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வது தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்தப்பிரதேசங்களில் சேதமடைந்த 96 வீடுகளைப் புனரமைப்புச் செய்ய சுமார் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார். (ச-21)

# மட்டக்களப்பில் ரூ.3,500 மில்லியன் செலவில் அபிவிருத்திப் பணிகள்

மட்டக்களப்பு,மே13

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடம் 3,500 மில்லியன் ரூபாய் செலவில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என மாவட்ட திட்டப் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியுதவியுடன் 165 அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுள் 35 திட்டங்கள் முழுமையாகப் பூர்த்தியடைந்துள்ளன. 12 சத வீத நிதி செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கல்வி, சுகாதாரம், மீன்பிடி, கைத்தொழில், விவசாயம், நீர்ப்பாசனம் உட்படப் பல்வேறு துறை களிலும் அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ச-21)

THE HALO TRUST

**பதவிநிலை கோரல் - மிதிவெடி அகற்றுனர்**

**HALO Trust** ஆனது உலகில் 10 நாடுகளில் பணிபுரியும் ஒரு பிரித்தானிய கண்ணிவெடி அகற்றும் அரச சார்பற்ற அமைப்பாகும். இலங்கையில் 2002ல் இருந்து கண்ணிவெடிகளையும் ஏனைய யுத்த வெடிபொருட்களையும் அகற்றி வருகின்றது.

இப்பணியானது உடலியல் ரீதியாக கடுமையான தென்பதை தெரிந்துகொள்வதுடன் இப்பணி பற்றிய முழுமையான உணர்[illegible]ம் பொறுப்பும் உள்ளவர்கள் மீது கவனம் செலுத்தப்ப[illegible]. இப்பணி சம்பந்தமான முழுமையான பயிற்சியை[illegible] பாதுகாப்பையும் **HALO** வழங்கும்.

**இதற்காக [illegible]ளை, மருதங்கேணி மற்றும் செம்பியன்பற்று ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் ஆர்வமுடைய ஆண், பெண் இருபாலாரும் தங்களது சுயவிவரக்கோவை மற்றும் ஆள் அடையாள ஆவணங்களுடன்**

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு**

**இம்மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 09 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

(48) (4105)

# புதிய ரயில் சேவை ஆரம்பம்

திருகோணமலை,மே13

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாக திருகோணமலையிலிருந்து கல்லோயாவுக்கான ரயில் சேவை எதிர்வரும் 26ஆம் திகதி முதல் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதவர் அசோக் கே.காந்தா, போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, பிரதியமைச்சர் றோகன திஸாநாயக்க, அமைச்சின் ஏனைய அதிகாரிகள் ஆகியோரால் இந்த ரயில் சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் ரயில்வே திணைக்களத்தின் திட்டப் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார். (ச)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**
**வெளிவாரிப் பரீட்சைகள் - 2009**

1. இசைமாணி/நடனமாணி முதலாம் வருடத் தேர்வு
2. இசைமாணி/நடனமாணி இரண்டாம் வருடத் தேர்வு
3. இசைமாணி/நடனமாணி மூன்றாம் வருடத் தேர்வு
4. இசைமாணி/நடனமாணி நான்காம் வருடத் தேர்வு

மேற்படி இசைமாணி மற்றும் நடனமாணி பரீட்சைகளை 06.06.2011 (திங்கட்கிழமை) தொடக்கம் 14.06.2011 (செவ்வாய்க்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு மண்டபத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இசைமாணி/நடனமாணி முதலாம் வருடத் தேர்வு<br>இசைமாணி/நடனமாணி மூன்றாம் வருடத் தேர்வு | 06.06.2011 - 09.06.2011 |
| இசைமாணி/நடனமாணி இரண்டாம் வருடத் தேர்வு<br>இசைமாணி/நடனமாணி நான்காம் வருடத் தேர்வு | 10.06.2011 - 14.06.2011 |

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 01.06.2011 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு: செய்முறைப் பரீட்சைகள் தொடர்பான விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.
11.05.2011 (சி/575974)

## ஈரவிழிகளுடன் நான்காண்டுகள்



*உதய நிலவாய்: 06.04.1944*
*இதய மலராய்: 28.04.2007*

திதி: பூர்வபக்க ஏகாதசி

**அமரர் செல்லையா சின்னத்துரை**

*(கிளாக்கர்)*

நான்காண்டுகள் சென்றதப்பா
எம் ஈரவிழி காயவில்லை!
உங்கள் புன்னகை பூத்த முகத்தை - எங்களால்
மறக்க முடியவில்லையே - அப்பா
மௌனமாகவே எம்மைத் தவிக்கவிட்டு சென்றீரே
காலங்கள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எம் உள்ளங்களில் நிலைத்திருக்கும்

*சரசாலை தெற்கு, சாவகச்சேரி.* குடும்பத்தினர்.

(48,20,50)

**German Institute**

German, Swiss மொழிகள், தமிழ்மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது. அடுத்த வகுப்பு June முதலாம் திகதி ஆரம்பம். தொடர்புகளுக்கு 10, Palaly Road, Jaffna. T.P. 0771604823

**காணி தேவை**

திருநெல்வேலிக்கும் - யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கும் இடையில் பலாலி றோட்டில் 1½ பரப்புக்கும் 4½ பரப்புக்கும் இடைப்பட்ட வீடு கட்டக்கூடிய பொருத்தமான காணி விலைக்குத் தேவை.

தொடர்பு: 0714534717

**மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி**

வட்டுக்கோட்டை விவசாயிகளினால் நடத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி.

இடம்: கொத்துத்துறை சவாரித்திடல்

காலம்: 15.05.2011 ஞாயிறு

[illegible]

வட்டுக்கோட்டை. விவசாயிகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 26 |  | 13 |
| ★ | | ★ |
| 11 | | 04 |
| ★ | | ★ |
| 1954 | | 2011 |

**அமரர் தர்மபாலா செல்வராணி**

கடந்த 13.04.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.05.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

*"சங்கீதா வாசா",*
*கைதடி கிழக்கு, கைதடி.* (4131) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக முஸ்லிம் சமூகம் அணிதிரள வேண்டும்

## கிழக்கு மாகாண அமைச்சர் சுபைர் வேண்டுகோள்

திருகோணமலை, மே 13

நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக முஸ்லிம் சமூகம் அணி திரண்டு தமது நாட்டுப் பற்றை மீண்டுமொரு முறை நிரூபித்துக்காட்ட வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நிபுணர் குழு அறிக்கையை ஐ.நா. செயலாளர் நாயகமும், ஏகாதிபத்திய சக்திகளும் வாபஸ் வாங்கும் வரை முஸ்லிம்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஜும்ஆ தொழுகையின் பின்னர் ஒன்றுபட்டு தமது எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டுமென்றும் கிழக்கு மாகாண அமைச்சர் சுபைர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நிபுணர் குழு அறிக்கை தன்னிச்சையாகத் தயாரிக்கப்பட்ட போலியான அறிக்கையாகும். முஸ்லிம்களுக்கு எதிரான மேற்குலகினால் புனையப்பட்ட அறிக்கையாகும்.

மிகப்பெரிய தியாகத்தைப் புரிந்த எமது ஜனாதிபதியைப் போர்க்குற்றவாளி என நிரூபிக்க முயற்சிப்பதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கவும் முடியாது; மன்னிக்கவும் முடியாது.

பிரிவினைவாதத்தைப் பூண்டோடு ஒழித்து ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற உயரிய சிந்தனையை ஏற்படுத்திய ஜனாதிபதியை நன்றி உணர்வோடு பார்க்கும் இந்தக் காலத்தில் நிபுணர் குழு அறிக்கையை வெளியிட்டு மீண்டுமொரு இருண்ட யுகத்துக்குள் எம்மைத் தள்ளிவிட நினைக்கும் தீய சக்திகளை வேரோடு பிடுங்கி எறியவேண்டும்.

நாட்டையும், நாட்டு மக்களையும் காப்பாற்றிய ஜனாதிபதியை, முஸ்லிம்களாகிய நாமும் ஓரணி திரண்டு ஆதரிப்போம். நிபுணர் குழு அறிக்கையைத் தீ வைத்து எரிப்போம். ஜனாதிபதியுடன் முஸ்லிம் சமூகம் ஓரணியில் திரளும் என்பதை நிரூபிப்போம்.

30வருடகால யுத்தத்தில் 6ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளார்கள். முஸ்லிம்களின் சொத்துகள் சூறையாடப்பட்டுள்ளன. சொந்த நிலங்களிலிருந்து துரத்தியடிக்கப்பட்டுள்ளார்கள். எமது மக்களுக்கு மீண்டுமொரு தடவை இத்தகைய அராஜகங்கள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் உறுதியாகவிருந்து வெற்றி பெற்ற எமது ஜனாதிபதிக்கு பக்கபலமாக நின்று எமது எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சந்திப்பு...



இலங்கைக்கான அமெரிக்கத் தூதவர் பற்றீசியா ஏ. புட்டினிஸ் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு மாநகர சபைக்குச் சென்று மேயர் சிவகீர்த்தா பிரபாகரன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது மட்டக்களப்பு மாநகர சபையின் வேலைத்திட்டங்கள், அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் தூதவர் கேட்டறிந்து கொண்டார். (ச)

# விதவைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த திட்டங்கள்

## மட்டக்களப்பில் அமெ.தூதவர் தகவல்

மட்டக்களப்பு, மே 13

விதவைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை எமது நாடு முன்வைக்கவுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக, கைத்தொழில், விவசாய சம்மேளனக் கலந்துரையாடலில் அமெரிக்கத் தூதவர் பற்றீசியா ஏ.புட்டினிஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புக்கு கடந்தசெவ்வாய்க்கிழமை சென்ற அமெரிக்கத் தூதவர் பற்றீசியா ஏ புட்டினிஸ் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தினரைச் சந்தித்து வர்த்தக மேம்பாடு, உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில், அமெரிக்கத் தூதரகத்தின் மனித உரிமைகளுக்கான அதிகாரி ரோய் சிறினியும் கலந்து கொண்டார்.

சம்மேளனத்தின் சார்பில், தலைவர் ரஞ்சிதமூர்த்தி, செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

வர்த்தகத் துறையினருக்குள்ள தேவைகள், குறைபாடுகள், பணம் சார்ந்த உதவிகள் ஆகியவை குறித்து அமெரிக்கத் தூதவர் மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாயச் சம்மேளனத்தினரிடம் கேட்டறிந்து கொண்டார்.

அமெரிக்கத் தூதவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

விதவைகளுக்கான தேவைகள், அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் யுத்தம் நிறைவு பெற்றபின்னர் மிகவும் அவசியம். அந்த வகையில் அவர்களது வாழ்வா தாரத்தை மேம்படுத்துவதற்கானதிட்டங்களை எமது நாடு விரைவில் முன்வைக்கவுள்ளது.

அதேபோன்று இப்போதும் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து தமது உறவினர்களைப் பிரிந்து வாழ்பவர்கள் உள்ளனர். அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன - என்றார். (ச)

# கிரான் பிரதேச செயலாளருக்கு எதிரான நடவடிக்கையை அனுமதிக்க முடியாது

## மட்டு. மாவட்ட எம்.பி. அரியநேத்திரன் அறிக்கை

மட்டக்களப்பு,மே13

கிரான் பிரதேச செயலாளருக்கு எதிராக ஓட்டமாவடியில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையை அனுமதிக்க முடியாது. ஓட்டமாவடியில் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை முற்று முழுதான அரசியல் இலாப நடவடிக்கையாகவும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே இனக்குரோதத்தை தூண்டும் நடவடிக்கையாகவுமே நாங்கள் பார்க்கின்றோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் தாம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அரசியல் நோக்கங்களுக்காக இனரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதை அரசியல்வாதிகள் தவிர்க்கவேண்டும்.

ஊத்துச்சேனை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள அரச காணிகளை அரசியல்வாதியொருவர், கிராமசேவையாளர் ஒருவர், ஆலை முதலாளி ஒருவர் உட்பட 12பேர் சட்டத்துக்குப் புறம்பாக அபகரிக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளனர்.

இந்த 12பேரில் இரண்டு தமிழர்களும் அடங்குகின்றனர். இவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படத்தான் போகின்றது.

இந்த நிலையில் இவற்றைத் தமிழ் -முஸ்லிம் மக்களுக்கிடையிலான பிரச்சினையாகப் பார்க்கக்கூடாது. இது ஒரு சட்டப் பிரச்சினையாகவே நோக்கப்பட வேண்டும்.

அரச காணியை அத்துமீறிப் பிடிக்கும்போது அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு பிரதேச செயலாளரைச் சார்ந்தது. அதனையே அவர் மேற்கொண்டுள்ளார்.

அரச அதிகாரி என்ற அடிப்படையில் பிரதேச செயலாளர் மேற்கொண்டுள்ள சட்ட நடவடிக்கையை சிலர் தமது அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்த முனைவது தொடர்பாக எனக்கும் தகவல்கள் கிடைத்துள்ளன.



நாங்கள் இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதனை நாங்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே ஒரு இனக்குரோதத்தைத் தூண்டும் நடவடிக்கையாகவே பார்க்கின்றோம்.

கிரான் பிரதேச செயலாளர் ஒரு நேர்மையான அரச அதிகாரி. அவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இவ்வாறான செயற்பாடுகளை நாங்கள் ஒருபோதும் உதாசீனம் செய்யமுடியாது.

இந்தக் காணி அபகரிப்புத் தொடர்பில் எந்தவொரு காணியில்லாத குடிமகனும் சம்பந்தப்படவில்லை. அனைவரும் நிறைய சொத்துக்களுடன் உள்ள வசதி படைத்தவர்களாகவே உள்ளனர்.

சமாதானம் கிடைத்துள்ளது எனக் கூறிக்கொண்டு சிலர் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இந்தப் பிரச்சினையின் பின்னணியில் இப்பிரதேச முன்னாள் அமைச்சர் ஒருவர் செயற்படுகிறார் என அறியவருகின்றது. இவர் தனது அரசியல் இலாபத்திற்காக தமிழ் - முஸ்லிம் மக்களிடையே குரோதத்தைத் தூண்டும் செயலில் ஈடுபட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கில் நடைபெற்றுவரும் அத்துமீறிய குடியேற்றங்கள், உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரிலான காணி அபகரிப்புகளை உடனடியாக நிறுத்த வேண்டும் .

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் காணி அபகரிப்பு, திட்டமிட்ட குடியேற்றம் ஆகியவை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அது மாத்திரமல்ல, காணி அபகரிப்புகள் நடைபெற்று வரும் பிரதேசம் ஒன்றில், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க இருந்த பிரதேச செயலாளருக்கு பல்வேறு வகையான அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. அத்துடன், அதற்கெதிராகப் போராட்டங்களும் நடத்தப்படுகின்றன- என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கொஸ்கொடவில் பெற்றோர் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா, மே 13

கொஸ்கொட, நேகல்ல மகா வித்தியாலயத்தில் கடந்த இரண்டு வருட காலமாக நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கோரி பெற்றோர் பாடசாலையின் முன்பாக கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

தரம் ஒன்று முதல் உயர்தர வகுப்புகளைக் கொண்ட இந்தப் பாடசாலையில் 12 முதல் 14 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளதால் மாணவர்களின் கல்வி கேள்விக் குறியாகியுள்ளது. (ச)

# வெண்சந்தன மரம் தறிக்கத் தடை

கண்டி, மே 13

கண்டி மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் காணிகளிலுள்ள வெண்சந்தன மரங்களைத் தறிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்ததிங்கட்கிழமை முதல் கண்டி மாவட்டச் செயலாளர் பணிமனையில் நடைபெற்ற மாவட்ட இணைப்பாளர்களின்குழுக்கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மத்திய மாகாண சபை உறுப்பினரான மஹிந்த அபேகோன் முன்வைத்த பிரேரணையை அடுத்து குழுவின் இணைத் தலைவரான முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவினால் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்களில் முஸ்லிம்களையும் இணைக்க முஸ்லிம் காங்கிரஸ் கோருவது கேலிக்கூத்து

கொழும்பு, மே 13

முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் கூட்டமைப்பொன்றை ஏற்படுத்திக்கொள்ளாமல் அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுகளில் முஸ்லிம் தரப்பும் கலந்துகொள்ள வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் கோருவது அரசியல் யதார்த்தம் புரியாத கேலிக்கூத்தாகும் .

- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கொள்கை பரப்பு செயலாளர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அரசு - த.தே.கூட்டமைப்புக்கிடையிலான பேச்சுகளின் போது முஸ்லிம் தரப்பும் கலந்து கொள்ள இடமளிக்கப்பட வேண்டுமென மு.கா.தவிசாளர் பசீர் சேகுதாவுத் கோரியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தனியான ஒரு கட்சியல்ல மாறாக பல தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்த கூட்டமைப்பாகும். இத்தகைய தமிழ் கூட்டமைப்புடன் அரசு பேச்சுகளில் ஈடுபடுவதென்பது நியாயமானதாகும்.

ஆனால், முஸ்லிம் தரப்பு என்றால் எந்தக்கட்சியுடன் அரசு பேசுவது என்ற நியாயமான கேள்வி எழுகின்றது. இந்த அரசை உருவாக்குவதில் முன்னின்ற முஸ்லிம் கட்சிகளை இணைத்துக் கொள்வதா அல்லது புதிதாக அரசுடன் ஒட்டியுள்ள முஸ்லிம் காங்கிரசை இணைத்துக்கொள்வதா என்ற கேள்விகள் அரசின் முன் எழுகின்றன. இதற்கான வாதப் பிரதிவாதங்களில் முஸ்லிம்கள் முடிவு காணும் முன்பாகவே பேச்சுக் கூட முடிந்து விடலாம்.

இந்நிலையில் முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் கூட்டிணைப்பொன்றை ஏற்படுத்தி அதற்கு முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு அல்லது முஸ்லிம் காங்கிரஸ்களின் கூட்டமைப்பு என பெயரிட்டு அதனை அரசு பேச்சுக்கு அழைக்க வேண்டுமென கோரினால் அதில் நியாயமும், யதார்த்தமுமாக இருக்கும். அத்தகைய கூட்டமைப்பொன்றை ஏற்படுத்த எவ்வித முயற்சியும் எடுக்காத அத்தகைய முயற்சிகளைக்கூட சகிக்காத முஸ்லிம் காங்கிரஸ் இவ்வாறான கோரிக்கைகளை முன்வைப்பது என்பது அப்பாவி முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றுகின்ற ஒரு செயலாகவே அமைகின்றது.

எனவே, அரசுடன் பேச்சுகளில் ஈடுபடக்கூடியவகையில் முஸ்லிம் கூட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு முதலில் மு.கா. முன்வரவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காசோலை மோசடி: சந்தேக நபர் கைது

கொழும்பு, மே 13

மூன்று வருடங்களுக்கு முன் போலிக் காசோலைகள் மூலம் 12 லட்சம் ரூபாவை மோசடி செய்த சந்தேக நபரொருவர் கொடிகாமத்தில் வைத்து குருநாகல் விசேட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கம்பளை, உடஓவிட்ட பிரதேச வாசியான இந்நபர் 2008 ஆம் ஆண்டு யன்னம்பலாவையில் உள்ள டயர்க் கடையில் 12 லட்சம் ரூபாவுக்கு பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளார். அவர் கடைக்குக் கொடுத்த காசோலைகளும் கணக்கில் பண மில்லாததால் திரும்பிவிட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## பிரதம நீதியரசர் அசோக டி சில்வா சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்



கொழும்பு, மே 13

இரண்டு வருடகாலமாகப் பிரதம நீதியரசர் பதவியை வகித்த நீதியரசர் அசோக டி சில்வா நேற்றுமுன்தினம் புதன்கிழமையுடன் தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரை பிரதம நீதியரசர் பதவிக்கு நியமித்திருந்தார். அவரது காலத்தில் பல பிரச்சினையான வழக்குகளில் அரசின் நிலைப்பாட்டுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியிருந்தார். அதன் காரணமாக அவருக்கு சேவை நீடிப்பு வழங்குவது குறித்து ஜனாதிபதி அக்கறை கொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது.

அசோக டி சில்வா பதவி விலகியதன் காரணமாக நேற்றுமுன்தினம் முதல் புதிய பிரதம நீதியரசராக ஷிராணி பண்டார நாயக்க பதவியேற்றுக் கொண்டுள்ளார். அசோக டி சில்வா பதவியிலிருந்து ஓய்வுபெறுவதை முன்னிட்டு நேற்றுமுன்தினம் உச்ச நீதிமன்றத்தில் விசேட நிகழ்வும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின் சர்வதேச நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்குகொள்ளப்போகிறேன் எனவும் அதற்கான கால எல்லை முடிந்தவுடன் மீண்டும் இலங்கை திரும்பி நாட்டுக்குச் சேவையாற்றுவேன் என்றும் தெரிவித்தார். (ச)

ஆரம்பம்...




வீதி பாதுகாப்பு தசாப்தம் 2011-2020 எனும் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, குமார் வெல்கம மற்றும் உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் கலாநிதி பிர்தோஷி ரஸ்டம் மேதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## காலத்தின் தேவைக்கேற்ப நீதிமன்றக் கட்டமைப்புகளிலும் சீர்திருத்தங்கள் அவசியம் என்கிறார் அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு, மே 13

யுத்தம் முடிவடைந்த பின்னர் நாட்டில் ஏனைய துறைகள் போன்றே, நீதித்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் காலத்தின் தேவைக்கேற்ப நீதிமன்ற கட்டமைப்பில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது அவசியம்.

- இவ்வாறு நீதியமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



நீதிமன்றங்களில் கடமையாற்றும் சட்டத்துறையோடு சம்பந்தப்படாத ஊழியர்களுக்கான பயிற்சி நிலையத்தை பத்தரமுல்லையிலுள்ள தொழில் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் ஆரம்பித்துவைத்து உரையாற்றிய அமைச்சர் ஹக்கீம் மேலும் கூறியவை வருமாறு:-

முன்னர் நீதிமன்றங்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட சட்டத்துறையோடு நேரடியாக சம்பந்தப்படாத ஏனைய ஊழியர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்படாதது பெரியதொரு குறைப்பாடாக இருந்து வந்தது. அது அவர்களது கடமையைச் செவ்வனே நிறைவேற்றத் தடையாக விருந்தது. அக்குறைப்பாட்டை இப் பயிற்சி நிலையம் நிறைவு செய்கிறது.

யுத்தம் முடிந்த சூழ்நிலையில் கடந்த இரண்டாண்டு காலப்பகுதியில் நாட்டின் நீதித்துறை இலங்கை முழுவதற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் 63 புதிய நீதிமன்றங்கள் செயற்படத் தொடங்கியுள்ளன. புதிய நீதிமன்ற நியாதிக்க எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் மிகவும் இலகுவாக்கப்பட்டுள்ளன - என்றார்.

இந்த நிகழ்வில் பிரதமநீதியரசர் அசோக டி சில்வா, ஐ.நா. அபிவிருத்தித் திட்ட இலங்கை பிரதிநிதி டக்லஸ் கீ,நீதியமைச்சின் செயலாளர் சுஹத கம்லத் ஆகியோரும் கலந்துக்கொண்டனர். (சி)

## கஞ்சா கடத்திய தம்பதியர் கைது

கொழும்பு, மே 13

கருவாட்டுப் பெட்டிக்குள் கஞ்சாவை மறைத்துக் கடத்திய தம்பதியினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கஹடகஸ்திகிலிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து ஐந்து கிலோ எடைகொண்ட ஐந்து பைக்கற் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் சந்தைப் பெறுமதி 125,000 ரூபாவாகும்.

லொறியில் இருந்து கைப்பற்றப்பட்ட கருவாடும் மனித பாவனைக்கு உகந்ததல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## முஸ்லிம் அரசியல் தலைவர்களின் போக்கு குறித்து முஸ்லிம் மீடியா போரம் கவலை

கொழும்பு, மே 13

சகோதரத்துவத்தையும், ஐக்கியத்தையும் வலியுறுத்தும் ஹஜ்ஜுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சண்டை பிடித்துக் கொள்வது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தனது ஆழ்ந்த அதிருப்தியையும், கவலையையும் தெரிவிக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் மற்றும் செயலாளர் எம். ஏ.எம்.நிலாம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன் கூடிய ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயற்குழு மற்றும் மாவட்ட இணைப்பாளர்களது கூட்டம் ஆகியவற்றில் ஹஜ் ஏற்பாடுகள் தொடர்பாக முஸ்லிம் தலைவர்கள் சண்டை பிடித்துக்கொள்வது குறித்து விரிவாக ஆராயப்பட்டு அதன் பின்பே அறிக்கை விட முடிவு செய்யப்பட்டது என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஹஜ்ஜின் பெயரால் எமது அரசியல் தலைவர்கள் பல குழுக்களாகப் பிரிந்து சண்டை பிடித்துக்கொள்வதை எமது அமைப்பு வெறுப்புடன் நோக்குகிறது.

என்றுமில்லாதவாறு அரச ஹஜ் குழு அதிகாரப் போட்டியில் ஈடுபட்டு, தம்மில் பலவான் யார் என்று காட்டுவது போன்று ஒன்றுக்கொன்று முரண்பட்ட அறிக்கைகளை விடுத்து வருகிறது. இந்த ஊடக அறிக்கைகளையும், இது தொடர்பான செய்திகளையும் பார்த்து மற்றச் சமூகங்கள் சிரிக்கின்றன.

புனிதமான ஹஜ் கடமைக்காக யாத்திரிகர்களை அழைத்துச் செல்வது நன்மைகள் நிறைந்த ஒரு நற்கிரியையாகும். பாக்கியம் மிகுந்த இந்த நற்காரியத்தைத் திறம்பட நிறைவேற்ற நியமிக்கப்பட்ட குழுவினர் தமக்கிடையில் சண்டையில் ஈடுபட்டிருப்பதானது மிக வேதனையை மட்டுமன்றி முஸ்லிம் சமூகத்தை வெட்கித் தலைகுனிய வைத்துள்ளது.

ஹஜ் யாத்திரிகர்களுக்கு உரிய வசதிகளைக் குறைந்த செலவில் செய்துகொடுக்கவேண்டிய அரச ஹஜ் குழு ஏட்டிக்குப் போட்டியாக ஊடக மாநாடுகளை நடத்துவதையும், கூட்டங்கள் நடத்துவதையும் உடன் நிறுத்தி, வேறுபாடுகளை மறந்து, ஒற்றுமையாகச் செயல்பட முன்வரவேண்டுமென சம்பந்தப்பட்டவர்களை அல்லாஹ்வின் பெயரால் எமது அமைப்பு பணிவாகக் கேட்டுக் கொள்கிறது - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூளாய் இந்து இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர் ஒருவருக்கு தமிழ்த் தேசிக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பரிசில்களை வழங்குகிறார். (9)

# விசேட தேவைக்குட்பட்ட அனைவருக்கும் சேவை வழங்க வேண்டியது அவசியம்

யாழ்ப்பாணம்,மே 13

விசேட கல்வி வள நிலையங்கள் மாணவர்களுக்கு மட்டுமல்லாது விசேட தேவைக்குட்பட்ட அனைவருக்கும் சேவைகளை வழங்கவேண்டும்.

இதன்போது சமூகத்தால் ஒதுக்கப்பட்ட விசேட தேவைக்குட்பட்டோர்கள் முன்னிலைப் படுத்தப்படுவார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன்.

இணுவில் இந்துக் கல்லூரியின் விசேட கல்வி வளநிலையத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்தவை வருமாறு:

புதிய நேரிய சிந்தனையுடன் விசேட தேவைக்குரியவர்கள் கற்றல் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்டுள்ள வளநிலையங்கள் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மட்டும் கருத்தில் கொள்ளாமல் ஏனைய விசேட தேவைக்குட்பட்டவர்களையும் இணைத்து சேவைகளை வழங்க வேண்டும்.

இந்தச் சேவை தனியொரு பிரதேசத்தில் மட்டுமல்லாமல், ஏனைய பிரதேசங்களிலும் தனது சேவைகளை விஸ்தரிக்க வேண்டும்.

தற்போதைய சூழ்நிலைகளில் விசேட தேவைக்குட்பட்டோர்களின் தேவைகள் அதிகம் என்பதால் அவற்றை நிறைவேற்ற வேண்டிய கடமைப்பாடுகள் அதிகம் உள்ளது.

இதற்கான அடித்தளம் தான் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள். விசேட தேவைக்குட்பட்டோர்கள் கற்றலில் முன்னணி வகிப்பதுடன். அவர்களின் எதிர்காலம் சிறந்ததாக அமைவதற்கும். தமது தேவைகளைத் தாமே நிறைவேற்றும் தகுதியையும் தம்முடன் வளர்த்துக் கொள்வார்கள்.

இதற்கான தார்மீகப் பணிகளை வளநிலையங்கள் முன்னின்று செயற்படுத்த வேண்டும்.

வளநிலையங்களின் பணிகள் உரிய வகையில் விசேட தேவைக்குட்பட்டவர்களைச் சென்றடைய வேண்டுமெனில் இவ்வாறான வளநிலையங்கள் பிரதேச ரீதியாக அமைக்கப்படுதல் வேண்டும்.

அதற்காக வளநிலையங்களில் சேவைபுரியும் உத்தியோகத்தர்கள் மனிதாபிமான கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் ஏனை வள நிலையங்களை விஸ்தரிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

இவற்றைக் கருத்தில் கொண்டு விசேட தேவைக்குட்பட்டோர்களின் திறமைகளை வெளிப்படுத்த இவ்வாறான நிலையங்கள் கைகொடுக்கவேண்டும் - என்றார். (ம-313)

# வசதிகள் இல்லை என்று காரணம் காட்டாது போட்டிகளில் பங்குபற்ற முயல வேண்டும்

வலி.வடக்கு,மே 13

பாடசாலை மட்டத்தில் வளங்கள் வசதிகள் இல்லை என்று கூறிக்கொண்டு இருக்காது வசதியுள்ள பாடசாலைகளில் பயிற்சிகளைப் பெற்று போட்டிகளில் பங்குபற்ற மாணவர்கள் முன்வரவேண்டும்.

மேற்கண்டவாறு வலிகாமம் கல்வி வலயக் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுகுமார் குறிப்பிட்டார்.

வலிகாமம் கல்வி வலய தடகள விளையாட்டுப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் இ.இராசேந்திரம் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் :

வெற்றியாளர்கள் ஏற்கனவே பல வெற்றிப் படிகளைக் கடந்து வந்துள்ளீர்கள். இதே போன்று நீங்கள் இன்னும் பல வெற்றிப் படிகளைத் தாண்ட வேண்டும். இதற்கு உரிய பயிற்சிகளை வெற்றியாளர்கள் தொடர்ந்தும் பெறவேண்டும்.

பயிற்சிகள் தான் வெற்றிக்குப் படிக்கல்லாக அமைகின்றது.

இன்று தோல்வி அடைந்தவர்கள் மனம் சோர்ந்து விடக் கூடாது.

நீங்களும் கூட ஏற் கனவே வெற்றிப்படிகளைக் கடந்து வந்துள்ளீர்கள். நீங்களும் அடுத்த தடவை வெற்றியை ஈட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

அதற்கான முயற்சி சிறந்த பயிற்சிகளை மேற்கொள்ளவதில் தங்கியுள்ளது.

இவ்வாறான பயிற்சிகள் வெற்றி பெறுவதற்கான இலக்கை நோக்கி அமைகின்றது. அதன் வழி தான் வெற்றியாளர்கள் உருவாக முடியும்.

இன்றைய வெற்றியாளர்கள் பல கடின மான படிகளைக் கடந்தே அடுத்த வெற்றிகளைப் பெற்றிருக்கின்றனர். இதற்குத் தொடர் பயிற்சிகளில் ஈடுபடவேண்டியது அவசியமாகும்.எதிர்காலத்தில் சிறந்த வெற்றியாளர் ஆவதற்கு இத்தகைய பயிற்சிகளே முன்னுதாரணமாக விளங்குகின்றது.

விளையாட்டு வீர வீராங்கனைகள் விளையாட்டுடன் மட்டும் நின்று விடாமல் கல்வியிலும் கவனம் செலுத்த வேண்டும். விளையாட்டுச் சான்றிதழ் மட்டும் உயர்ச்சியைப் பெற்றுத் தரும் என்று கருதக்கூடாது.

விளையாட்டுச் சான்றிதழ்களுடன் கல்விச் சான்றிதழ்களும் காணப்படுமாக இருந்தால் நாம் மிகவும் உயர்ந்த நிலைமைக்குச் செல்ல முடியும் - என்றார்.

(ம-86)

# தென்மராட்சி வலய தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி,மே 13

தென்மராட்சி வலயத்தால் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டியின் வலய மட்ட நாட்டுக் கூத்து மற்றும் எழுத்தாக்கப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

வலய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்களின் விவரங்கள் வருமாறு:-

**ஆக்கம் -எழுத்து**

தேவ ஈஸ்வரன் சோபிதன் (விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்).

**கட்டுரை வரைதல் - I**

குருதாஸ் அஜித் (மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்).

**கட்டுரை வரைதல் - II**

ஜெயரூபன் கல்யாணி (கைதடி குருசாமி வித்தியாலயம்).

**கட்டுரை வரைதல் , இலக்கியம் நயத்தல் -I**

நாகேந்திரன் கோதண்ட (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**கட்டுரை வரைதல் , இலக்கியம் நயத்தல் -II**

சின்னத்தம்பி லக்ஷியா (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்)

**இலக்கணம் - I**

யோகராசா கபீர்த்தனா (சாவகச்சேரி இந்து).

**இலக்கணம் -II**

சின்னத்துரை கோபிதா (சாவகச்சேரி இந்து.)

**திறனாய்வு**

பத்மகாந்தன் கஜிதா (மீசாலை வீரசிங்கம் ம.வி.).

**குறுநாடக ஆக்கம் -I**

அம்பிகாநிதி கார்த்திகா (வரணி மகாவித்தியாலயம்.).

**குறுநாடக ஆக்கம்-II**

சுகேந்திரன் சுஜீபன் (வரணி ம.வி).

**கவிதை ஆக்கம்- I**

பிரேமகாந்தன் பிரேமிசா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி.)

**கவிதை ஆக்கம் -II**

[illegible] (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

**சிறுகதை ஆக்கம் -I**

உதயகுமார் செந்தூரி (மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்).

**சிறுகதை ஆக்கம் -II**

பாலசுப்பிரமணியம் கிரிசா (மீசாலை வீரசிங்கம் ம.வி).

**நாட்டுக்கூத்து**

வடமோடி (கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை.)

**இசை நாடகம்**

சாவகச்சேரி இந்துக்கல்லூரி

**விசேட கூத்து**

மீசாலை வீரசிங்கம் ம.வி

**சிந்து நாடகம்**

கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. (ம-207)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், மே13

வட்டு. இந்துக்கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த ஏழாம் திகதி இடம்பெற்றன.

இந்தச் சங்கத்தின் தலைவராக சி.சிவகணேசசுந்தரன், செயலாளராக வே.சிவலிங்கம், பொருளாளராக- க.திருக்குமார் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக திருமதி க.பாலசுந்தரம், ச.இராச துரை, இ.கு.சிவஞானம், பொ.சூர சங்காரம், க.பிறேமகாந்தன், ம.கனகாம்பிகை, தி.விக்கின ஜெயம், ப.கலாயினி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை - பழைய மாணவர் சங்க நடப்பாண்டுக்கான உத்தியோகத்தர்கள் தெரிவும் கடந்த ஏழாம் திகதி பாடசாலை அதிபர் சி.சிவகணேசசுந்தரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக- ச.இராசதுரை, உபதலைவர்களாக- சி.சிவனேச சுந்தரன், பொ.காங்கேயநாதன், செயலாளர்- இ.கு.சிவஞானம் , உப செயலாளராக- ந.ஆனந்தராசா, பொருளாளராக- மு.சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக சு.சுந்தரராசா, க.விஜயகாந்தன், சி.செல்வரதி, நா.பிரபாகரி, வே.இராமகிருஷ்ணன் ஆகியோர் எண் பார்வையாளர்களாக பூ.சிவகுமார், ந.சுலோசினி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ம-313)

# ஆசிரியர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே13

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 25 வருடங்கள் தொடர்ச்சியாக ஆசிரியப் பணியாற்றி வெள்ளிவிழாக் கண்ட ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் வெள்ளி விழா நாயகர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

வண.பி.தேவமித்திரன், வண.டிஎஸ்.சொலமன்ஆகியோரது வரவேற்புரையைத் தொடர்ந்து 25 வருட ஆசிரிய பணியாளர்கள் மாலை அணிவித்து பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர் அவர்களது விவரம் வருமாறு:

திருமதி இந்திராணி ஜெயக்குமாரன் (உப அதிபர்), திருமதி இந்திராணி கணேசன் (சிரேஷ்ட ஆசிரியை), அருமைநாயகம் டானியல் அதிசயதாசன் (சிரேஷ்ட ஆசிரியரும் ஆரம்பப் பிரிவு மேற்பார்வையாளரும்), செல்வி அரியமணி தம்பிநாயகம் (சிரேஷ்ட ஆசிரியை), சிவசுப்பிரமணியம் இராஜசேகரம் (சிரேஷ்ட ஆசிரியர்), துரைச்சாமி கணேசமூர்த்தி (சிரேஷ்ட ஆசிரியை). (ம-302)

# இடமாற்றம்

தென்மராட்சி, மே13

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்பார்வைக் குடும்பநல உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திருமதி ப.தர்மலிங்கம் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
திடீர் செலவுகளைச் சமாளிக்க ஒருவரிடம் பண உதவி பெறலாம். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். உறவினர் ஒருவரைப் பற்றி ரகசியம் ஒன்றை, மற்றொரு உறவினர் உங்களிடம் சொல்லலாம். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என பயம் கொள்வீர்கள்.

**இடபம்:**
தடைகள், போட்டிகளை எதிர் கொள்ளலாம். நாளைய சில வேலைகளுக்காக இன்றே முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்கள் கிடைத்து மகிழ்ச்சி அடைவர். உறவினர்கள் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். கடன் மிகுதிகள் வசூலாகும்.

**மிதுனம்:**
முக்கியமான காரியம் ஒன்றை பெரிய மனிதர்களின் உதவியுடன் முடிப்பீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறலாம். உடன்பிறப்புகள் வழியில் சந்தோஷம் தரும் செய்தியைக் கேட்கலாம். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருளை குறைந்த விலைக்கு வாங்கலாம்.

**கடகம்:**
பொழுதுபோக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். பெரிய பிரச்சினையாகி விடுமோ என பயந்த விடயம் ஒன்று பிசுபிசுத்து போகும். விலை உயர்ந்த பொருள்களை கவனமாகக் கையாள வேண்டும். பழகிய சிலரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடக்கலாம். மனைவி, குழந்தைகளின் சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:**
கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்கும் நாள். கடந்த காலத்தில் உங்களை உதாசீனம் செய்த உறவினர்கள் இப்போது தேடி வந்து உதவி கேட்கலாம். மற்றவர்கள் செய்ய முடியாமல் தவித்த வேலை ஒன்றை நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீண்ட நாள்களாகப் பார்க்காத உறவினர்கள் சிலரைப் பார்க்கலாம். தொலைபேசி வழிச் செய்திகளால் சந்தோஷம் அடையலாம்.

**கன்னி:**
பண விடயங்களில் சிலரின் அதிருப்திக்கு ஆள் படலாம். பெற்றோருடன் மனஸ்தாபம் வராதிருக்க விட்டுக் கொடுத்துச் செல்லவும். முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றங்கள் ஏற்படலாம். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். பிறருக்காகச் செலவிடலாம்.

**துலாம்:**
இரண்டு நாள்களாக நீடித்த பிரச்சினை ஒன்று இன்று முடிவுக்கு வரும். நண்பர்களை நம்பிச் செய்த காரியம் நல்லவிதமாக முடியும். உறவினர் ஒருவருக்காக நண்பர் ஒருவரிடம் உதவி கேட்கலாம். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும். அரசியல்வாதிகள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். எதிர்பாராத தனலாபம் உண்டு.

**விருச்சிகம்:**
நினைத்த காரியங்கள் நினைத்த நேரத்தில் முடியும். ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் உங்களைப் புரிந்து கொண்டு நடப்பர். சேமித்த பணம் ஒன்றை முக்கியமான காரியங்களுக்காகச் செலவிடலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். மனதில் ஊக்கம், உற்சாகம் குடிகொள்ளும் நாள்.

**தனுசு:**
பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். வாங்கிய கடன் ஒன்றை புதிய வரவுகள் மூலம் தீர்ப்பீர்கள். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உறவுப் பெண்கள் வழியில் சில செலவுகளைச் சந்திக்கலாம். எந்த விடயம் குறித்தும் மனக்கோட்டை கட்ட வேண்டாம்.

**மகரம்:**
இறைவழிபாட்டின் மூலம் இன்பம் காண வேண்டிய நாள். குடும்ப உறுப்பினர்களுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். அயலார் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். இரண்டு நாள்களுக்கு செய்ய வேண்டிய வேலையை ஒரே நேரத்தில் செய்யலாம். தடை, தாமதங்கள், காத்திருப்புகளால் கோபம் அடையலாம்.

**கும்பம்:**
உங்களின் யோசனைகளுக்கு உறவினர்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும். பிரியமான சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் கூடும். உங்களுக்காகவோ அல்லது குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். எதிலும் நன்கு சிந்தித்து செயற்பட்டு ஆதாயம் பெறுவீர்கள். கூட்டு முயற்சி வெற்றி தரும்.

**மீனம்:**
பொறுப்புகள் அதிகரிக்கும் நாள். இல்லத்தில் நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும். மாமன், மைத்துனர்கள் உங்களின் தொழில் திட்டங்களுக்கு உறுதுணையாக இருப்பர். ஆரோக்கிய பிரச்சினைகள் அகன்று, தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். உறவினர் ஒருவர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கும். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு.

# தனது விருப்புகளை நிறைவேற்றவே இந்தியா முயல்கிறது

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன், வெளிவிவகார செயலர் நிருபமா ராவ், பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார் அடங்கிய மூவரணி விரைவில் கொழும்புக்கு வரவுள்ளது.

போர் முடிவடைவதற்குச் சற்று நெருக்கமான கால கட்டத்திலும் ஒரு தடவை இதேபோன்ற இந்திய மூவரணி இலங்கைக்கு வந்திருந்தது. அன்றைய அந்த மூவரணிக்குள் இடம்பெற்றிருந்தவர்களுள் மேனன் மட்டுமே தற்போதைய மூவரணியிலும் உள்ளார்.

அன்றைய காலகட்டத்தில் மேனன் வெளியுறவுச் செயலாளராக இருந்தார். அப்போது பாதுகாப்பு ஆலோசகராக இருந்த நாராயணன் அதிகளவு அதிகாரங்களைக் கையில் கொண்டிருந்தார். அவர் இலங்கை சம்பந்தமான விவகாரங்களில் மட்டுமல்லாது பிரபாகரன் தொடர்பாகவும் மிகத் துல்லியமான அறிவினைக் கொண்டிருந்தார்.

**எம்.கே.நாராயணன்**

பாதுகாப்பு ஆலோசகர் பதவியிலிருந்து வெளியேறிய அவர், தற்போது மேற்கு வங்க மாநில ஆளுநராகப் பதவி வகிக்கிறார். மும்பையில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவதற்குக் காரணமான பாதுகாப்பு ஓட்டைகளுக்குப் பொறுப்புச் சொல்லும் விதத்தில் பாதுகாப்புச் செயலர் பதவியிலிருந்து அவர் விலக்கப்பட்டார் என்ற கருத்தும் உண்டு.

இந்தியப் பாதுகாப்பு துறையில் காணப்பட்ட வினைத் திறனற்ற செயற்பாடுகளும் குறைபாடுகளும் காரணமாக இவரைப் பதவிவிலகும்படி காங்கிரஸின் ஆட்சி அழுத்தம் கொடுத்திருந்ததாகவும் அறியப்படுகின்றது.

இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கை வகுப்பில் நாராயணன் கொண்டிருந்த தன்னிச்சையான மனப்போக்கு, இலங்கை விவகாரத்தில் இந்தியா தன்பிடியை இழப்பதற்கும், இலங்கைத் தமிழர்களுக்கு ஓர் அரசியல் தீர்வைக் கொடுப்பதற்கான வாய்ப்பைத் தவறவிடுவதற்கும் காரணமாக இருந்தது என்ற குற்றச்சாட்டும் உண்டு.

அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகளையும் பிரபாகரனையும் அழிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் செயற்பட்டதன் மூலம், ஆயுத மற்றும் பொருளாதார உதவி என்ற பெயரால் சீனா இலங்கையினுள் பரந்து காலூன்றியதை நாராயணன் கவனத்தில் கொள்ளாமல் விட்டுவிட்டார் என்ற குற்றச்சாட்டும் உண்டு.

**டில்லியின் நாடியைத் தடவும் கொழும்பு**

இன்று இத்தகைய பின்னணிகளை மீளாய்வு செய்யும் போக்கிலேயே இலங்கை தொடர்பான இந்தியக் வெளிவிவகாரக் கொள்கை முன்னெடுக்கப்படுகிறது.

எனவே, இந்தியாவின் மூவரணி இலங்கைத் தீவினுள் வந்தடைவதற்கு முன்னரேயே இலங்கை அரசு மகிழ்ச்சியான செய்தி ஒன்றை இந்தியாவுக்கு அனுப்பி இருந்தது.

நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமலேயே இருந்து வந்த இந்தியாவின் கோரிக்கையான, காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை இந்திய நிறுவனம் ஒன்றிடம் கையளிப்பதற்கான அனுமதியை அமைச்சரவை அண்மையில் வழங்கி இருந்தது.

போர்க் குற்றங்கள் தொடர்பான ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை வெளிவந்ததைத் தொடர்ந்து இலங்கை மீண்டும் இந்தியாவின் ஆதரவில், தயவில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. அதனால் புதுடில்லியின் நாடியைத் [illegible] போக்கை கொழும்பு கைக்கொண்டாக வேண்டியுள்ளது. இலங்கைத்தீவு தொடர்பான இந்தியாவின் பட்டியலில் காங்கேசன் துறைமுகம் முதன்மையாக இருந்ததாலேயே இப்போது அவசர அவசரமாகக் கொழும்பு அதற்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளது.

அதற்கு அடுத்த நிலையில் சம்பூர் நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் காணப்பட்டாலும், இதுவரை இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களம் அது தொடர்பில் பல்வேறு கேள்விகளை எழுப்பி, திட்டத்தை இழுத்தடித்து வருகிறது. தற்போது அரச தரப்பில் இருந்து கிடைக்கும் செய்திகளின்படி அத்திட்டமும் விரைவில் அனுமதிக்கப்படவுள்ளது.


இத்திட்டங்களுக்கு எல்லாம் இலங்கை இப்போது விரைவாக அனுமதி வழங்கினாலும்கூட ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை சர்வதேச மட்டத்தில் தோல்வியடையச் செய்வதற்கு புதுடில்லி, இலங்கைக்கு உதவும் என்று கருத முடியாது.

**டில்லி ஆட்சியாளர்களுக்கு அழுத்தம்**

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக இலங்கையின் அரசியல் கட்சிகள் எப்படி ஒன்றுபட்டுள்ளனவோ அதேபோன்று மஹிந்தவுக்கு எதிராக யுத்தக்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதில் இந்திய அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு வருகின்றன.

இந்தியாவின் முக்கிய தேசியக் கட்சிகளான பாரதிய ஜனதாக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள், மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு முதல்வர் கருணாநிதியின் தலைமையிலான தி.மு.க., அதன் கூட்டுக்கட்சிகள், ஜெயலலிதாவின் அ.தி.மு.க. மற்றும் அதோடிணைந்த கூட்டுக் கட்சிகள் போர்க் குற்ற விசாரணைக்கு ஆதரவாகக் குரல் எழுப்பி வருகின்றன. அதேவேளையில் தமிழ்நாட்டில் உள்ள கட்சிகள் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு ஆதரவாக போராட்டங்களையும் தொடங்கி உள்ளன.

இந்தியாவின் அரசியல் கட்சிகளும் மக்கள் சார் நிறுவனங்களும் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக மட்டத்தில் விசாரணை செய்ய காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி ஆதரவளிக்க வேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெனக் கோபத்துடன் குரலெழுப்புகின்றன.


இத்தகைய சூழ்நிலையில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை எதிர்த்துக்கொண்டு இலங்கைக்கு ஆதரவாக இந்தியா செயற்படுவது சாத்தியமற்றதாகவே தெரிகிறது.

சுருக்கமாகக் குறிப்பிட்டால் இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை இலங்கை அரசின் ஊடாகக் கண்டடைவதே இந்தியாவின் இப்போதைய முக்கிய பணியாக உள்ளது. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கும் மேற்சென்று தீர்வினைக் காண்பதின் ஊடாக இந்தியாவின் சகல தரப்பினரையும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா நாடுகளையும் சாந்தப்படுத்துவதுதான் இந்தியாவுக்குச் சாதகமானது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னரே இந்தியா அதனை முழுமையாக வாசித்திருந்தது என்பதை இலங்கை அறியும். பான் கீ - முனின் செயலக ஆளணிகளில் முக்கிய பங்கு வகிப்பவரும், இலங்கை விவகாரத்தில் சில குற்றச் சாட்டுக்கு உள்ளானவருமான நம்பியார் இவ்வறிக்கையின் உள்ளடக்கத்தை வாசித்து அது தொடர்பாக இந்தியாவுடன் கருத்துக்களைப் பரிமாறாமல் இருந்திருப்பார் என்று இலங்கை எதிர்பார்க்கவில்லை.

இலங்கையின் இறுதிக்கட்ட போரின்போது இந்தியா நம்பியாரைப் பயன்படுத்தி போர் நிறுத்த நாடகத்தை ஐ.நா. ஊடாக முன்னெடுத்தது எனப் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் ஆழமான கருத்தைக் கொண்டுள்ளது.

மார்ச் 31ஆம் திகதியில் நிறைவு செய்யப்பட்ட ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை உடனேயே வெளியிடப்படும் பட்சத்தில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் கருணாநிதிக்கும் காங்கிரஸ் ஆட்சிக்கும் எதிராக அதனைப் பயன்படுத்துவார்கள் என்ற காரணத்தால், தமிழ்நாட்டு மாநில சட்டசபைத் தேர்தல் முடியும்வரை அறிக்கையைக் கையளிப்பதைத் தாமதிக்குமாறு நம்பியார் ஊடாக பான் கீ - மூனுக்கு இந்தியா அழுத்தம் கொடுத்தது என்ற வாதமும் உண்டு.



இலங்கையில் யுத்தம் முடியும்வரை காங்கிரஸ் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்ததா என்று தேர்தல் காலத்தில் ஜெயலலிதா எழுப்பிய கேள்வி காங்கிரஸ் ஆட்சியை தர்மசங்கடத்தில் ஆழ்த்தி உள்ளது.

### இந்தியாவின் திட்டங்கள்

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மே ஜூன் மாத அமர்வுகளுக்கு கொண்டு செல்லவிடாமல் தடுப்பதும், செப்ரெம்பர் வரை அதனை காலந் தாழ்த்துவதும் கிடைக்கும் அக்கால இடைவெளிக்குள் இலங்கையிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியவற்றைப் பெற்றுக்கொள்வதும், தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வழங்குமாறு அழுத்தம் கொடுப்பதும் இந்தியாவின் தற்போதைய திட்டமாக உள்ளதெனவும் சில தரப்புகள் குறிப்பிடுகின்றன.

இந்தியாவின் இன்றைய பெரும் சவால் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், அனைத்துலக மனித உரிமை அமைப்புகள், புலம்பெயர் தமிழ்ச்சமூகம் ஆகியவற்றை எவ்வாறு தன் விருப்புக்கு உடன்படச் செய்து தனது குறிக்கோளை அடைவது என்பது மட்டுமே.

இந்தியா கடந்த காலத்தில் பிரபாகரனையும் ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்களையும் கொண்டு இலங்கையில் சண்டையைத் தூண்டி அதனூடாகத் தனது குறிக்கோளை அடைந்தது. இதன் மூலம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை கொழும்பை ஏற்கச்செய்ததும், திருகோணமலை துறை முகத்தை தனது நேரடிக்கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததும் ஏற்கனவே நடைபெற்றுள்ளன.

போர் முடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா, தனது கைப்பிடியை - பேரம்பேசும் சக்தியை - இழந்து போனது. மாறாக இன்று ஐ.நா. அறிக்கையின் ஊடாக இந்தியா மீண்டும் தனது பேரம்பேசும் திறனை முன்னைவிட சிறப்பாகக் கெட்டியாகப் பற்றிக் கொண்டுள்ளது

### மஹிந்தரின் நம்பிக்கை

அதேவேளையில் இலங்கையை அவமதிப்பது தொடர்பாக இந்தியா உள்அச்சம்கொண்டுள்ளது என்ற கருத்தையும் மஹிந்தர் நம்புகிறார்.

அதேவேளையில், தங்கள் செயற்பாடுகள் மூலம் இலங்கையைச் சீனாவை நோக்கித் தள்ளிவிடுவதும், சீனச் சார்பு நாடாக இலங்கையை மாற்றுவதன் மூலம் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் எதிர்ப்பைத் தேடிக்கொள்வதும் இந்தியாவுக்கு விருப்புடையவை அல்ல. அப்படி எதுவும் நடந்து விடக் கூடாது என்றும் புதுடில்லி அஞ்சுகிறது.

இந்தியாவின் அழுத்தத்தை இலங்கை அரசு கையாள முனையும்போது அதனால் ஏற்படும் நிச்சயமற்றதும் ஆபத்தானதுமான சூழலுக்குள் இந்தியாயையும் கொழும்பு இழுத்துச் செல்லக் கூடும் என்ற வாதத்தையும் மறுப்பதற்கில்லை.(உ)

(நன்றி : புதினப்பலகை)

# தீயோர் !



''துஷ்டரைக் கண்டால் தூர விலகு'' இப்படியொரு பழ மொழி உண்டு. எதற்காக இந்தப் பழமொழியை உருவாக்கினார்கள்?

துஷ்டன் ஏதாவது தொந்தரவு கொடுப்பான்அதனால் அவனைக் கண்டால் பயந்து ஓடி ஒளிந்து கொள்'' என்பது இதற்கு அர்த்தமில்லை.

ஒரு துஷ்டனிடம் கிட்ட நெருங்கிப் போகிறோம் என் றால் அவன் நமக்குக் கெடு தலான ஆலோசனைகள் எதையும் செல்லாம். அல்லது அவன் தீய உணர்வுகள் உள்ளனவாக இருக்கலாம். அல்லது தீய செயல்கள் செய்யக் கூடியவனாக இருக்கலாம். இப்படிப்பட்டவனை நெருங்கிப் போனால் அவனுடைய பாதிப்பு எமக்கும் வந்துவிடும். அதனால்தான் விலகிப் போ என்று சொல்வார்கள்.

துஷ்டரை நான்குவகையாகப் பிரிக்கலாம். இந்த நான்கு வகைக்கும் உதாரணம் வேண்டும் என்றால் வேறு எங்கும் போகத் தேவையில்லை. மகாபாரத்தைப் படித்தால் போதும். அதிலே இந்த நான்கு வகையான துஷ்டர்களும் வருகிறார் கள்.

முதல் வகைக்கு உதாரணம் - சகுனி. இவன் மனதில் எப்போதும் தீய எண்ணங்களே நிறைந்திருக்கும். கனவில் கூட தீய ஆலோசனைகள் தான். யாராவது ஒருத்தர் நல்லபடியாக வாழ்ந்தால் அதை இவனால் சகித்துக் கொள்ள முடியாது. இப்படிப்பட்டவளோடு நெருங்கிய தொடர்பு துரியோதனனுக்குக் கிடைத்தது.

துரியோதனன் எப்போதும் தீய காரியங்களைச் செய்வதற்குத் தயங்காதவன். அப்படிப்பட்டவனுக்கு தீய போதனைகள் செய்வதற்கு சகுனி உதவினான். இநத இரண்டு பேருடைய பழக்கமும் துச்சாதனனுக்கு கிடைத்தது. அவன் தீய நடத்தையுள்ளவன். இந்த மூன்று பேரும் ஒன்றுசேர்ந்தால் என்ன ஆகும் தெரியுமா? உலகமே கெட்டுப்போய்விடும். இந்த மூன்று துஷ்டர்களோடும் ஒரு நல்லவன் வந்து சேர்ந்தான். அவன் தான் கர்ணன்.

கர்ணன் இயல்பாகவே உத்தமகுணம் உள்ளவன். அவன் நல்லவர்களோடு சேராமல் இப்படிப்பட்ட கெட்டவர்களோடு நட்பு வைத்துக் கொண்டான். அதனால் அவனும் தீய செயல்களில் ஈடுபடுவது போல் எண்ணத் தோன்றிவிட்டது.

துரியோதனனுடைய நண்பனாக.... அவனுடைய ஆதரவில் வளர்ந்தனால் அவனுக்குத் துணையாக இருக்க வேண்டியிருக்கிறது என்றான் கர்ணன். நட்புரிமையினாலே உதவிபுரிய வேண்டியது சரிதான். அது தப்பு என்று சொல்ல முடியாது. இருந்தாலும் தீய செயல்களுக்கு உதவி செய்வது சரியில்லை.

புத்திபலம், புஜபலம் எல்லாம் இருந்தால் கூட தெய்வ பலம் இல்லையென்றால் வெற்றிபெற முடியாது என்பது பெரியவர்களின் கருத்து.

கர்ணன் மகாவீரன்! இருந்தாலும் கடைசியில் அவன் கதி என்ன? அவனிடம் எல்லா நல்ல குணங்களும் இருந்தன. இருந்தாலும் ஏன் இப்படியான நிலைமை? தீயவர்களின் சேர்க்கை தான் காரணம். அவர்களோடு சேர்ந்ததனால் இவனையும் அப்படியே நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். நான்கு வகைத் துஷ்டர்களில் இவனும் ஒருத்தன் என எல்லோரும் கூற ஆரம்பித்து விட்டார்கள்.

அதாவது - தீய ஆலோசனைக்கு சகுனி; தீய உணர்வுகளுக்கு துரியோதனன், தீய செய்கைக்கு துச்சாதனன். தீய நட்புக்கு கர்ணன். இப்படி உதாரணமாகி விட்டானே!

அதனால்தான் ''துஷ்டரைக் கண்டால் தூர விலகு'' என்று சொன்னார்கள். அது புராண காலம்.

இப்போதெல்லாம் நிலைமை கொஞ்சம் வேறுவிதமாக இருக்கிறது. காட்டுப் பாதையில் யாரோ ஒருத்தர் அடிபட்டுக் கிடந்தார். யாரோ துஷ்டன் அவரை அடித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டான் போல் இருக்கு.


அந்தவழியாகப் போன ஒருத்தர் பரிதாபப்பட்டு அவனைப் போய்த் தூக்கி ஆறுதல் கூறினார். ''இதோ பாருங்கள்... இந்த வழியாக எப்பவும் தனியாக வரக்கூடாது. ஏனென்றால் இங்கே ஒரு திருடன் வருகிறவர்கள், போகிறவர்கள் எல்லோரிடமும் வழிப்பறி செய்வதாகக் கேள்விப்பட்டேன்'' என்றான்.

''இனிமேல் அப்படிக் கேள்விப்பட மாட்டீர்கள்'' என்றான் அடிபட்டவன். ''ஏன்?'' என்று கேட்டார் இவர். ''நான் தான் அந்தத் திருடன். இந்த வழியில் போகிறவர்களிடம் வழிப்பறி செய்தேன். அவர்கள் என்னை இப்படி அடித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்; காலம் கெட்டுப் போய்விட்டது'' என்றான் மிகவும் பரிதாபமாக.

கோ. சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனில் ஏற்படும் தீப்பிழம்புகளால் ஆபத்து: நாஸா விண்வெளி ஆய்வு



நாஸா விண்வெளி ஆய்வு மையத்தினால் சூரிய இயக்க கண்காணிப்புக் கருவியின் மூலம் சூரியனைப் பற்றி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது.

அதில் சூரியன் சுழலும் போது இருண்ட பகுதிகளுக்கும் காந்தபுலங்களுக்கும் இடையிலான செயற்பாட்டினால் கடந்த ஐந்து ஆண்டுகளில் சூரியனில் உருவான பெரிய சூரியத் தீப்பிழம்புகள் உருவானதாக இங்கிலாந்தின் மத்திய பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சூரியன் சுழலும் போது இருண்ட பகுதிகளின் இயக்கப்பாட்டினால் கடந்த பெப்ரவரி மாதம் பெரிய தீப்பிழம்புகள் உருவான்தாகத் தெரிவிக்கப்படுகிறது. சன்ஸ்பொர்ட்ஸ் அல்லது சூரியனின் இருண்ட பகுதிகளினால் காந்தப்புல சக்தி அதிகமாக உருவாவதாக ஆய்வாளர் டேனியல் பிறவுண் தெரிவித்துள்ளார்.

எலாஸ்டிக் வயர்களைக் கைகளினால் இழுப்பதன் மூலம் அந்த வயர்களில் விசை சேகரிக்கப்படுவதாகவும் அவற்றை விடும் போது சக்தியுடன் செயற்படுவதாகவும், இதனையொத்த செயல்முறையே சூரியனின் இருண்ட பகுதியில் இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சூரியன் சுழலும் போது இருண்ட வலயங்களில் உள்ள சக்தி சேமிக்கப்பட்டு அவை காந்தப்புல சக்திகளுடன் மோதும் போது பெரிய ஒளியுடன் தீப்பிழம்பாக உருவெடுப்பதாக அவர் தெரிவித்தார். க்ளாஸ் எக்ஸ் ரக சூரியப் பிழம்புகளே மிகவும் வலுவானவையாக இருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

# நிறை குறைவான புதிய கையடக்கத் தொலைபேசிகள் அறிமுகம்



ஆரம்ப காலத்தில் செங்கல் அளவுக்கு இருந்த கைத்தொலைபேசிகள் இப்போது மெலிதாகி விட்டன. தீப்பெட்டி அளவுக்குச் சிறிய அளவில் கைத்தொலைபேசிகள் வந்த போதிலும் மெல்லிய மொடல்களுக்குக் கிராக்கி இருக்கத் தான் செய்கிறது.

இதை நிறைவேற்றும் முகமாக பேப்பர் தடிமனில் ஏ.டி.எம். கார்டு போன்ற மெல்லிய கைத்தொலைபேசிகள் விரைவில் விற்பனைக்கு வர உள்ளது.

புதுமை விரும்பிகளுக்கு இது ரொம்ப பிடிக்கும் என்கின்றனர் கனடாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள். ஆன்டாரியோ, கிங்ஸ்டனில் உள்ள க்வீன்ஸ் பல்கலைக்கழக இயக்குநர் டொக்டர் ரோயல் வெர்டிகால் இதை வடிவமைத்துள்ளார்.

புதிய மொடல் குறித்து வடிவமைப்பாளர் கூறியதாவது: பேப்பர் கைத்தொலைபேசியின் எடை மிகவும் குறைவாகவே இருக்கும். மெல்லிய பலிமால் உருவாக்கப்பட்டுள்ள இதில் தற்போதைய ஸ்மார்ட் போனில் உள்ளதை விட அதிக வசதிகள் உள்ளது.

புதிய பேப்பர் போன் பயன்பாட்டில் இல்லாத போது பற்றரி சார்ஜ் குறையாது. நீண்ட நேரம் இருக்கும். அடிக்கடி சார்ஜ் செய்யத் தேவையில்லை என்பது இதன் கூடுதல் சிறப்பம்சம். ஏராளமான தகவல்களை இதில் பதிவு செய்து கொள்ளலாம். இதன் திரை 9.5 செ.மீ அளவு கொண்டது.

# கணினியின் தகவல்களை புதிய கணினிக்கு மாற்றும் வழி



கணினி என்பது மனிதனுக்கு ஒரு இன்றியமையாத பொருளாக மாறிவிட்டது. வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தினம் ஒரு தொழில்நுட்ப வசதி கணினி சம்பந்தமாக வெளிவருகிறது. நம்முடைய பழைய கணினி பழுதாகினாலோ அல்லது வேறு காரணத்துக்காகப் புதிய கணினியை வாங்குகிறோம். அப்படி வாங்கும் போது நம்முடைய பழைய கணினியில் உள்ள தகவல்கள் மென்பொருள்கள் அனைத்தையும் அப்படியே நம்முடைய புதிய கணினிக்கு மாற்ற மிகுந்த சிரமப்படுவோம்.

கால நேரமும் அதிகமாகும். இந்த பிரச்சினையைத் தீர்த்து பழைய கணினியில் உள்ள அனைத்து தகவல்களையும் சுலபமாகப் புதிய கணினிக்கு மாற்ற இரு இலவச மென்பொருள் உள்ளது.

இது முற்றிலும் PickMeApp ஒரு இலவச மென்பொருள் இருந்தாலும் தாங்கள் இந்த தளத்தில் உறுப்பினர் ஆகினால் மட்டுமே இந்த மென்பொருளை உங்கள் கணினியில் தரவிறக்கம் செய்ய முடியும்.

இந்த முறையில் நீங்கள் உங்கள் மென்பொருளை புதிய கணினியில் மாற்றும் போது நாம் செய்து வைத்திருந்த செட்டிங்க்ஸ் கூட மாறாமல் வரும் என்பது இதன் இன்னுமொரு சிறப்பம்சம்.

இந்த மென்பொருளை நிறுவச் செய்ததும் இந்த மென்பொருளை இயக்கினால் நீங்கள் புதிய கணினிக்கு மாற்ற வேண்டிய மென்பொருள்களை தேர்வு செய்து கொண்டு அதன் ரெஜிஸ்டரியை அப்படியே புதிய கணினியில் நிறுவினால் அந்த மென்பொருள் உங்களின் புதிய கணினியில் வந்து விடும்.

# புகைப்படங்களை அழகுபடுத்துவதற்கு

Photoshop பற்றி பலரும் அறிந்திருக்க வாய்ப்புண்டு. Photoshop ஐ நீங்கள் பயன்படுத்துபவர்களாகக் கூட இருக்கலாம்.

இலகுவான இந்த மென்பொருள் இலவசம் இல்லை என்பதால் சிலர் கட்டற்ற(Open source) Photoshop போன்ற மென்பொருள்களைப் பயன்படுத்துவதும் உண்டு.

அதே போன்று இணைய உலாவியினுள் இயங்கும் வகையில் Photoshop போன்ற ஏராளமான மென்பொருள்களும் உண்டு.

அந்த வகையான ஒரு மென்பொருளே Sumo Paint என்பதாகும். இந்த மென்பொருளானது பார்ப்பதற்கு Photoshop மென்பொருள் போன்றே காணப்படுகிறது. www.sumopaint.com என்னும் இணையத் தளம் மூலம் மேற்கூறப்பட்ட மென்பொருளைப் பெறமுடியும்.

# இணைய இணைப்பு இல்லாத போது மின்னஞ்சல்களை எவ்வாறு பயன்படுத்தலாம்?

எம்மில் பலர் இணையத்தை இரவில் மட்டும் அல்லது குறிப்பிட்ட அளவு மாதம் குறிப்பிட்ட KB/MB அளவு மட்டும் பயன்படுத்தும் வசதி பெற்றிருப்போம்.

இத்தகைய வசதி உள்ளவர்களுக்கு இந்த Gmail Offline பயன்படுத்தும் வசதி மிக மிக உபயோகமாக இருக்கும். நீங்கள் இணைய இணைப்புக் கொடுத்தவுடன் மின்னஞ்சல்கள் Desktop இற்கு வந்து விடும். இதனால் இணைப்பு இல்லாத போதும் நாம் மின்னஞ்சல்களைப் பார்க்கலாம்.

அதேபோல இணைப்பு இல்லாத போதும் மின்னஞ்சல் அனுப்பலாம். அவ்வாறு அனுப்பும் மெயில் Outbox இல் தங்கிவிடும். எப்போது இணைப்பு கொடுக்கிறோமோ அப்போது மின்னஞ்சல் சென்று விடும். மடிக்கணினி வைத்திருப்பவர்கள் பயணம் செய்து கொண்டே மின்னஞ்சல் பார்த்து Reply கொடுக்க வசதியாக இருக்கும்.

முதலில் உங்கள் ஜிமெயில் லொகின் செய்து settings சென்று அதில் Google Gears நிறுவப்பட்டுள்ளதா? என்று பாருங்கள். இல்லாவிட்டால் http://tools.google.com/gears/ சென்று நிறுவிக் கொள்ளவும்.

பின்னர் ஜிமெயில் more இற்குச் சென்று Labs என்பதை தேர்வு செய்யுங்கள். offline & enable கொடுத்து save செய்யவும். பின்னர் உங்கள் ஜிமெயில் inbox வந்து settings அருகில் உள்ள offline கிளிக் செய்து click next கொடுக்கவும்.

இதில் install offline access for gmail US next button கிளிக் செய்யவும். அடுத்து கேட்கும் permission ok கொடுக்கவும். ஜிமெயில் உங்கள் desktop இற்கு வந்து விடும். உங்கள் மின் னஞ்சல்கள் அனைத்தும் உங்கள் கணினிக்குத் தரவிறக்கம் ஆகத் [illegible] நீங்கள் இணைய இணைப்பு இல்லாமல் கூட மின்னஞ்சல்களை அனுப்பலாம்.

# குழந்தைகளின் மருத்துவத்துக்கு உதவும் ஐபொட்

சளி, இருமல், காய்ச்சல், தொற்றுநோய் போன்றவற்றால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும் பொதுவான முறைகள் தொடர்பாக அமெரிக்காவில் சமீபத்தில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள பரிஸ்பைடேரியன் மார்கன் ஸ்டான்லி மருத்துவமனையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இதுபற்றி மருத்துவமனையின் துணைத் தலைவர் டொக்டர் பெர்னாட் ஓ பிரையன் கூறியதாவது: எலும்பு முறிவு ஏற்படுதல், காய்ச்சல், தொற்றுநோய்களால் பாதிக்கப்படுதல் போன்ற சூழ்நிலைகளில் குழந்தைகள் மிகவும் சோர்ந்து விடுவார்கள். அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் மிகமிகப் பொறுமையாக செயற்பட வேண்டியது அவசியம்.

பொம்மைகள், விளையாட்டுப் பொருள்களைக் கொடுத்துக்கூட அவர்களது வலி, வேதனையைக் குறைக்கலாம் என்பது ஆய்வில் தெரியவந்தது. குழந்தைகளை அவர்களது போக்கிலேயே விட்டு சிகிச்சை அளிக்க சில்ரன் கம்பர்ட் என்ற திட்டம் தொடங்கப்பட்டது.

எலும்பு முறிவாலோ, ஆஸ்துமாவாலோ அவதிப்படும் குழந்தையின் வலி, வேதனையைக் குறைப்பது தான் வைத்தியரின் முக்கிய நோக்கம். அப்பள் நிறுவனத்தின் டேப்லட் கம்ப்யூட்டரான 'ஐபொட்' கொடுத்ததில் குழந்தைகள் தெம்பும் உற்சாகமும் அடைந்துள்ளனர்.

ஐபொட்டில் குழந்தைகள் மூழ்கியிருக்கும் போது அவர்களுக்கு சிகிச்சை அளிப்பது மருத்துவ தாதிகளுக்கு வசதியாக இருக்கிறது. ஐபொட் இருந்தால் [illegible] போது கூடக் குழந்தைகள் அவ்வளவாக அழுவதில்லை. [illegible] கிறது என்றும் கூறுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியுடன் கலை வளர்த்து முன்னுதாரணமாக விளங்கும் கைதடி தெற்கு சனசமூக நிலையம்

தேமதுரத் தமிழோசை தெருவெங்கும் உலா வரும் தென்மராட்சி மண்ணிலே வயலோடு வாய்மையும் வழங்கொழிக்கும் கைதடிக் கிராமத்தில் மக்களின் அறிவையும் ஆற்றலையும் மேம்படுத்த உருவான சனசமூக நிலையங்களிலே மிகவும் முன்மாதிரியாகவும் முழுமூச்சுடனும் சேவையாற்றி வரும் சன சமூக நிலையங்களில் ஒன்றாக கைதடி தெற்கு சனசமூக நிலையம் விளங்குகிறது.

இந்த நிலையம் கிராமத்தின் முன்னேற்றத்துக்காக ஆரம்பிக்கப்பட்டு இன்றைக்கு 56 வருடங்களைக் கடந்து விட்டது.

இந்தப் பிரதேசத்துக்கு ஒரு சன சமூக நிலையம் நிச்சயம் தேவை என உணர்ந்த அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ம.வேலாயுதபிள்ளை, கா. ச. செல்லையா, சு. கனகசபாபதி, வா. சுப்பையா, கா.முத்துக்குமாரசுவாமி, இ. தம்பாபிள்ளை, அ.வேலாயுதர், நா.பாலசிங்கம், த.மயில்வாகனம், கா.கனகராசா ஆகியோர் முன்னோடிகளாக நின்று 12.08.1955 இல் உருவாக்கினார்கள்.

கட்டடம் இல்லாத நிலையில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கா.ச. செல்லையா கைதடி, கொத்து வேலி என்னுமிடத்தில் இருந்த தனது காணியில் ஓலையால் வேயப்பட்ட கொட்டகை ஒன்றை 11.10.1955 ஆம் ஆண்டு அமைத்து நிலையச் செயற்பாடுகளை விஸ்தரித்தார். அந்தக் கொட்டகையை கைதடி கிராம சங்கத் தலைவராக இருந்த சமாதான நீதிவன் சி.வேலாயுதர் திறந்து வைத்தர்.

இவ்வாறான நிலையில் தமக்கு நிரந்தரமான கட்டடம் ஒன்று தேவை என்று உணர்ந்த இவர்கள் கைதடிச் சந்தியிலே உள்ள காணியில் சாவகச்சேரித் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரர் மறைந்த வ.ந.நவரத்தினம் 26.05.1962 இல் அடிக்கல் நட்டு கட்டடம் உருப்பெற்று வந்து 7 வருடங்களின் பின் பூர்த்தியடைந்தது.

இந்தக் காலப்பகுதியில் கைதடி தெற்கில் மின்னொளி சனசமூகநிலையம் என்ற பெயரில் இன்னொரு சன




சமூக நிலையமும் வே.கதிரேசன் தலைமையில் செயற்பட்டு வந்தது. முன் மாதிரியான இளைஞர்கள் பலரைச் சேர்த்து சிறப்பாகச் செயற்பட்டு வந்த இந்த நிலையத்தின் சிறப்பைக் கண்ட கைதடி தெற்கு சனசமூக நிலையத்தினர் 02.10.1971 தொடக்கம் இந்தச் சன சமூக நிலையத்துடன் இணைந்து கைதடி தெற்கு சனசமூக நிலையம் என்ற பேரில் இயக்கத் தொடங்கினார்கள்.

1972 இல் தலைவராக வே. கதிரேசன் தெரிவு செய்யப்பட்டு அவரது தலைமையில் நிலையச் செயற்பாடுகள் பல் துறைகளில் விருத்தி செய்யப்பட்டு செயற்பட ஆரம்பித்தன. அவர் தலைமையில் நிலைய அங்கத்தவர்கள் நாடகக் கலையில் அக்காலப்பகுதி மட்டுமின்றி இந்தக் காலப்பகுதி வரை முன்னணியிலேயே நிற்கின்றனர்.

பல போட்டிகளில் இவர்களது நாடகங்கள் முதற்பரிசைப் பெற்று வந்ததுடன் பாராட்டுக்களையும் அள்ளிக், குவித்து வந்தன. குறிப்பாக 'சீதா', 'வாழ்வைத் தேடிய வனஜா', 'உணர்வின் எல்லை', 'மதனா', 'பணத்திமிர்' உட்பட பல நாடகங்கள் தமது வெற்றிக்கு வழி வகுத்தன எனவும் கைதடி தெற்கு சன சமூக நிலைய நிர்வாகத்தினர் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

விளையாட்டுத்துறையிலும் தாம் சளைத்தவகள் அல்லர் என்பது போல இவர்கள் அன்று தொடக்கம் இன்று வரை தாச்சி, கரபந்தாட்டம் இன்றைய சிறப்பு விளையாட்டான கிரிக்கெட் உள்ளிட்ட சகல விளையாட்டுக்களிலும் பரிசைப் பெற்று வருவது சாதாரண நிகழ்வாகி விட்டது எனவும் நிலைய நிர்வாகிகள் கூறுகின்றனர்.

இதேவேளை-

ஒவ்வொரு ஆண்டு விழாவிலும் விளையாட்டு நிகழ்வுடன் கலை நிகழ்வுகளையும் நடத்தி, ஏனைய சனசமூக நிலையங்களுக்கு முன் மாதிரியாக இந்த நிலையம் செயற்படுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

வெள்ளிவிழாவில் தொடங்கிய கோலாகலம் பொன்விழாவில் வளர்ந்து விருட்சமாகி உள்ளது. 2005 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்ட பொன்விழாவின் சிறப்பைக் கண்டு ஏனைய சனசமூக நிலையங்களும் அதன் பாணியிலே வளரத் தம்மைத் தயார்ப்படுத்தியதனையும் அங்கு காண முடிந்தது.

தமது கலைகள் மற்றும் நாடகங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தவும் மேடையேற்றவும் தமக்கு ஒரு கலையரங்கு தேவையென உணர்ந்த இவர்கள் 1982 இல் அத்திபாரமிட்டு பல இடர்களுக்கு மத்தியிலே அதனைக் கட்டி முடித்து தமது கலைப்பசியைத் தீர்த்து வருகின்றனர்.

கல்விக்கே முன்னுரிமை கொடுக்கும் இந்தச் சனசமூக நிலையம் கல்வி நிறுவனம் ஒன்றை 'மின்னொளி கல்விக் கழகம்' என்ற பெயரில் மிக நீண்ட காலத்துக்கு முன்பே ஆரம்பித்தது. தமது பிரதேச மாணவர்கள் மட்டுமன்றி கைதடியைச் சேர்ந்த ஏனைய பிரதேச மாணவர்களும் கல்வியில் உயர்ச்சியும் சித்தியும் பெற வேண்டும் என்ற நோக்கில் நடத்தி வந்ததுடன் தற்போது அதனை தமது சன சமூக நிலையத்தின் முன்னாள் தலைவரும் வெளிக்கள பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் ஆசிரியப் பாண்டித்தியம் பெற்றவருமான பா.விஜயகுமாரிடம் பொறுப்பாக நிர்வகிக்க ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் நிலைய நிர்வாகிகளால் கூறப்படுகின்றது.

இதேவேளை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள், பல்கலைக்கழகக் கல்விக்குத் தெரிவாகும் மாணவர்கள் என்று யாவருக்கும் பாராட்டையும் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிப்பது தமது நிலையத்தின் மிக முக்கிய பங்காக உள்ளது.

கல்வியை மேம்படுத்த வருடந்தோறும் போட்டிகளையும் அதற்காக பெறுமதி மிக்க பரிசில்களையும் அள்ளி

தயா

வழங்குகின்றார்கள். இந்தச் சனசமூக நிலையம் ஏனைய சனசமூக நிலையங்களுக்குகெல்லாம் முன்னுதாரணமாக விளங்குவது பெருமைக்குரிய ஒன்றாகும்.

இவர்களின் இந்தக் கல்விச் செயற்பாட்டுக்கு புலம் பெயந்து வாழும் இந்த நிலைய அங்கத்தவர்களின் பங்களிப்பும் உதவியும் மிகப் பெரிய தொன்றாகும்.

கல்வி எமது மூலதனம். அதைக் காப்பதும் வளர்ப்பதும் எமது கடமை என்று இந்த நிலையத்தினர் மனதில் கொண்டு செயற்பட்டு தம்மைச் சார்ந்த சுற்றாடலையும் மேன்மையடையச் செய்கின்றனர்.

(தொடரும்)

# சொந்த மண்ணில் வாழ ஏங்கிய நிலையில் காத்திருக்கும் எழுதுமட்டுவாழ் மக்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

தெங்கு வளம் நிறைந்த பிரதேசமான எழுதுமட்டுவாழில் சகல வசதிகளுடனும் அந்தப் பகுதி மக்கள் வாழ்ந்து வந்தனர். கடந்த 2000 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் இந்தப் பகுதி மக்களின் வாழ்வு துரதிஷ்டவசமான நிலைக்குத் தள்ளப்பட்டது.

அந்த வகையில் பல்வேறு இடங்களில் சொந்த நிலம் இன்றி வாடகை வீட்டில் வாழ்ந்து வருகின்றார்கள். இதேவேளை ஏதோ ஒரு வகையில் திருமண பந்தத்தில் இணைக்கப்படுவோர் கூட வாடகை வீட்டில் வசிக்கும் அவல நிலை உள்ளது. இந்தக் குடும்பத்துக்குத் தேவையான வீடுகளை அமைப்பதற்கு கூட ஓர் அடி சொந்த நிலமும் இல்லையென இந்தப் பகுதி மக்கள் வேதனையுடன் தமது தலைவிதிகளை எண்ணிக் கலங்கி நிற்கின்றனர்.

யுத்தச் சூழ்நிலை அற்ற நிலையிலும் கூட இந்த ஊர் மக்கள் தம்மை மீளக் குடியமர்த்தாத காரணத்தால் விரக்தியான மனநிலையில் காணப்படுகின்றனர். ஏனைய பிரதேசங்களில் மீளக்குடியமர்வு நடைபெறுகின்ற போதிலும் எழுதுமட்டுவாழ் கிராமத்தில் மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை.

கடந்த வருடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான உயர் அதிகாரிகள் எழுதுமட்டுவாழ் சந்தியில் அப்பகுதி மக்களை அழைத்துச் சென்று மீள் குடியமர்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. அன்றைய தினம் ஒரு சிலரை மட்டும் அவர்களின் சொந்த இடத்துக்கு அழைத்துச் சென்ற படையினர் இனிமேல் வரவேண்டாம் எனக் கூறினர். தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கான ஆயத்தங்களுடன் இருந்த மக்களுக்கு படையினர் தெரிவித்த தகவல் பேரிடியாக இருந்தது. இந்தப் பிரதேசத்தில் இன்னமும் வெடி பொருள்கள் அகற்றப்படாததால் இரண்டு மாதங்களின் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அதன் பின்னர் வருமாறும் தெரிவித்தாகக் கூறப்பட்டது.

12 மாதங்களின் பின்னர் இந்தப் பிரதேசத்தில் வெடி பொருள்கள் அகற்றப்பட்டதற்கான சான்றிதழ் வெடிப் பொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்ட நிறுவனத்தினரால் பிரதேச செயலரிடம் கையளித்துள்ளதாக அறிந்த பெருமளவு மக்கள் தமது குடியிருப்புகளைப் பார்க்கச் சென்றனர். யுத்தமற்ற இக்காலத்தில் ஒரு வருடத்துக்கு முன்னர் காணப்பட்ட பல வீடுகள் முழுமையாக அழிக்கப்பட்ட நிலையில் இருந்தது கண்டு வேதனையடைந்தனர்.

இங்கு வந்த படையினர் பிரதேசத்தில் இன்னமும் வெடி பொருள்கள் அகற்றப்படவில்லையெனக் கூறினர். பிரதேச செயலரிடம் சான்றிதழ் வழங்கப்பட்டதாக சுட்டிக்காட்டியபோது, பிரதேசத்தின் ஒரு சிறு பகுதியுடன் கரம்பகம் பகுதியே வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டதாகவும் எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் வெடி பொருள்கள் அகற் றப்படவில்லையெனவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. வெடிப்பொருள் அகற்றப்பட்டதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டதாக அறிந்த மக்கள் தமது சொந்தக் காணிக்குள் குடியிருப்பதற்காகத் தமது உடைமைகளுடன் புறப்பட்ட பல குடும்பங்கள் ஏமாற்றமடைந்தன.

எழுதுமட்டுவாழை அண்டிய கரம்பகம், ஒட்டுவெளி ஆகிய கிராமங்கள் மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டபோதிலும் இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த பெருமளவு மக்கள் எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் மீள்குடியமர்வு இடம் பெறாததால் தாமும் மீளக்குடியமர முன்வரவில்லை. ஏனெனில் இந்தப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானோர் எழுதுமட்டுவாழ் பகுதிகளில் பல்வேறு வகையான தொழில்களை மேற்கொண்டு வந்ததால் அந்தப் பகுதி மக்களுடன் தாமும் தமது வீடுகளுக்குச் செல்வதாகச் கூறி மீளக்குடியமரப் பின்னடித்து வருகின்றனர்.

இப்பிரதேச மக்கள் தம்மை மீளக் குடியமர்த்துமாறு உரிய அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கும் போது தமக்கு மீள்குடியமர்த்துவதற்கான அனுமதி இதுவரை தமது உயர் மட்டங்களில் இருந்து கிடைக்காததால் தம்மால் எதுவும் செய்ய முடியவில்லையெனக் கை விரிக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தின் பல இடங்களிலும் தமது உறவுகளுடன் சுக, துக்கங்களைப் பகிர்ந்து கொள்ள முடியாமல் தவிக்கும் பெரியவர்கள், இளம்பராயத்தினர், சிறுவர்கள் அனைவரினதும் ஏக்கம், ஆசை, கனவு தமது சொந்த இடத்தில் மீளவும் சென்று உறவுகளோடு சேர்ந்து

ஐயந்தன்

வசிப்பதுதான்.

பிரதேச மக்களின் துயரங்களைக் கவ்னத்தில் கொண்டு விரைவில் அவரவர் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அந்தப் பகுதி மக்கள் கோருகின்றனர்.

இந்த விடயத்தில் உ்ரியவர்கள் சிறந்த முடிவெடுப்பார்கள் என மக்கள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்குண்டு

பலாலி வீதியில் கோண்டாவில் டிப் போவுக்கு அருகில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:-0770778512


## பரீட்சை மண்டபம் இடம் மாற்றம்

மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ் மாணவரால் நடத்தப்படவுள்ள உயர்தரப் பரீட்சைக்கான மண்டபம் தவிர்க்க முடியாத காரணங்களால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவிருந்த உயர்தரப் பரீட்சை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் குறித்த தினத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

## திருமுறை முற்றோதல்

அகில இலங்கை திருமுறை மன்றத்தினால் நாயன்மார்கள் நால்வரையும் ஆலயங்களில் எழுந்தருளச் செய்து மாதந்தோறும் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த மாதம் திருமுறை முற்றோதல் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நாயன்மார்களை எழுந்தருளச் செய்து முதலாம் முற்றோதல் இடம்பெற்று மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் மேற்கு மணியர்பதி சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இரண்டாம் முற்றோதல் நிகழ்வு இடம்பெறும். (ற-313)

## விபத்தில் மூவர் காயம்

மீசாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிளும்-சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் பாடசாலை மாணவி உட்பட இருவர் காயமடைந்தனர். மீசாலை வடக்கைச் சேர்ந்த பாடசாலை மாணவியான எஸ்.ஜனனி (வயது 17) என்பவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த மீசாலை மேற்கைச் சேர்ந்த பீ.ஜெயசீலன் (வயது 47) என்பவருமே காயமடைந்தவர்களாவர். இதேவேளை மீசாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் இதே இடத்தைச் சேர்ந்த எம்.சுகன்யா (வயது 26) என்பவர் காயமடைந்தார். விபத்துக்களில் காயமடைந்த மூவரும் சாவகச்சேரி வைத்தியயில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-207)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது வித்தியாலயத்தின் ஆசிரியரான
**திருமதி ஞானவசந்தி ஜெயகுமாரன்**
அவர்களின் அன்புத் தாயார் திருமதி
**ஞானப்பூங்கோதை சண்முகநாதன்**
அவர்கள்
'இந்நில வாழ்வு முடித்து விண்ணில வாழ்வு எய்திய'
31 ஆம் நாளாகிய இன்று எமது வித்தியாலயம் சார்பில் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(48,20,24) (4108) ஆசிரியர் நலன்புரி சங்கம், கிளி/கனகபுரம் ம.வி.,கிளிநொச்சி.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்: 02.02.1978
விண்ணில்: 13.05.2009

அமரர்
**இராமலிங்கம் பிரபாகரன்**
(நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்,
கண்டாவளை - D.S.Office)

பண்பின் சிகரமே
பாசத்தின் உறைவிடமே
வழிமேல் விழி வைத்து
வருவாய் என்று காத்திருந்தோம்
வழி மறந்து விண்ணுலகம் சென்றதேனோ?
ஈராண்டுகள் உருண்டோடியும்
உம் நினைவில் வாழ்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தும்பளை மேற்கு, பருத்தித்துறை. (48,20,24) (f/575969) குடும்பத்தினர்

## ஓராண்டு நினைவலைகள்



பிறப்பு 24.02.1935
இறப்பு 24.04.2010

திருமதி பொன்னுத்துரை
பரமேஸ்வரி (சீனத்தி)
திதி: ஏகாதசி

ஓராண்டு சென்றதம்மா - நீ
எமை விட்டு சொர்க்கம் சென்று
நம்ப மறுக்கின்றன நமதுள்ளம்,
நீ எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும்போது
எப்படி சாத்தியம் இது?
ஓராண்டென்ன, ஓராயிரம் ஆண்டு போனாலும்
உன் நினைவு போகாது
எம் நினைவை விட்டு அம்மா!

நி.மு-சாயுடை, மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை
த.மு-இல.83, மணியகாரன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (4127) (39-50-20) கணவர், பிள்ளைகள்.

## 2 ஆம் ஆண்டு நீங்கா நினைவுடன்

**செல்வச்சந்திரன்**
**கானப்பிரியா**
மறைவு: 13.05.2009



தமிழ்க் குலத்தின் பிறப்புக்கு
அர்த்தம் தந்த பெண்ணவளே
உடல்வலு இழந்தபோதும்
உள்ளமதில் உறுதிகொண்டாய்
கற்றவை அத்தனையும் கசடறக் கற்றுவந்தாய்
கற்றவழி நின்று மற்றவரின்
நம்பிக்கை பெற்றாய்
பூஞ்சோலையாய் இருந்த எம் வாழ்வை
பாலைவனமாக்கி பிரிந்து நீ சென்றாய்
பெற்றவரை மனமிருத்தி
உடன்பிறப்பின் பற்றதனை
பத்திரமாய் பொத்தி வைத்து
உற்றவரை தான்பிரிந்து
உவகையுடன் விடை பெற்றாய்
இத்தனையும் நீ எமக்கு
இறுதியாய் தந்தவை என்று
எள்ளளவும் நாம் எண்ணவில்லை
புரியாத உள்ளங்கள்
புரியும் காலம் புலரும் வரை
பழையன கழிதலும் புதியன புகுதலுமாய்
புலர்ந்து வரும் புதுவேகப் பொழுதொன்றில்
அகிலமே போற்றும் கலங்கரை
ஒளிவிளக்காய்
எம் மனங்களில் என்றும் நீ இருப்பாய்
உன் ஆத்மாவின் ஏக்கத்தை சுமந்தபடி
உன் உறவுகள்
மல்லாவி. (48,25)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 14 . 03 . 1963
இறைவன் மடியில் 13 . 05 . 2009

அமரர்
**அம்பிகைபாகன் தவநேசன் (ராசன்)**
திதி: 22.04.2011

ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ
ஐயா உந்தன் முகம் கண்டு
ஆறவில்லையே எம் மனது
அனலாய் தகிக்குது உன் நினைவு
பார்புகழனே உன் பாலகர்களை
எப்படி மறந்தாய் நீ அன்று
பக்கம் இருந்த உன்துணையை
எப்படிப் பிரிந்தாய் மனம் துணிந்து
பாசம்கொண்ட உன் உறவுகளைப்
பரிதவிக்க ஏன் விட்டாய்?
பாசவிழிகளில் நீர் சொரிந்து ஏங்குகிறோம்
உன் நினைவுகளில்...

கோப்பாய் வடக்கு,
பூதர்மடம், கோப்பாய். (4104)(39-20-50) மனைவி, பிள்ளைகள்,
உடன் பிறப்புக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய இடமாற்றங்கள் வரலாற்றுத் தவறானவையா?

வடக்கு மாகாணக் கல்விப் புலத்தில் ஒரே பரபரப்பை ஏற்படுத்தின. ஆசிரிய இட மாற்றங்கள் பற்றிய செய்திகள். வட மாகாணக் கல்வி நிர்வாகம் திருமலை யிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்த அதிர்ஷ்டமோ என்னவோ - இடமாற்றப் பட்டியல்கள் வெளிவருவதும் இரத்துச் செய்யப்படுவதும் பின்பு அரைகுறைப் பிரசவமாக நடைபெறுவதும் பல்வேறு செல்வாக்குள்ளவர்கள் தப்புவதும் அப்பாவிகள் அலைக்கழிவதும் வழக்கமாகிவிட்டது. அது மாத்திரமல்லாது கல்வி நிர்வாகிகளுக்கான இடமாற்றங்களும் விரைவில் நடக்குமெனப் பரவலாகக் கதைகள். அதையும் பொறுத்திருந்து பார்த்து ரசிக்கலாம்.

வன்னிப் பாடசாலைகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. வன்னிச் சிறார்களின் கல்வித் தேவைகள் சீர்செய்யப்பட வேண்டுமென்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், இந்த வன்னிக்கான இடமாற்றங்கள் நடப்பதன் பின்னணியைச் சிறிது ஆழமாக ஆராய்ந்தால் பல உண்மைகள் வெளிவரும்.

1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு தமது தாயகமாம் யாழ்ப்பாணத்தை நோக்கி ஆயிரக் கணக்கான அதிபர், ஆசிரியர்கள் இடம்பெயர்ந்தனர். தங்களை வடபகுதியிலேயே கடமையாற்ற அனுமதிக்கவேண்டுமெனவும் மன்றாடினர். அப்போது கல்வி அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க அதே வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பே பழைய பாடசாலைகளுக்குத் திரும்ப வேண்டுமென உத்தரவிட்டார். கலவரத்தில் உயிரிழந்தவர்களைத் தவிர பலத்த காயமடைந்தவர்கள் கூடத் தமது தொழிலைக் காப்பாற்றுவதற்காகத் திரும்பிச் சென்றமை சரித்திரம்.

பிற்பட்ட காலங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல்களின் நெருக்கடி நிமித்தம் கொழும்பு, மலையகம் போன்ற தென்பகுதிக்கு இடமாற்றம் கோரிய ஆசிரியர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. காரணம் அப்போது யாழ். மாவட்டத்துக்கு வேறு இடங்களிலிருந்து எவரும் வரத் தயாராக இருக்கவில்லை.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியவர்கள் (வெளியேற்றப்பட்டவர்கள்) போக்கிடம் தெரியாது அலைந்து திரிந்த நேரத்தில் பெரும்பான்மையான ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் கோரினர். ஆனால் வடக்கு, கிழக்கு மாகாண கல்வி நிர்வாகம் இவர்களை யாழ்ப்பாணத்திலிருந்து விடுவிக்க மறுத்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளும் ரணில் விக்கிரமசிங்கவும் ஏற்படுத்திய புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் எமது கல்வி நிர்வாகம் யாரால் நெறிப்படுத்தப்பட்டதென்பது அனைவருக்கும் தெரியும். அந்தக்காலப் பகுதியில் கூட யாழ்ப்பாணத்திலிருந்து எவரும் வன்னிக்கு வலிந்து மாற்றப்படவில்லை. வன்னிக்குத் தேவையான ஆசிரியர்கள் கல்விக் கழகத்தால் தொண்டர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு குறிப்பிட்ட தொகை கொடுப்பனவாகவும் வழங்கப்பட்டது.

இதில் பெருந்தொகையான தொண்டர் ஆசிரியர்கள் இன்னும் நிரந்தர நியமனம் இல்லாமலும் எவ்வித கொடுப்பனவுமின்றித் தொடர்ந்து கடமையாற்றும் துன்பத்தை - கவலையை - யாரிடம் சொல்லி ஆற முடியும்?

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆரம்பித்த போரால் யாழ். மாவட்டம் வெளி உலகத்திலிருந்தே தனிமைப்படுத்தப்பட்டது. திறந்த வெளிக் கைதிகளாகப் பல வருடங்கள் வாழ்ந்தோம். பணம் இருந்தாலும் வாங்க உணவுப் பொருள்கள் இல்லாது பட்ட துன்பத்தை மறந்து விட்டோமோ? பால்மா இல்லாது குழந்தைகள் இறந்ததை, பல மாதங்கள் பாடசாலைகள் இயங்காது சிறுவர்கள் கூலி வேலைக்கு அலைந்ததை அந்த நாள் காட்சிகளை நினைத்தாலே நெஞ்சுவெடிக்கும்.

வன்னியிலிருந்தும் வெளிமாவட்டங்களில் இருந்தும் யாழ். மாவட்டத்துக்கு வந்து மாட்டிக் கொண்டவர்கள் திகைத்து நின்றனர். பல மாதங்களின் பின் பல இழுபறிகளுக்குப்பின் வட மாகாணக் கல்வி நிர்வாகம் ஒரு தொகை 'அட்வான்ஸ்' கொடுக்க முன்வந்தது.

இந்த இடம்பெயர்ந்த ஆசிரியர்களைப் பார்த்து அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கத் திருமலை யிலிருந்து ஓர் உயர் அதிகாரி கூட யாழ்ப்பாணம் எட்டிப் பார்க்கவில்லை.

ஓரளவு யுத்தம் தணிய உடனடியாகத் திரும்பும்படி உத்தரவு மட்டும் அனுப்பினார்கள். கூடாரங்களில் இருந்த லட்சக் கணக்கான மாணவர்களுக்கு எந்த வசதியுமில்லாதிருந்த போதும் எமது ஆசிரியர்களைக் கற்பிக்கவரும்படி உத்தரவுகள் வந்தன. ஆனால் தேர்தலொன்று வந்ததால் அரசியல்வாதிகளின் செல்வாக்கால் கல்வித்தேவை அரசியலுக்குப் பலியாகிய பரிதாபத்தை யாருக்குச் சொல்லலாம். மாகாணக் கல்வி நிர்வாகிகளது சண்டித்தனம் அடங்கிப் போயிற்று. வன்னிக்கு ஆசிரியர்கள் வரத்தேவையில்லை என்றார்கள்.

இந்தக் காலப் பகுதியில்தான் யாழ்ப்பாணத்தில் தினமும் சராசரி பத்துப் பேரென ஆயிரக்கணக்கில் வீதிகளில் சடலங்களாகக் காணத் தொடங்கினர். இதில் அதிபர்கள், ஆசிரியர்களும் அடங்குவர். யார் சுடுகிறார்கள்? ஏன் சுடுகிறார்களெனத் தெரியாது வாய் பொத்தி மூச்சுவிடாது இருந்தோம். ஆனால் பாடசாலைகளில் பரீட்சைகள் திட்டமிட்டபடி பெயருக்கு நடந்தன.

யாழ்ப்பாணம் உறைந்திருந்த காலமது. தனிப் புகைப்படம், குடும்பத்துடனான புகைப்படம் என விதவிதமான புகைப்படமெடுத்து நீண்ட வரிசையில் நாள் கணக்கில் காவலரண்களுக்கு முன்னே நின்று கையளித்தோம். இருந்தும் யாழ்ப் பாணத்துக்கு வெளியே போவதென்றால் ''பாஸ்'' எடுப்பதற்குப் பட்ட துன்பமும் எல்லாவற்றையும் எவ்வாறு தான் மறந்தோம்? இன்று எமக்கிருக்கும் ''பெரிய'' நிர்வாகிகள் தானே அனைத்துக்கும் சூத்திரதாரிகள்.

மாகாண கல்வி நிர்வாகிகள் அப்போது வன்னிக்குத்தான் போகவில்லையென்றால் யாழ்ப்பாண அதிபர், ஆசிரியர்களது பிரச்சினைகளைத் தீர்க்க இங்காவது வந்தார்களா?

ஆனால் வடமாகாண நிர்வாகிகள் திருமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம்மாற வேண்டிய ''கட்டாயம்'' வந்தபோதுதான் வன்னிக் குழந்தைகள் மீது அதீத அக்கறையும், பரிவும் அதற்காக ஒழுங்கற்ற இடமாற்றங்களும் நடந்தேறுகின்றன.

1987 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாண கல்வி நிர்வாகம் ஆரம்பித்தவுடன் முதல் நடவடிக்கையே அனைத்துக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பிரதேச வேறுபாடின்றி நடைபெற்ற கல்விப் பணிப்பாளர்கள் இடமாற்றம் தான். அதிபர், ஆசிரியர் இடமாற்றமல்ல. உதாரணத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்புக்கும், மட்டக்களப்பிலிருந்து முல்லைத்தீவுக்கும் இவ்வாறு அனைவருக்கும் வழங்கப்பட்ட இடமாற்றங்களை யாருடைய செல்வாக்குக்கும் உட்படாது உறுதியாக நடந்தன. ஆனால் அப்போது எந்த அதிபரும், ஆசிரியரும் பலாத்காரமாக இடமாற்றப்பட்ட தில்லை.

இந்த நிலையில், மாகாண நிலைக் கல்வி அலுவலர்களது செயற்பாடுகள் எவ்வாறானவை என்பதைச் சிறிது சிந்திக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணம் இணைந்து நிர்வாக அலகு திருமலையிலிருந்த போது உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாகப் பிரிந்தன. வடமாகாணக் கல்வி நிர் வாகம் திருமலை வரோதய நகரில் சில வருடங்களாகப் போதியளவு வசதிகளின்றி இயங்கி வந்தது. வடக்கு மாகாணக் கல்வி நிர்வாகிகள் ஏறத்தாழ அனைவருமே யாழ்ப்பாணத்தவர்களாக (ஓரிருவரைத் தவிர) இருந்தார்கள். இவர்கள் வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகத்தில் இணைந்ததுக்கும் சேர்ந்ததுக்கும் தனித்தனிக் கதைகள் உண்டு. ஆனால் வடமாகாணக் கல்வித் திணைக்களத்திலிருந்த நிர்வாகிகள் வெற்றிடங்களை நிரப்ப யாழ்ப்பாணத்திலிருந்த எவருமே போக ஆயத்தமாக இருக்கவில்லை. யாழ்ப்பாணத்துக்கு வெளியில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் பல அனுகூலங்களைப் பெற்றமையும் மறுக்கமுடியாது. தமது பதவி உயர்வுகளுக்கான பரீட்சைகளில் இலகுவாகத் தோன்றி உயர்பதவிகளில் இருப்பது தமது பிள்ளைகளுக்குக் குறைந்த புள்ளிகளோடு பல்கலைக்கழக அனுமதி பெற்றமை போன்ற பலவற்றையும் குறிப்பிடலாம்.

தாம் வந்தவுடனேயே யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிவர்களுக்குப் படிப்பினை காட்டுவது போன்று களமிறங்கியதாகத்தெரிகிறது. வட மாகாணத்திலுள்ள மடுப்பிரதேச ஈரற்பெரியகுளப் பிரதேசத்திலுள்ள ஆசிரியர்கள் கூட வடமாகாணத்தின் அடுத்த எல்லைக்கு -மருதனார்மடத்துக்கு யாழ்.நகர் தாண்டிச் செல்ல வைத்த திறமை எப்படி?

யாழ்ப்பாணத்திலிருந்த அதிபர், ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள் வளமான- வசதியான- வாழ்க்கை வாழ்ந்து வந்தவர்கள் என்ற எண்ணத் தோடு இடமாற்றம் நடக்குமானால் -இது ஒரு வரலாற்றுத் தவறு என்பதை மறுக்க முடியாது.

**வடக்கான்**

# ஐ.நா. வரையறைகளை மீறியதா நிபுணர் குழு நியமனம்?

உலக நாடுகளின் உச்ச பீடமாகக் கருதப்படும் ஐ.நாவின் கண்களில் இன்று இலங்கை ஒரு குற்றமிழைத்த நாடாகப் பார்க்கப்படுகின்றது.

இந்த நாட்டில் தலைவர்கள் என்று கூறப்படும் அனைவரும் தமிழர்களின் பெரும் பகுதியினரைத் தவிர ஐ.நா. வையும் அதன் செயலாளர் நாயகத்தையும் அவரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவையும் திட்டித்தீர்க்காதவர்கள் இல்லை.

ஐ.நா.சபை என்பது தனி நாடும் அல்ல தனியார் நிறுவனமும் அல்ல. உலக நாடுகள் பலவும் ஒன்று சேர்ந்து இரண்டு உலக மகா யுத்தங்களின் பின்னர் அமைதியை நிலைநாட்டிக் கொள்வதற்காக அமைத்துக் கொண்ட ஓர் அமைப்பு. அதன் நடைமுறை செயற்பாடுகள் யாவும் ஒரு வரைமுறைகளின் படி நடப்பவை. அந்த வரைமுறைகள் எல்லாம் உறுப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. அதன் செயற்பாடுகளை- கொள்கைகளை - வகுத்து வழங்குகின்றது அதன் சாஸனம்.

ஐ.நா.செயலாளர் நாயகமும் அவ்வாறு வரைமுறைகளுக்கு அமைவாகச் செயற்படும் ஒருவரே.

இந்த வரை முறைகளை ஏற்றுக் கொண்ட நாடுகளே ஐ.நா. உறுப்பு நாடுகளாக இருந்துவருகின்றன. அவ்வாறான நாடுகளில் ஒன்றுதான் இலங்கையும்.

**நிபுணர் குழுவும் செயற்பாடுகளும்**

செயலாளர் நாயகம் தமக்குரிய அதிகாரங்களைப் பிரயோகித்து இலங்கையில் இடம்பெற்றனவாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கென மூவர் அடங்கிய நிபுணர் குழுவொன்றை அமைத்தார். அந்தக் குழு தன் விசாரணைகளை மேற்கொள்வதற்கு இலங்கை வர முயன்று தோல்வியுற்றது. இலங்கை அரசு, அந்தக்குழு இலங்கைக்கு வந்து விசாரணைகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கவில்லை. ஏன் அனுமதிக்கப்படவில்லை என்பதற்கு தமது தரப்பில் பல நொண்டிக் காரணங்கள் அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளன.

முக்கியமான மறைமுகக்காரணம் இங்குள்ள பலரும் பாதிக்கப்பட்ட தமிழ்த் தரப்பினர் இறுதி யுத்தத்தின் போது தாம் நேரில் கண்டவைகளை- கேள்விப்பட்டவைகளை- முகம் கொடுக்க நேர்ந்த அனுபவங்களை- நிபுணர் குழுவிடம் அது சர்வதேச மற் றும் ஐ.நா குழுவென்பதால் பயமோ தயக்கமோ இன்றி வெளியிட்டு விடுவார்கள். அவை இலங்கைக்கு எதிரான பாரதூரமான சாட்சியங் களாகவும் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கலாம். போரின் இறுதிக் கட்டங்களின் போது சுயேச்சையான ஊடகங்கள், சர்வதேச அமைப்புக்கள் எதுவும் அங்கு அனுமதிக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

நிபுணர் குழுவினர் இலங்கைக்கு வராமலே தமக்கு இரகசியமாகக் கிடைத்த தகவல்கள் அறிக்கைகள், சர்வதேச நிறுவனங்களின் குறிப்புகள், சுயேச்சை ஊடகங்கள் மற்றும் செயற்கைக் கோள் தகவல்கள், படங்கள் முதலியவற்றை அலசி ஆராய்ந்து தனது அறிக்கையைத் தயாரித்து செயலாளர் நாயகத்திடம் வழங்கியுள்ளது. அந்த அறிக்கையில் சில முக்கிய சிபாரிசுகளையும் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கைக்குப் பதிலளிக்க வேண்டியது அரசின் பொறுப்பு. ஐ.நாவின் சார்பிலேயே செயலாளர் நாயகம் செயற்பட்டுள்ளார். அவருக்குள்ள அதிகாரத்தின்படியே நிபுணர் குழுவும் நியமிக்கப்பட்டது.

நிபுணர் குழுவை நிராகரிப்பது ஐ.நா. செயலாளரை நிராகரிப்பதாகும். செயலாளரை நிராகரிப்பது ஐ.நாவை நிராகரிப்பதாகும். ஐ.நாவை நிராகரிப்பது அதன் உறுப்பு நாடுகளை மறுப்பதாகும். அரசு விரும்பாவிட்டாலும் அதன் செயற்பாடுகளே இந்த விவகாரம் பாதுகாப்புச் சபைக்குச் செல்லும் நிலையைத் தோற்றுவித்து விடலாம். அப்படியான நிலைமை ஏற்படும்போது இலங்கையின் நட்பு நாடுகளான ரஷ்யாவும் சீனாவும் கூட மௌனம் சாதித்து விடக் கூடும்.

**ரம்யன்**

எனவே, இலங்கை அறிக்கையைப் புறந்தள்ளிவிடாமல் விவேகமாகவும் உயர் ராஜதந்திரத்தோடும் செயற்பட வேண்டிய காலம் இது. நாட்டுக்குள் அரசியல் கட்சிகளை வீழ்த்தி வெற்றி காணும் அரசியல் தந்திரம் சர்வதேச மட்டத்தில் ராஜதந்திரமாகப் பயன்பட மாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானிடம் மன்னிப்புக் கோர முடியாது
# அமெரிக்க அரசு மீண்டும் திட்டவட்டம்

வாஷிங்டன், மே 13

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானியின் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் விதமாக,''ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட விவகாரத்தில் மன்னிப்புக் கேட்க முடியாது'' என்று மீண்டும் அமெரிக்கா திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்த ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட விவகாரத்தில், பாகிஸ்தானின் இறையாண்மையை அமெரிக்கா மீறிவிட்டது என்றும், ஒருபட்சமாக நடத்தப்பட்ட செயல் என்றும் கடந்த திங்கட்கிழமை கிலானி குற்றஞ்சாட்டியிருந்தார்.

அவரது குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் விதமாக கடந்த செவ்வாய்க்கிழமை வெள்ளை மாளிகை ஊடகச் செயலர் ஜே கார்னே கூறியவை வருமாறு:-

அந்த நடவடிக்கைக்காக நாங்கள் மன்னிப்புக் கேட்கப் போவதில்லை. பிரச்சினைகளிலிருந்து வெளிவர இரு தரப்பு உறவும் மிக மிக முக்கியம். அதேநேரம் சிக்கலானதும் கூட. கடந்த காலத்தில் பாகிஸ்தான் ஒத்துழைப்பு தந்ததைப் போலவே, எதிர்காலத்திலும் தரும் என்று நம்புகிறோம்.

அபோதாபாத்தில் ஒசாமா நீண்ட நாள் தங்கியிருந்ததற்கு உள்நாட்டிலேயே எவராவது உதவியிருப்பார்களா என்பதற்கான ஆதாரங்கள் அபோதாபாத்தில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் இருக்கின்றனவா என்று அமெரிக்க அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

பாகிஸ்தான் உடனான அமெரிக்காவின் உறவு மிகவும் முக்கியமானது. குறிப்பாக, அமெரிக்காவின் பாதுகாப்புக்கு உகந்தது. இவ்வாறு ஜே கார்னே தெரிவித்தார்.



ஆஸ்திரேலியா வந்திருந்த லண்டன் ஒலிம்பிக் போட்டியின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் செபஸ்டியான்கேயே (வலது), அந்த நாட்டு பிரதமர் ஜூலியா கிலார்டை, கான்பெராவில் உள்ள அவரது அலுவலக இல்லத்தில் சந்தித்து பேசினார்.

# லிபியாவில் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு

லிபியாவில் உடனடியாக சண்டை நிறுத்தம் கோரி ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூன் அரசுத் தரப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஐ.நா.பொதுச் செயலாளர் இது குறித்துக் கூறுகையில்,''தான் லிபிய அதிகாரிகளுடன் செவ்வாய்க்கிழமை இரவு பேசியதாகவும், பொதுமக்களை கண்மூடித்தனமாக அரசுப் படைகள் தாக்குவதை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டதாகவும்'' கூறினார்.

ஜெனீவாவில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் அவர் பேசியபோது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனித நேய அடிப்படையிலான உதவிகளைச் செய்வதற்கு தொண்டர்கள் தங்கு தடையின்றிச் செல்வதற்கு வழி ஏற்படுத்துமாறு லிபியாவிடம் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# பின்லேடன் மனைவிகளிடம் விசாரிக்க அமெரிக்கா அனுமதி கேட்கவில்லை

## பாகிஸ்தான் அரசு மறுப்பு

இஸ்லாமாபாத், மே 13

ஒசாமா பின்லேடனின் மூன்று மனைவிகளிடம் விசாரணை நடத்த அமெரிக்கா அனுமதி கோரவில்லை. அப்படி அனுமதி கோரியது என்றும் அதற்கு பாகிஸ்தான் சம்மதித்துவிட்டது என்றும் வெளியான செய்தியை பாகிஸ்தான் மறுத்துள்ளது. சுட்டுக்கொல்லப்பட்ட பின்லேடனின் 3 மனைவிகளை பாகிஸ்தான் அரசு கைதுசெய்து அவர்களிடம் விசாரணை நடத்தி வருகிறது.

அவர்களிடம் விசாரணை நடத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இதன் மூலம் பின்லேடனின் தீவிரவாத நடவடிக்கைக்ள், அல்-குவைதா இயக்கம் பற்றிய தகவல்களை அறிய முடியும் எனக் கருதியது, இதற்கிடையே அவர்களிடம் விசாரணை நடத்த பாகிஸ்தான் அனுமதி அளித்து விட்டது என்ற தகவலும் வெளியானது. ஆனால், இதை பாகிஸ்தான் அரசு மறுத்துள்ளது.

பாகிஸ்தான் வெளியுறவுத்துறைச் செயலாளர் சல்மான் பஷீர் செவ்வாய்க்கிழமை நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது கூறியதாவது:

சுட்டுக்கொல்லப்பட்ட பின்லேடனின் மனைவிகளிடம் விசாரணை நடத்துவது குறித்தோ, அவர்களை ஒப்படைப்பது குறித்தோ அமெரிக்கா முறைப்படி கேட்கவில்லை. அதற்காக பாகிஸ்தான் அரசை இதுவரை அணுகவில்லை என்று தெரிவித்தார்.

இதுகுறித்து பென்டகன் இராணுவத் தலைமையகத்தின் செய்தித் தொடர்பாளர் டேவ்லபான், நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

இது குறித்து பாகிஸ்தான் அரசுடன் பேசி வருகிறோம். ஆனால், அங்கிருந்து திட்டவட்டமான பதில் இன்னும் வர வில்லை. அதேநேரத்தில் பாகிஸ்தானிலும், உலகின் எந்தப் பகுதியிலும் தீவிர வாதம் நடந்தாலும் அதை ஒழிப்பதில் நாங்கள் தொடர்ந்து செயல்படுவோம் என்று தெரிவித்தார். (எ)

# ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள்

பெல்ஷிங், மே 12

சீனாவில் சீசுயாங் மாகாணத்தில் சுனிங் நகரிலுள்ள ஒரு வைத்தியசாலையில் விவசாயின் மனைவியான ஒருவருக்கு இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்தன. உயிருடன் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்த அக்குழந்தைகள் 2 தலைகளுடன் உடல் ஒன்றாக ஒட்டிய நிலையில் இருந்தன. அவற்றின் எடை 9 பவுண்ஸ் உயரம் 51 சென்றி மீற்றராகும்.

அக்குழந்தைகளைப் பெற்றோர், தங்களால் வளர்க்க முடியாது என வைத்திய சாலையில் ஒப்படைத்து விட்டனர். பின்னர் அக்குழந்தைகள் சாஸ்ருயிங் என்ற இடத்தில் உள்ள வைத்தியசாலைக்கு ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)**

89 ஆவது சர்வதேச தின விழா
போட்டிகளுக்கான நேர அட்டவணை

12.05.2011 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 28 ஆம் பக்கத்தில் வந்த மேற்படி விளம்பரத்தில் 22 நிகழ்வுகளில் 21 நிகழ்வுகள் வெளிவந்துள்ளன. 22 ஆவது நிகழ்வு விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

22. துடுப்பாட்டம் -15.05.2011 - ஞாயிறு காலை 10 மணி

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

திருமதி
**புஸ்பராணி (கிளி) அரவிந்தன்**



தோற்றம் 03.05.1961 மறைவு 15.04.2011

தாயுமாய் தந்தையுமாய் தரணியில்
அனைத்தும் நீயாகி நின்றதனை
நெஞ்சம் மறந்திடுமோ? அம்மா!
ஏன் சென்றாய் எங்கு சென்றாய் – எங்களை
கலங்க வைத்து இறைவன் தனக்கொரு தாய் வேண்டி
அழைத்தானோ? இரக்கமற்ற அவன்
தாழ் வேண்டி வணங்குகின்றோம் தந்துவிடு எம்தாயை

கடந்த 15.04.2011 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியை இன்று (13.05.2011) வெள்ளிக்கிழமை காலை வில்லூன்றி புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 15.05.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து, அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

7ஆம் வட்டாரம், புங்குடுதீவு. கணவர், பிள்ளைகள்.

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு 08.04.1935
உதிர்வு 05.05.2009

அமரர்
**தேசிங்கம் குணசிங்கம்**
(இளைப்பாறிய உத்தியோகத்தர் - விமானப்படை)

எம்மிரு விழிகளிலும் கண்ணீர் ஓயவில்லை
ஈராண்டு பறந்ததுவோ நொடிப் பொழுதில்
எங்களை விட்டு எங்கு சென்றீர்

44,சோமசுந்தரம் அவெனியு,
சுண்டுக்குளி. (40)(4140) - குடும்பத்தினர்.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து போடப்பட்ட சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 21.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை- 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு- 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி- 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை- 0771392593

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.
(4143)

**தேவை**

தாதி/ தாதி பயிலுநர்
மருந்தாளர் ( அனுபவம் உள்ளவர்கள்)
மருந்தாளர் (பயிலுநர்)
காசாளர்
கணக்காளர்
காது கேட்கும் கருவி பொருத்துநர் / பயிலுநர்

[(இவர்களுக்கான பயிற்சி இந்தியாவில் அளிக்கப்படும்) (கணினி அனுபவம் உள்ளவர்)]

இடம்: நியூ யாழ்.வைத்தியசாலை
பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. 021 222 3533, 021 222 1011.
காலம்: ஞாயிற்றுக்கிழமை (15.05.2011)
நேரம்: மு.ப. 10.30 மணி
(40-19-20)(சி/575980)

சுழிபுரம் – பறாளாய்



**அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்**

**மகோற்சவ விபரம்**

15.05.2011 ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழா
சப்பறத் திருவிழா
16.05.2011 திங்கட்கிழமை இரதோற்சவம்
17.05.2011 செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவம் - மு. ப. 10.00 மணி
திருவடிநிலை புனித சமுத்திர தீர்த்தக்கரை
கொடியிறக்கம்
20.05.2011 வெள்ளிக்கிழமை சங்காபிஷேகம்
முருகன் தாள்பணிந்து திருவருளைப் பெற்றுய்வோம்.

பறாளாய்,
சுழிபுரம். தர்மகர்த்தா சபை

**விற்பனைக்கு**

பூச்சி நீக்கிய 45 நாள்கள் அல்சேசியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொ.பே: 0778798596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லேடனின் பின்னர் அல்குவைதாவின் அடுத்த தலைவர் இலியாஸ் காஷ்மீரி?



வாஷிங்டன், மே 13

ஒசாமா பின்லேடனுக்குப் பின்னர் அல்-குவைதா இயக்கத்தின் தலைமைப் பொறுப்புக்கு இலியாஸ் காஷ்மீரி வரக்கூடும் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மும்பையில் நடந்தது போன்று ஐரோப்பாவின் முக்கிய நகரங்களில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களுக்குத் திட்டமிட்டதில் காஷ்மீரிக்கு முக்கிய பங்கு இருக்கிறது என அவர்கள் தெரிவித்தனர்.

பின்லேடனுக்குப் பின்னர் அல்-ஜவாஹிரியே அல்- குவைதா இயக்கத்தின் தலைவராக வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டு வந்தது.

ஆனால் அல்-குவைதாவினதும், அதன் துணை அமைப்புகளினதும் பல்வேறு நிலைகளிலும் ஜவாஹிரிக்கு ஆதரவு இல்லாததால், அவர் தலைமைப் பொறுப்புக்கு வருவதற்கு சாதகமான நிலை இல்லை.

கடந்த பல ஆண்டுகளாகவே பயங்கரவாதத் தாக்குதல்கள் மூலம் தனது 'செல்வாக்கை' நிரூபித்து வந்திருக்கும் இலியாஸ் காஷ்மீரிக்கு அந்தப் பொறுப்பு அளிக்கப்படலாம் என்று தெரிய வந்திருக்கிறது என அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நீண்ட காலமாகவே காஷ்மீரியின் நடவடிக்கைகளை அமெரிக்கப் புலனாய்வு அமைப்புகள் கண்காணித்து வந்திருக்கின்றன. வடமேற்குப் பாகிஸ்தானில் அவரைக் குறிவைத்து தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

ஹெட்லிக்குப் பாதுகாப்பு அளித்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் சிக்காகோ தொழிலதிபர் தஹாவூர் ராணா உள்ளிட்டோர் மீதான வழக்கில் காஷ்மீரியின் பெயரும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஒரு காலகட்டத்தில் பாகிஸ்தான் இராணுவத்தில் சோவியத் துருப்புகளுக்கு எதிராகச் சண்டையிட்ட ஆப்கன் முஜாஹிதீன்களுக்குப் பயிற்சியளிக்கும் பிரிவில் காஷ்மீரி பணியாற்றியிருக்கிறார்.

இந்தியாவுக்கு எதிராக தீவிரவாதிகளுக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்பிலும் அவர் இருந்திருக்கிறார். அதன் பின்னர் ஹர்கத் - உல் - ஜிஹாத் - இ- இஸ்லாமி (ஹுஜி) இயக்கத்தில் சேர்ந்தார் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

# அமெரிக்கா மீது விரைவில் தாக்குதல் நடத்துவோம்

## அல்-குவைதா மீண்டும் எச்சரிக்கை

வாஷிங்டன், மே 13

பின்லேடன் கொல்லப்பட்டதால் அல்-குவைதா இயக்கத்தினர் கடும் கோபத்தில் உள்ளனர். பழிக்கு பழி வாங்க விரைவில் தாக்குதல் நடத்தப்போகின்றனர் என அறிவித்துள்ளனர்.

அல்-குவைதா இயக்கத்தின் ஏமன் பிரிவு மீண்டும் ஓர் எச்சரிக்கை வெளியிட்டுள்ளது. அல்-குவைதா மூத்த தலைவர்களில் ஒருவரான நசீர்-அல்-வகிஷி இணையதளம் ஒன்றில் இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:-

எங்களது புனிதப் போர் ஓய்ந்து விடவில்லை. இதுவரை இல்லாத அளவுக்கு அமெரிக்கர்களுக்கு எதிராக மிகப்பெரிய போர் நடத்தப்படும்.

பின்லேடனை கொன்று விட்டதால் எல்லாம் முடிந்துவிட்டது என அமெரிக்கர்கள் முட்டாள்தனமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் நாங்கள் நடத்தப்போகும் புனித போர் மிகப் பெரியதாகவும், மோசமானதாகவும் இருக்கும்.

இதற்காக அமெரிக்கா காத்திருக்கிறது. இதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அதன் பின்னர் புனிதப் போர் தாக்குதல்கள் அணிவகுத்து வரும்.

பின்லேடன் மரணம் மூலம் எங்களது புனிதப் போர் பணி தீவிரமடைந்துள்ளது. இவ்வாறு அந்த எச்சரிக்கை தகவலில் கூறப்பட்டுள்ளது.


# கார்க் குண்டுவெடிப்பில் ஈராக்கில் 11 பொலிஸார் பலி

திக்ரித் (ஈராக்) மே 13

ஈராக்கில் பக்தாத் அருகே கார்க்குண்டு வெடித்ததில், 11 பொலிஸார் உடல் சிதறிப் பலியாகினர்.

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுஸைனின் சொந்த ஊரான திக்ரித்தில், புதன்கிழமை காலை பொலிஸார் வாகனத்தில் ரோந்து சென்றுகொண்டிருந்தனர். அப்போது, வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கார் வெடித்தது. இதில், 11 பொலிஸார் உடல் சிதறிப் பலியாயினர்.

இந்தச் சம்பவத்துக்கு எந்தத் தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.



பாகிஸ்தானின் முக்கிய எதிர்கட்சித் தலைவரும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவருமான நவாஸ் ஷெரீப், இஸ்லாமாபாத்தில் நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசுகிறார்.

# பின்லேடனின் சடலப் புகைப்படங்களை பார்த்த அமெ.எம்.பிக்கள்

வாஷிங்டன், மே 13

பாகிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்ட பின்லேடனின் புகைப்படங்களை அமெரிக்கா வெளியிட்டது. அது சர்ச்சையை ஏற்படுத்தியது. சுட்டுக் கொல்லப்பட்டது பின்லேடன் அல்ல. இப்படம் கிராபிக்ஸ் மூலம் செய்யப்பட்டது என அமெரிக்காவிலும் உலக நாடுகளிலும் பேச்சு கிளம்பியது.

ஆனால் இதை ஜனாதிபதி ஒபாமா மறுத்தார். கொல்லப்பட்டது பின்லேடன்தான். டி.என்.ஏ. சோதனை மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே சந்தேகப்பட வேண்டாம் என்று கூறினார்.

இந்த நிலையில், பின்லேடனின் உடல் புகைப்படங்களை அமெரிக்க எம்.பிக்கள் பார்க்க ஏற்பாடு செய்தார். உளவுப் பிரிவு, ஆயுதப்படை சேவை குழுக்களைச் சேர்ந்த எம்.பிக்கள் உளவுத்துறை அலுவலகத்துக்குச் சென்று அந்தப் புகைப்படங்களைப் பார்த்தனர்.

# ஸ்பெயினில் பூகம்பம்: 10 பேர் பலி; கட்டடங்கள் சரிவு

மாட்ரிட்,மே13

ஸ்பெயினின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள லோர்கா நகரில் புதன்கிழமை பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.2 புள்ளிகளாகப் பதிவாகியிருந்தது.

பூமியில் 10 கிலோ மீற்றர் ஆழத்துக்குள் இந்தப் பூகம்பத்தின் மையப் புள்ளி இருந்தது. இதனால் லோர்கா நகரமே குலுங்கியது. அடுக்கு மாடிக் கட்டடங்கள் இடிந்து நொறுங்கி விழுந்தன.

மக்கள் அலறி அடித்தபடி வீடுகளிலிருந்து வெளியேறி வீதிகளில் திரண்டனர். பெரும்பாலான மக்கள் பாதுகாப்பான இடம் தேடி ஓடினார்கள். கட்டடங்கள் நொறுங்கியதால் லோர்கா நகரம் முழுவதும் கதறல் சத்தம் கேட்டது.

சிறிதுநேரத்தில் லோர்கா புறநகர் பகுதியை மையமாகக்கொண்டு மீண்டும் ஒரு பூகம்பம் ஏற்பட்டது. அதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.4 புள்ளிகளாகப் பதிவானது. இந்தப் பூகம்பத்தில் மேலும் சில கட்டடங்கள் நொறுங்கின.

இடிபாடுகளில் சிக்கி 10 பேர் பலியாகி விட்டனர். ஆயிரக்கணக்கானவர்களுக்கு படுகாயம் ஏற்பட்டது. அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஸ்பெயினில் சுமார் 40 ஆண்டுகளுக்குப் பின்னர் மிகப்பெரிய பூகம்பம் ஏற்பட்டுள்ளது. பூகம்பத்தின் அதிர்வுகளை தலைநகர் மாட்ரிட் வரை உணர முடிந்தது என மக்கள் கூறினார்கள்.

பூகம்பம் காரணமாக ஸ்பெயின் அரசுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு சேதமும், இழப்பும் ஏற்பட்டுள்ளன.

# ஜூலியன் அசேஞ்சுக்கு சிட்னி அமைதி விருது

மெல்போர்ன், மே 13

ஆஸ்திரேலியாவின் மிக உயர்ந்த உலக விருதான தங்கப்பதக்கத்துடன் கூடிய 'சிட்னி அமைதி விருது' விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசேஞ்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது மிகவும் அரிய விருதாகக் கருதப்படுகிறது.

மனித உரிமைகள் பாதுகாப்பு, உலக அமைதியை பல்வேறு வழிகளில் நிலைநாட்டுதல், தத்துவம் மற்றும் கொள்கை அடிப்படையில் அஹிம்சையை நிலைநாட்டல் ஆகிய வற்றுக்காக ஆஸ்திரேலியாவின் 'சிட்னி அமைதி அறக்கட்டளை' ஆண்டுதோறும் அமைதி விருதை வழங்கி வருகிறது.

அத்தோடு, மிக அரிதாக தங்கப்பதக்கத்துடன் கூடிய அமைதி விருதையும் வழங்கி வருகிறது. இந்த அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்ட 14 ஆண்டுகளில் நெல்சன் மண்டேலா, தலாய் லாமா, ஜப்பான் புத்தமதத் தலைவர் டய்சாக்கு இகேடா ஆகிய மூன்று பேர் மட்டுமேதங்கப்பதக்கத்துடன் கூடிய அமைதி விருதைப் பெற்றுள்ளனர்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக – தீரத்துடன் போராடியதற்காக விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசேஞ்சுக்கு தங்கப் பதக்கத்துடன் கூடிய இந்த அரிய விருது வழங்கப்பட்டது.

விருதைஏற்றுக்கொண்ட அசேஞ்ச், "அமைதி மற்றும் நீதிக்கிடையிலான தொடர்பைஇந்த விருது நிரூபித்துள்ளது'' என்று கூறியுள்ளார்.

# இத்தாலிக்குச் சென்ற கப்பல் உடைந்ததால் 600 பேர் மரணம்

ஜெனிவா, மே 13

லிபியாவிலிருந்து இத்தாலிக்குச் சென்ற கப்பல் உடைந்ததால் அதிலிருந்த 600 பேர் கடலில் மூழ்கி இறந்தனர்.

லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கு எதிராகப் புரட்சி நடந்து வருகிறது. புரட்சியாளர்களை ஒடுக்க கடாபி அரசு இராணுவத் தாக்குதல் நடத்தி வருகிறது.

மக்களையும், புரட்சியாளர்களையும் பாதுகாக்க அமெரிக்கத் தலைமையிலான நேட்டோ படைகள் லிபிய இராணுவம் மீது விமானம் மூலம் குண்டு வீசுகிறது. அங்கு ஏராளமானவர்கள் பலியாகி வருகின்றனர்.

இதனால் குழப்பமான சூழ்நிலை நிலவுகிறது. உயிருக்கு பயந்து மக்கள் அண்டை நாடுகளுக்கு கும்பல் கும்பலாக கூட்டமாகச் செல்கிறார்கள்.

லிபியாவில் புரட்சி நடப்பதற்கு முன்னர் அங்கு சோமாலியாவையும், ஆபிரிக்க நாடுகளையும் சேர்ந்த ஏராளமானவர்கள் வேலை செய்து வந்தனர்.

புரட்சி வெடித்த பின்னர் இங்குள்ள ஆபிரிக்க மக்கள் பாதுகாப்புக்காகவும், நல்ல வேலை தேடியும் அருகிலுள்ள இத்தாலிக்கு கப்பலில் திருட்டுத்தனமாகச் செல்கின்றனர். லிபிய இராணுவம் பலரை துப்பாக்கி முனையில் கப்பலில் ஏற்றி நாடு கடத்துகிறது எனக் கூறப்படுகிறது.

இப்படி அளவுக்கு அதிகமாக மக்களை ஏற்றுவதால் கப்பல்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகி உயிரிழப்பு ஏற்படுகிறது.

இதேபோல் கடந்த வெள்ளிக்கிழமை 600 பேரை ஏற்றிக்கொண்டு ஒரு சிறிய கப்பல் இத்தாலிக்குச் சொந்தமான லம்பிடிசா தீவை நோக்கிச் சென்றது. நடுக்கடலில் சென்றபோது கூட்டம் அதிகமாக இருந்ததால் அந்தச் சிறிய கப்பல் பாரம் தாங்காமல் இரண்டாக உடைந்து கடலில் மூழ்கியது.

இந்த விபத்தில் கப்பலிலிருந்த 600 பேரும் கடலில் மூழ்கி இறந்து விட்டனர். இதில் பலர் சோமாலியாவைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. கடந்த சில நாட்களில் 3 படகுகள் கடலில் மூழ்கி 800 பேர் வரை இறந்துவிட்டனர்.

கடத்தல்காரர்கள் பணத்துக்கு ஆசைப்பட்டு அதிகமான மக்களை சிறிய கப்பலில் ஏற்றி வருவதால் விபத்து ஏற்படுகிறது எனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. விவகாரத்தில் இலங்கைக்கு உதவி வரலாற்றுத் தவறு செய்யக்கூடாது

## பா.ஜ.க. தலைவர் கருத்து

ஐநாவின் நடவடிக்கையில் இருந்து தப்புவதற்கு ஏதுவாக இலங்கைக்கு உதவி செய்து சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த பிழைக்கு மத்திய அரசு ஆளாகி விடக்கூடாது என்று தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக கோவையில் செய்தியாளர்களிடம் கடந்த புதன்கிழமை அவர் கூறியதாவது:

ஐ.நா விசாரணை அறிக்கையில் இலங்கையில் இனப்படுகொலை நடந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. உலக நாடுகளெல்லாம் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை, போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன.


ஆனால், ஐ.நாவின் நடவடிக்கைகளுக்கு இலங்கைக்கு ஆதரவாக இந்தியா செயற்படும் என இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ கூறியுள்ளார். மேலும் 2009 இல் இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு இந்திய அரசும், தமிழக அரசும் உதவியதைப் போல துணை நிற்க வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் இத்தகைய சரித்திரம் வாய்ந்த பிழையைச் செய்ய மத்திய அரசு தயாராக இருக்கக் கூடாது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப் படுவதற்குக் காரணமான ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவித்து சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்.

பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் அடைக்கலம் கொடுத்து வருவது குறித்து பா.ஜ.க. ஏற்கெனவே முறைப்பாடு கூறிவந்தது. பின்லேடன் கொல்லப்பட்டதன் மூலம் அது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. மும்பை குண்டு வெடிப்பு வழக்கில் சம்பந்தப்பட்ட தாவூத் இப்ராஹிம், பாகிஸ்தானில் இருந்து தப்பி விட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தானை விட சிறந்த புகலிடம் வேறு இருக்காது. ஆகவே, தாவூத் இப்ராஹிமை கைது செய்து கொண்டு வர இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் ராதா கிருஷ்ணன்.



# ஓய்வெடுப்பதற்காக ரஜினி வெளிநாட்டுக்குப் பயணம்



நடிகர் ரஜினிகாந்த் இருதடவை உடல்நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். உடல்நிலை பூரண குணம் அடைந்ததையடுத்து நேற்று முன்தினம் மாலை மருத்துவமனையில் இருந்து சென்று தற்போது வீட்டில் ஓய்வெடுத்து வருகிறார்.

சென்னையில் அக்னி நட்சத்திரம் தொடங்கி வெயில் அதிகமாகியுள்ளது. எனவே குளிர் பிரதேசங்களுக்குச் சென்று ஓய்வெடுக்கும்படி வைத்தியர்கள் அறிவுறுத் தியுள்ளனர்.

ஊட்டி, கொடைக்கானல் போன்ற பகுதிகளுக்குச் சென்றால் ரசிகர்கள் தொல்லை ஏற்படும். சுதந்திரமாக நடமாட முடியாது. எனவே வெளிநாட்டிலுள்ள குளிர் பிரதேசங்களுக்குச் செல்ல ரஜினி திட்டமிட்டுள்ளார்.

அமெரிக்கா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளுக்கு அவர் செல்ல இருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்காக தூதரகங்களில் விசா பெறுவதற்கான பணிகள் இடம்பெறுகின்றன. இதனை யடுத்து வெளிநாடுகளில் ஒரு மாதம் வரை ஓய்வெடுப்பார் என தெரியவருகிறது. (வ)

# ராகுல் கைதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்; காங்கிரஸார் மீது பொலிஸார் தடியடி

லக்னௌ, மே.13

காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலர் ராகுல் காந்தி நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதை எதிர்த்து மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்திய உத்தரப் பிரதேச காங்கிரஸ் தலைவர் ரீடா பகுகுணா ஜோஷி உள்ளிட்ட அந்தக்கட்சியின் பல்வேறு தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது காங்கிரஸ் தொண்டர்கள் மீது பொலிஸார் தடியடியும் நடத்தினர். அமைதியாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத் தின்போது பொலிஸார் நடத்திய தடியடியில் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் காயமடைந்ததாகவும், ரீடா ஜோஷி பொலிஸாரால் தாக்கப்பட்டதாகவும் அந்தக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் சுபோத் ஸ்ரீவஸ்தவா லக்னௌவில் தெரிவித்தார்.

ராகுல் காந்தி நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நேற்று மாநில அளவில் வேலைநிறுத்தம் நடத்தப்படும் என காங்கிரஸ் கட்சி அறிவித்திருந்தது. ராகுல்காந்தி பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

லக்னௌவில் உத்தரப் பிரதேச காங்கிரஸ் தலைவர் ஜோஷி தலைமையில் அந்தக்கட்சித் தொண்டர்கள் விதான் பவன் அருகே பாபுபவன் சந்திப்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டம் நடத்தும் தொண்டர்களைக் கலைக்கும் முயற்சியாக பொலிஸார் தடியடி நடத்தினர். ரேபரேலியில் தேசிய நெடுஞ்சாலையில் மறியல் செய்த 2 சட்டசபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

# மன்மோகன் சிங் ஆப்கானுக்கு பயணம்

பிரதமர் மன்மோகன் சிங் 6 வருடங்களின் பின்னர் ஆப்கானிஸ்தானுக்கு நேற்று 2 நாள் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்த பயணத்தின்போது பயங்கரவாதம், போரினால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ் தானுக்கு இந்தியாவின் உதவியை அதிகரிக்கும் வழிகள் உள்ளிட்டவை குறித்து பிரதமர் விவாதிக்க உள்ளார்.

காபூல் சென்றடைந்த மன்மோகனை விமான நிலையத்தில் ஆப்கான் வெளியுறவு அமைச்சர் ஜல்மய் ரசூல் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் அப்துல் ரஹீம் வர்டக் மற்றும் உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

பிரதமருடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் மற்றும் ஆப்கானுக்கான பிரதமரின் சிறப்புத் தூதர் சதீந்தர் லம்பா மற்றும் உயர் அதிகாரிகள் உடன் சென்றுள்ளனர்.

6 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆப்கான் சென்றுள்ள மன்மோகன் சிங், அந்தநாட்டின் அதிபர் ஹமீத் கர்சாயை இன்று பிற்பகலில் சந்திக்க உள்ளார். அதனைத் தொடர்ந்து ஆப்கான் நாடாளுமன்றத்திலும் அவர் இன்று உரையாற்றவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


## அந்தியகால சகாயநிதிச் சங்கம்

கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான்

**55 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்**

காலம்: 15.05.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி
இடம்: வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், உரும்பிராய்

அங்கத்தவர்கள் எல்லோரும் தவறாது சமுகம் தரவும்.

க.தர்மநாயகம், தலைவர்.
(4138)
து.கலியுகவரதன் J.P, செயலாளர்

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை, கூழாவடியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 3375, 0776147399

## வீடு வாடகைக்குத் தேவை

கௌரவ உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ். நகரை அண்டிய பகுதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத்தேவை.

தொடர்பு: 021 222 6502

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1982 இல் பிறந்த சித்திரை நட்சத்திரம், கிரகபாவம் 16½, இத்தாலியில் பிரஜாவுரிமையுடைய விரைவில் இலங்கை வரவுள்ள மணமகனுக்கு பெற்றோர் படித்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: இல.49, வளாக வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி

## தவறிவிட்டது

நுணாவில் மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த பூபாலபிள்ளை கமலா என்பவரது தேசிய அடையாள அட்டை (475654609V), வங்கிப் புத்தகம், ATM அட்டை, ஓய்வூதிய அட்டை என்பன 05.05.2011 அன்று சாவகச்சேரி நகர்ப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0777470035 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## காணி விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழகத்துக்கும் நல்லூருக்கும் இடைப்பட்ட பலாலி வீதி, ஆலடிச்சந்திக்கு அருகில் உடையார்லேன், கந்தர்மடத்தில் வீடு கட்டக்கூடிய நல்ல தண்ணீர் வசதியுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0774012924, 0217915620

## நன்றிகள்

கடந்த 11.05.2011 அன்று யாழ். நகரப் பகுதியில் தொலைந்த எனது 2½ பவுண் நகைகள் மற்றும் அடையாள அட்டை என்பவற்றைக் கண்டெடுத்து சன்மானம் எதுவும் பெற்றுக்கொள்ளாது என்னிடம் ஒப்படைத்த யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் தனியார் பேருந்து ஒன்றின் நடத்துனரான வேல [illegible] அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜெயராசா ஜெனிற்றா, கோட்டடி, யாழ்ப்பாணம்.

## மனதார வாழ்த்துகிறோம்



திருமதி றூபா உதயரட்ணம்
B.Com PGD in Ed. (MERIT), M.A. Planning
(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகராக இருந்து கடந்த 09.05.2011 முதல் ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராக உயர்வு பெற்றுள்ள திருமதி றூபா உதயரட்ணம் அவர்களை பாராட்டுவதுடன் இவர் மேன்மேலும் பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ள மனதார வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள்.
(சி/575975)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2222 திகதி 11-05-2011

ஆங்கில எழுத்திற்கும் K

வெற்றி எண்கள் 19 39 47 60 போனஸ் இல: 40

ஜக்பொட் பரிசு ரூ. 11,075,875/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 204958 | 20/- | 4,099,160/- |
| 2 இல | 14713 | 100/- | 1,471,300/- |
| 3 இல | 310 | 1,000/- | 310,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8190 | 40/- | 327,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 586 | 1,000/- | 586,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 19 | 10,000/- | 190,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,075,875/- | - |
| 1 இல + போனஸ் இல | 9764 | 100/- | 976,400/- |
| 2 இல + போனஸ் இல | 462 | 500/- | 231,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 363 | 200/- | 72,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 12 | 1,500/- | 18,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 10,682,060/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 239393 | | 11,282,060/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| காலி | 203159652-8-14 |
| குருநாகல் | 203138568-7-01 |
| களுத்துறை | 203141916-8-47 |
| கண்டி | 203140543-4-20 |
| மட்டக்களப்பு | 203142696-4-38 |
| புத்தளம் | 203139673-1-07 |
| திருகோணமலை | 203140307-8-44 |
| கொழும்பு | 203143961-5-42 |
| யாழ்ப்பாணம் | 203138409-8-08 |
| குருநாகல் | 203138656-5-29 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ.11,634,950/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2011 மே 14 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

## ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 122
திகதி - 11.05.2011
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: Z அதிர்ஷ்ட இலக்கம்: 04 வெற்றி இலக்கம்: 3 4 3 3 1

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத் தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Z 04 3 4 3 3 1 | ரூ. 16,662,620.00 | - |
| 1 பரிசு | 04 3 4 3 3 1 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 4 3 3 1 | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 4 3 3 1 | ரூ. 10,000.00 | 32 |
| 4 பரிசு | 3 3 1 | ரூ. 1,000.00 | 303 |
| 5 பரிசு | 3 1 | ரூ. 50.00 | 3004 |
| 6 பரிசு | 1 | ரூ. 20.00 | 29060 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத் தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 3 4 3 3 | ரூ. 1,000.00 | 30 |
| 8 பரிசு | 3 4 3 | ரூ. 100.00 | 306 |
| 9 பரிசு | 3 4 | ரூ. 50.00 | 3037 |
| 10 பரிசு | Z | ரூ. 20.00 | 11950 |
| 11 பரிசு | Z 04 | ரூ. 100.00 | 1368 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,342,650.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.1 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ.17,086,428.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவினால் தேடப்படும் பயங்கரவாதிகள் பட்டியல் வெளியீடு

இந்தியாவால் தேடப்படும் மிக முக்கியமான 50 பயங்கரவாதிகளின் பட்டியலை இந்தியா வெளியிட்டுள்ளது. அதில் மும்பை தொடர் குண்டு வெடிப்பில் தொடர்புடைய ஹபீஸ் சையத், தாவூத் இப்ராஹீம் மற்றும் பாகிஸ்தானின் முன்னாள் மேஜர்கள் 5 பேர்களின் பெயர்களும் அடங்கும். அவற்றில் டைகர் மேனன், அயூப் மேமம், சாஜீத் மஜீர், அனீஸ் இப்ராஹீம் போன்றவர்களின் பெயர் பட்டியல் வெளியிடப் பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் இந்தியா பாகிஸ்தானிடம் இந்தப்பெயர் பட்டியலை அளித்துள்ளதாக கூறப்படுகின்றது. இந்தநிலையில் லஷ்கர்-இ- தொய்பா தலைவர் ஹபீஸ் சையத் மற்றும் தாவூத் இப்ராஹீம் ஆகியோர் பாகிஸ்தானில் உள்ளதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. ஆனால் அதற்கு பாகிஸ்தான் மறுப்புத் தெரிவித்துள்ளது. (வ)

# சட்டப் பேரவைத் தேர்தல் வாக்குகள் எண்ணும் பணிகள் இன்று ஆரம்பம்

## முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கு வீடியோவில் பதிவதற்கு ஏற்பாடு



தேர்தல் அதிகாரி பிரவீண்குமார்

சென்னை, மே.13

நடந்து முடிந்த தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் 234 தொகுதிகளின் வாக்குகள் எண்ணும் பணிகள் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாகவும் வாக்குகள் எண்ணப்படும்போது வீடியோவில் பதிவு செய்யப்பட வுள்ளதாக வும் தலைமை தேர்தல் அதிகாரி பிரவீன்குமார் தெரிவித்துள்ளார்

தேர்தல் ஏற்பாடுகள் குறித்து பிரவீன்குமார் கூறியதாவது:

சட்டசபைத் தேர்தல் முடிவுகள் இன்று வெளியாகவுள்ளன. தமிழகத்தில் 91 நிலையங்களில் 234 தொகுதிகளுக்கான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன. இன்று காலை 5 மணிக்கே, வாக்கு எண்ணும் நிலையத்துக்கு, தொகுதியின் பார்வையாளர், தேர்தல் அதிகாரி, மாவட்டத் தேர்தல் அதிகாரி ஆகியோர் வந்துவிடுவர்.

எந்தெந்த மேசையில் வாக்கு எண்ணிக்கைக்கு எந்த ஊழியரைப் பயன்படுத்துவது என்பது அப்போதுதான் முடிவு செய்யப்படும். காலை 8 மணிக்கு வாக்கு எண்ணப்பட ஆரம்பித்ததும், தொகுதித் தேர்தல் அதிகாரியின் மேசையில் தபால் வாக்குகள் எண்ணப்படும். அரை மணித்தியாலத்துக்குப் பின், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வாக்குகள் எண்ணப்படும்.

ஒவ்வொரு சுற்று வாக்கு எண்ணிக்கை முடிந்ததும், அதற்கான படிவம் நிரப்பப்பட்டு, தேர்தல் அதிகாரியின் பார்வைக்கு அனுப்பப்படும். அனைத்து மேசைகளிலும் ஒரு சுற்று வாக்கு எண்ணப்பட்டு, தேர்தல் அதிகாரி கையெழுத்திட்ட பின், அந்த சுற்று விவரம் அறிவிக்கப்படும். வாக்குகளின் விவரம் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் பலகையில் எழுதப்படும். இது தவிர, ஒவ்வொரு மேசையிலும் வாக்கு எண்ணிக்கை வீடியோவில் பதிவு செய்யப்படும். அந்த வீடியோ காட்சிகள், இறுவட்டாக வேட்பாளர்களுக்கு வழங்கப்படும்.

தபால் வாக்கு எண்ணிக்கை விவரங்களை அறிவிக்காமல், கடைசி இரண்டு சுற்றுகளுக்கான வாக்கு எண்ணிக்கையை ஆரம்பிக்கக் கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தொகுதியிலும் முதலில் வருபவர், இரண்டாவதாக வருபவர் ஆகியோருக்கு இடையேயான வாக்கு வித்தியாசம், தபால் வாக்குகளை விட குறைவாக இருந்தால், தபால் வாக்குகள் மீண்டும் ஆய்வு செய்யப்படும். இவை வீடியோவில் பதிவு செய்யப்படும்.

இவற்றைத் தவிர, வாக்கு எண்ண ஆரம்பிக்கும்போது இயந்திரங்கள் திறக்கப்படுவது, பாதுகாப்பு ஏற்பாடுகள், அசம்பாவித சம்பவங்கள் என அனைத்தும் வீடியோவில் பதிவு செய்யப்படும். தேர்தல் அதிகாரியின் மேசைக்கு அருகிலேயே, தரவு சேகரிப்பாளர்களுக்கான இருக்கையும் ஒதுக்கப்படும்.

இதனால், அ.தி.மு.க., முறைப்பாடு கூறியிருப்பது போல, தவறாக எண்ணிக்கையைப் பதிவு செய்ய வாய்ப்பில்லை. மேலும், வீடியோ பிரதிகளும் உள்ளன. பார்வையாளர், தேர்தல் அதிகாரி ஆகியோரிடம் உண்மையான படிவங்கள் இருக்கும். டேட்டா பதிவுடன், அதை ஒப்பிடலாம். ஒவ்வொரு சுற்றுமுடிவுகளும் அறிவிக்கப்பட்ட பின், அடுத்த சுற்று ஆரம்பிக்கப்பட உள்ளதால், வழக்கமான நேரத்தை விட, 10 - 15 சதவீதம் நேரம் அதிகமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். (வ)

# தேர்தல் வாக்குகள் எண்ணப்படும் போது கண்காணிப்பை அதிகரிக்க வேண்டும்



தேர்தல் ஆணையகத்திடம் ஜெயலலிதா கோரிக்கை

சட்டபேரவைத் தேர்தல் வாக்கு எண்ணப்படும் போது முறை கேடுகளைத் தவிர்க்க தேர்தல் ஆணையம் கண்காணிப்பை அதிகரிக்க வேண்டும் என அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா தலைமை தேர்தல் அதிகாரிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக்கடிதத்தில் படிவம் 20 இல் வாக்குகளைப் பதிவு செய்யும் போது அதைக் கண்காணிக்க கட்சி முகவர்களை அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 2009 ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது சிவகங்கை தொகுதியில் வாக்கு எண்ண்ணப்படும் படிவம் 20 இல் பதிவு செய்யும்போது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன.

அ.தி.மு.க வேட்பாளர் ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் பெற்ற வாக்குகள் காங்கிரஸ் வேட்பாளர் ப. சிதம்பரத்துக்கும், ப. சிதம்பரம் பெற்ற வாக்குகள் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பெயரிலும் படிவம் 20இல் மாற்றி பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதிகாரிகள் மற்றும் முகவர்களால் எழுத்தால் பதிவு செய்யப்பட்ட வாக்கு எண்ணிக்கை தகவல்கள், தரவுகள் பதிவு செய்து கொடுக்கப்படும படிவம் 20இல் மாற்றிப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆளுங்கட்சிக்கு ஆதரவாக தரவுகள் பதிவுசெய்வோர்களால் வாக்கு எண்ணிக்கை விவரங்கள் மாற்றப்பட்டுள்ளன. அவர்கள் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே தற்போது சட்டசபைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் போது தேர்தல் அதிகாரிகள் மற்றும் முகவர்கள் பதிவு செய்யும் வாக்கு எண்ணிக்கையும், டேட்டா என்ட்ரி ஆபரேட்டர்கள் பதிவு செய்யும் வாக்கு எண்ணிக்கை விவரங்களும் ஒன்றாக உள்ளதா என்பதை சரி பார்க்க தேர்தல் அதிகாரிகளுக்கு ஆணையம் உத்தரவிட வேண்டும்.

பதிவான வாக்குகளை சரி பார்த்த பின்னரே இறுதித் தேர்தல் முடிவை வெளியிட வேண்டும். இவ்வாறு அவர் தேர்தல் ஆணையத்துக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (வ)

## கனிமொழியிடமும் வருமானவரித் துறை விசாரணை

கலைஞர் தொலைக்காட்சியை கடனாக வாங்கிய 214 கோடி ரூபாவை திரும்ப அளித்ததற்காகக் கிடைத்த பணத்துக்கான ஆதாரம் தொடர்பாக சென்னை ஆயகார் பவனில் உள்ள வருமான வரித்துறை அலுவலகத்தில் தி.மு.க. எம்.பியான கனிமொழியிடமும், கலைஞர் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் சரத் குமாரிடமும் நேற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக வருமான வரித்துறை அலுவலகத்தில் ஆஜராவதற்காக டில்லி நீதிமன்றத்தில் அனுமதி பெற்று இருவரும் நேற்று முன்தினம் சென்னைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)



உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள கிரேட்டர் நொய்டா கிராமத்தில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே நடைபெற்ற கலவரம் குறித்து அங்கு சென்ற காங். பொதுச் செயலாளர் ராகுல் கேட்டறிகின்றார்.

## ஊழல் குறித்து பேச பா.ஜ.கவுக்கு தகுதியில்லை

ஊழல் ஒழிப்புக் குறித்துப் பேசுவதற்கு பா.ஜ.கவுக்குத் தகுதி இல்லை. முதலில் அக்கட்சி ஆளும் மாநிலங்களில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொண்ட பின்னர் பிறரைப் பற்றி விமர்சிக்கவேண்டும் - என்று காங்கிரஸ் கட்சிச் செய்தித் தொடர்பாளர் மணீஷ் திவாரி தெரிவித்துள்ளார்.

ஊழல் விவகாரத்தில் மத்திய அரசை கடுமையாக விமர்சித்து பா.ஜ.க. மாநில முதல்வர்கள் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது குறித்து அவரிடம் டில்லியில் செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு அவர் அளித்த பதில் வருமாறு:

மத்திய அரசைக் குறை கூறுவதற்கு முன் பா.ஜ.க, தன்னை சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். கர்நாடகத்தில் எடியூரப்பா ஊழ லில் திளைக்கிறார். இப்படியிருக்கையில், [illegible] பா.ஜ.கவுக்கு எவ்வித தகுதியும் இல்லை- என்றார். (வ)

# இரண்டு இலட்சம் நிலையங்களிலும் பாதுகாப்புக்குத் துணை இராணுவத்தினர்

தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குகள் இன்று எண்ணப்படவுள்ளன. திருச்சியில் வாக்கு எண்ணப்படும் 2 நிலையங்களில் பாதுகாப்புப் பணியில் மொத்தம் 75 பேர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். திருச்சிக்கு நேற்று முன்தினம் மாலை சென்ற துணை ராணுவப்படை யினரை திருச்சி மாநகர பாதுகாப்பு உத்தியோகத்தர் இளங்கோவன் ஜென்னீஸ் தலைமையில் சென்ற பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

கடந்த 13 ஆம் திகதி இடம் பெற்றதிருச்சி மாவட்டத்தில் உள்ள 9 தொகுதி களுக்கு 2 நிலையங்களில் வாக்குகள் எண்ணப்பட வுள்ளன.

திருச்சி சாரநாதன் பொறியியல் கல்லூரியில் திருச்சி கிழக்கு, திருச்சி மேற்கு, ஸ்ரீரங்கம், மணப்பாறை ஆகிய 4 தொகுதிகளுக்கும், சமயபுரம் கே.ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் திருவெறும்பூர், மணச்சநல்லூர், துறையூர் (தனி), முசிறி, லால்குடி ஆகிய 5 தொகுதி களுக்கும் வாக்குகள் எண்ணப்படவுள்ளன.

வாக்குகள் எண்ணப்படும் போது 3 அடுக்கு பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. இந்தநிலையில் வாக்கு எண்ணப்படும்போது பாதுகாப்புப் பணிக்காக, கொல்கத்தாவில் இருந்து 5 நிறுவனத் துணை ராணுவப்படையினர் மொத்தம் 375 பேர் நேற்று முன்தினம் மாலை 3 தனி விமானங்களில் திருச்சிக்கு வந்துள்ளனர்.

திருச்சி விமான நிலையத்தில் தயாராக இருந்த பொலிஸ் வாகனங்களில் துணை ராணுவப்படையினர் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதேவேளை திருச்சி மாவட்டத்துக்கு ஒரு நிறுவனத்தின் துணை ராணுவப் படையினர் ஒதுக்கப்பட்டுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

noolaham.org | aavanaham.org

# சோதனைகளின் பின் கொலைகள், காணாமல்போதல் பாலியல் வல்லுறவுக் கொடுமைகள் நடந்துள்ளன

## கொலையுண்டு கிடந்தவர்களில் இசைப்பிரியாவின் சடலமும் இனங்காணப்பட்டது.

139. யுத்த வலயத்தில் இருந்து பொதுமக்கள் வெளியே வந்ததும், தமக்குக் கிடைக்கப்போகும் வரவேற்பினைப் பற்றிப் பலர் அச்சம்கொண்டிருந்தனர். அவர்கள் பெரிய அழுத்தத்துக்குட்பட்டும் களைப்படைந்துமிருந்தனர். அநேகம் பேர் புதிதாக விதவைகளானவர் களாகவும், அநாதைகளானவர்களாகவும் அல்லது அங்கவீனமுற்றவர்களாகவும் இருந்தனர். பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்தோர் யுத்தக் காயங்களுடன் காணப்பட்டனர். அவர்களுள் குறைந்தபட்சம் 2,000 அங்கவீனர்கள் இருந்தனர். பெருந்திரளானவர்கள் வெளியேறியதும் நிலைமை குழப்பமாக இருந்ததோடு, பல குடும்ப உறுப்பினர்கள் ஒருவரை விட்டு மற்றவர் பிரிந்திருந்தனர். இந்தச் செயற்பாட்டின் போது குடும்பங்கள் பிரிக்கப்பட்டு வெவ்வேறு முகாம்களில் வைக்கப்பட்டன. குடும்பத்தினரைக் கண்டு பிடித்து ஒன்று சேர்ப்பதற்கான ஏற்பாடு போதியளவாக இருக்கவில்லை என்பதோடு, இதில் பங்களிப்பதற்கு ஐ.சி.ஆர். சி. அனுமதிக்கப்படவில்லை.

140. குடும்பங்களில் இருந்து பிரிந்த நிலையில் பல பெண்கள் தனியாக்கப்பட்டதோடு பாலியல் வன்முறைக்குப் பலியாகும் நிலையை எதிர்நோக்க வேண்டியிருந்தது. கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் போதியளவு போசாக்கு, மருத்துவப் பராமரிப்பு இன்றியும் யுத்த வலயத்தில் இருந்தபோது பாரிய உள ரீதியிலான அழுத்தங்களுக்கும் ஆளாகியிருந்தனர். கட்டாயமாகச் சிறுவர்கள் அணிசேர்க்கப்பட்டது தாய்மார் மீது பாரியதொருதாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

141. யுத்தம் இளம் வயதினர் மேல் குறிப்பானதொரு தாக்கத்தைக்கொண்டிருந்தது. 14 வயது சிறுவர்கள் கூடத் தமிழீழ விடுலைப்புலிகளினால் பலவந்தமாக அணிசேர்க்கப்பட்டனர். இளவயதில் திருமணத்தை உள்ளிட்ட அணிசேர்ப்பதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் இளம் பெண் குழந்தைகளின் ஆரோக்கியம் மீது மோசமானதாக்கத்தை ஏற்படுத்தியது.மேலும், ஆயிரக்கணக்கான குழந்தைகள், ஷெல் வீச்சுக் காரணமாக மரணமடைந்து அல்லது அங்கவீனர்களாக ஆகினர். சில குழந்தைகள் பதுங்கு குழிகளில் இருந்து விளையாடுவதற்காக வெளியே சென்றதால் கொல்லப்பட்டார்கள். தீவிர போசாக்கு மதிப்பீடொன்றின்படி, 25 சதவீதமான குழந்தைகள் பெரிய ஊட்டச்சத்தின்மையால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

142. பலமுறை இடம்பெயர நேர்ந்ததால் பல குழந்தைகள் உள ரீதியில் பாதிக்கப்பட்டிருந்தனர். பலர் தம்பெற்றோரை இழந்திருந்ததோடு, தனியாக வெளியேறியதால் அவர்கள் பதியப்படவில்லை. அநேகமான குழந்தைகள் சத்துணவின்றியும் பல சிறு குழந்தைகள் உலர் தன்மையினால் அல்லது வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

(52)

143. அதேபோன்று யுத்தத்தினால் முதியவர்களும் பாதிக்கப்பட்டார்கள். பல முறை நேர்ந்த இடம் பெயர்வு காரணமாக, முதியவர்களால் தொடர்ந்தும் நடக்க முடியவில்லையாதலால் அநேக சந்தர்ப்பங்களில் அவர்கள் கைவிடப்பட்டனர். இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் கவனிப்பாரற்ற நிலையில் இருந்த இன்னும் சிலர் களைப்பு மற்றும் தடுக்கக் கூடிய நோய்களினால் மரணமானார்கள்.

### 1. பிரிக்கும் செயற்பாட்டின் போதான மீறல்கள்

144. வன்னியை விட்டகன்று வட்டுவாகல் பாலம் மற்றும் ஏனைய அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை அடைந்து யுத்தத்தில் உயிர் தப்பியவர்கள் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தனர். உள்ளேவரும் பொதுமக்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டார்கள். முதலில், இலங்கை இராணுவம் பொதுவாக ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் இருக்கிறதா எனப்பார்ப்பதற்காக அவர்கள் உடம்பைச் சோதனையிட்டது. (ஒரு சில) மடிக் கணினிகளும் கமராக்களும் பாதுகாப்புப் படையினரால் பறி முதல் செய்யப்பட்டபோது அவற்றி லிருந்த பெறுமதிமிக்க தகவல்கள் இல்லாமற்போயின. மக்கள் பின்பு அநேகமாகக் கால்நடையாகக் கிளிநொச்சி, புல்மோட்டை மற்றும் பதவிய போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்த ஆரம்ப பிரிக்கும் அமைவிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை பகுதி - 13**

இந்த அமைவிடங்களில், ஒரு நாள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டிருந்தவர்களானாலும் தம்மை இனம் காட்டி சரணடையுமாறு இலங்கை இராணுவம் அழைத்தது. அப்படிச்செய்பவர்களுக்குத் தொழிற் பயிற்சி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாக உறுதி மொழி அளித்தது. மாறாக, தமிழீழ விடுதலை புலிகள் என இனங்காணப்பட்டவர்கள் வேறு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கணிசமான எண்ணிக்கையிலான சந்தேகிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலியினர் பெண்களாகவும் சிறுவர் களாவும் இருந்தனர்.

145. மேலும், பிரிக்கப்பட்டு வேறு அமைவிடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்ட முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை இனங்காண்பதற்காக கருணா பிரிவு அல்லது தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (புளொட்) உறுப்பினர்களை அரசு உபயோகித்தது. ஆரம்பப் பிரிக்கும் அமைவிடங்களுக்கான சர்வதேச மனிதாபிமான முகவர்களின் பிரவேசத்தை வேண்டுமென்றே அரசு தடுத்தது.

146. ஆரம்பப் பிரித்தெடுக்கும் நடவடிக்கையைத் தொடர்ந்து பொதுமக்கள் ஓமந்தையில் உள்ள மற்றுமொரு பிரிக்கும் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆண்களும் பெண்களும் வெவ்வேறாகப் பரிசோதிக்கப்பட்டபோதிலும், பிரித்தெடுக்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக ஆடைகள் களையப்பட்டு அவர்கள் சோதனை இடப்பட்டதால் அவர்கள் அவமானத்துக்கு உட்பட்டதோடு, குறிப்பாக பெண்களும், சிறுமிகளும் பாதிக்கப்புறும் சாத்தியம் அதிகரித்தது. எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு, அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் ஐ.சி. ஆர்.சி. ஓமந்தையில் ஓரளவிலான பிரவேசத்தைப் பெற்ற போதிலும், தனியாக மக்களை சந்தித்துப் பேச அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஜூலை 2009 இற்குப் பின்னர், ஐ.சி.ஆர்.சி. இதிலிருந்து முழுமையாகத் தடுக்கப்பட்டது.

(53)

147. சிகிச்சை தேவைப்பட்ட பொதுமக்கள் வவுனியாவில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்கள் அல்லது புல்மோட்டையில் இந்திய வைத்தியர்கள் சேவை புரிந்த மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். வவுனியா ஆஸ்பத்திரியில் காயமுற்றோர் நிரம்பி வழிந்து கொண்டிருந்ததால் பலர் சிகிச்சை முடிவடையுமுன்னர் வெளியேற்றப்பட்டதோடு, சகல நோயாளிகளும் இலங்கை இராணுவத்தினரின் காவலில் வைக்கப்பட்டு பொலிஸ் புலனாய்வாளர்களினால் (குற்றப் புலனாய்வுப் பிரிவு அல்லது பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு) விசாரிக்கப்பட்டார்கள். சில நோயாளிகள் ஆஸ்பத்திரிகளில் இருந்து மாயமானார்கள்.

148. குறிப்பாக பிரிக்கும் செயற்பாட்டின் விளைவாகக் கொலைத் தண்டனைகள், காணாமற்போதல், வன்புணர்ச்சி மற்றும் பாலியல் துன்புறுத்தல்கள் நடைபெற்றன.

### (அ) கொலைத் தண்டனைகள்

149. இலங்கை இராணுவத்தின் பொறுப்பில் இருந்த சில தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொலைத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்பதை உறுதி செய்யப்பட்டபடச் சுருள்களும் பல புகைப்படங்களும் குறிப்பிடுவதாக இருந்தன. சிலரின் கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்த பல இறந்த உறுப்பினர்களின் சடலங்களைக் (பொதுமக்களாகவும் இருக்கலாம்) காட்டும் புகைப்படங்கள் குழுவுக்குக் கிடைத்தன.

2009 ஓகஸ்ட் 25 ஆம் திகதி ஐக்கிய ராஜ்யத்தை தளமாகக் கொண்ட சனல் - 4 நியூஸ் ஊடகம் பல சிறைக் கைதிகள் கைகள் பின்னால் கட்டப்பட்டு இலங்கை படை வீரர்களால் சடுதியாக மரண தண்டனை நிறைவேற்றப்படும் வீடியோப் படங்கள்ள ஒளிபரப்பியது. படத்திலிருந்த கைதிகள் நிர்வாணமாகவும், கண்கள் கட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டனர். மிக அருகில் இருந்து தலையில் சுடப்படுமுன்னர் அவர்கள் உதைக்கப்பட்டு சேற்றில் தடுமாற விடப்பட்டார்கள்.

அதற்கு முன்னர் கொல்லப்பட்டிருக்கக் கூடிய ஏனைய பல சிறைக்கைதிகளையும் அந்தப் படம் காட்டுகிறது. சனல் - 4 இனால் 2010 டிசெம்பர் 2 ஆம் திகதி அதே காட்சியைக் கொண்ட இன்னுமொரு படம் நிலப்பரப்பின் மீது பார்வையைச் செலுத்தி கொலைத் தண்டனை நிறைவேற்றப்பட்ட நிர்வாண கோலத்தில் இருந்த மேலும் பல ஆண்கள் மற்றும் பெண்களின் சடலங்களைக் காட்டியது. அவர்களுள் இளம் வயது சிறுவன் ஒருவனும் ஒரு பெண்ணும் காணப்பட்டார்கள். அப்பெண் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரசித்தி பெற்ற ஊடக தொகுப்பாளர் 'இசைபிரியா' என இனங்காணப்பட்டார்.

2009 மே 18 ஆம் திகதி 53 ஆவது படைப்பிரிவின் 'எதிரி நடவடிக்கை' ஒன்றின் போது இசைப்பிரியா கொல்லப்பட்டார் என்று பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தால் பட்டியலிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். நீடிக்கப்பட்ட வீடியோப் படம் சில படைவீரர்களின் முகங்களைக் காட்டுவதோடு சிலர் காட் சியை கையடக்கத் தொலைபேசி மூலம் படம் பிடிப்பதையும் காணக் கூடியதாகவிருக்கிறது.

150. கொலைத் தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன் எடுக்கப்பட்டதாகத் தெரியும் புகைப்படங்களில் உயிருடன் இருக்கும் சிறைக்கைதிகள் இடையே இந்தச் சிறுவனை ஒத்த ஒருவன் இருப்பதையும் அவர்கள் கைகள் பின்னால் கட்டப்பட்டிருப்பதையும் காணக் கூடியதாகவிருக்கிறது. ஆரம்பத்தில் இலங்கை இராணுவத்தினால் தடுத்து வைக்கப்பட்ட சில தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டிருப்பதையும் புகைப்படங்களில் காணக்கூடியதாகவிருக்கிறது. இரத்தம் வழிந்தோடும் நிலையில் மரமொன்றில் கட்டப்பட்ட இளம் ஆண் ஒருவரையும் வீடியோப் படம் ஒன்று காட்டுகிறது. பின்னர் புலிக்கொடியொன்றினால் போர்த்தப் பட்ட புதை குழியொன்றில் அவரைக் காணக் கூடியதாகவுள்ளது.

(54)

### (ஆ) காணாமல்போதல்கள்

151. பிரிக்கும் அமைவிடங்களில் அல்லது ஓமந்தையில் ஆள்களின் பகிரங்கப் பதிவொன்றை அரசு வழங்கவில்லை என்பதோடு, அச்செயற்பாட்டைக் கண்காணிப்பதற்கு சர்வதேச அமைப்புக்களை அனுமதிக்கவுமில்லை.

இதனால் ஆள்களை தேடிக் கண்டு பிடிப்பது சிரமமாகவுள்ளது. கற்றபாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக் குழுவின் அமர்வுகளின்போது, ஆரம்பத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளை அடைந்தபோது தம் கணவன்மார்கள் அல்லது உறவுகள் அவர்களிடம் இருந்து பிரிக்கப்பட்டதாகவும் அன்று முதல் இன்று வரை அவர்கள் பற்றிய எதுவித தகவலும் கிடைக்கவில்லை எனவும் பல பெண்கள் தெரிவித்ததோடு, அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை அரசு ஊர்ஜிதம் செய்யவுமில்லை. 2009 மே மாதத்தில், காணாமல் போனதாக, சில தனி நபரல்லாத ஆள் குழுக்கள், பற்றிக் குறிப்பிடும் குறைந்தபட்சம் 32 குற்றச்சாட்டுக்கள் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. இவர்களுள் பலர் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தவர்களாவர்.

### (இ) வன்புணர்ச்சி மற்றும் பாலியல் வன்செயல்

152. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போதும் அதனைத் தொடர்ந்தும் தமிழ் பெண்களுக்கெதிராக நிகழ்ந்த வன்புணர்ச்சி மற்றும் பாலியல் வன்முறைகள் மிகக் குறைவாகவே அறிவிக்கப்பட்டுள்ளன.

கலாசார நுண்ணுணர்வுகள் மற்றும் நற்பெயருக்கு ஏற்படும் கறை தாக்கத்துக்குள்ளானவர்கள் தம் உறவுகளுக்குக் கூட அத்தகைய குற்றச்செயல்கள் பற்றிய அறிவிப்பைத் தடுத்தது. அது அவ்வாறிருந்த போதிலும், யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போதும் அதனைத் தொடர்ந்தும் அரச படையினர் மற்றும் அவர்களின் தமிழ் துணையாளர்களாலும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டது பற்றிப் பெண்கள் மறைமுகமாக அறிவித்துள்ளனர்.

153. பல புகைப்படங்களும், வீடியோப்படங்களும், குறிப்பாக சனல் - 4 இனால் வழங்கப்பட்ட வீடியோப் பதிவுகளும், இறந்த பெண் உறுப்பினர்களைக் காட்டுவதாக உள்ளன. அவற்றில், மீண்டும் மீண்டும் பெண்கள் நிர்வாணமாக அல்லது கீழாடைகள் அகற்றப்பட்டு அவர்களின் மார்பகங்கள் மற்றும் மர்ம உறுப்புகள் திறக்கப்பட்டுக் காட்டப்படுகிறார்கள். இலங்கை இராணுவப் படைவீரர்களின் சிங்கள மொழி விளக்கத்துடனான சனல்-4 படங்கள், கொலை செய்யப்படு முன் அல்லது பின் வன்புணர்ச்சி அல்லது பாலியல் வன்முறை நிகழ்ந்திருக்கலாம் என்ற உறுதியான ஊகத்தை ஏற்படுத்துகிறது.

ஒரு வீடியோ படத்தில் இலங்கை இராணுவப் படை வீரர்கள் இறந்த (அல்லது குற்றுயிராகக் கிடக்கும்) நிர்வாணமான சடலங்களை மிகவும் அவமரியாதையுடன் 'ட்ரக்' வண்டி ஒன்றில் ஏற்றுவதையும், அசைவதாய்த் தெரியும் ஒரு பெண்ணின் காலை பலமாய் மிதிப்பதையும் காட்டுகிறது. இலங்கை காவல் துறையின் (குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு) அல்லது இலங்கை இராணுவத்தின் பொறுப்பிலிருந்த போது சந்தேகிக் கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள்வன் புணர்ச்சிக்குட்படுத்தப்பட்டதாகவும் அறிக்கைகள் இருக்கின்றன.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மட்டப் பெண்கள் உதைபந்தாட்டத்தில் மாதகல் சென்.ஜோசப் சாதனை படைத்தது



யாழ்ப்பாணம், மே 13

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்களில் 19 வயதுப் பிரிவின் கீழ் பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுச் சாதனை படைத்தது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கரவெட்டி விக்கினேஸ்வர கல்லூரி அணி மோதியது.

முதல் பாதி ஆட்டத்தின்போது இரு அணிகளும் தத்தமது அணிகளுக்கான கோல்களைப் பெறும் முயற்சியை மேற்கொண்டு எதிர் அணிகளின் கோல் பரப்பினுள் காணப்பட்டனர்.

எனினும் இரு அணியினரும் கோல்களைப் போடாததால் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது சமனிலையில் முடிவுற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்துக்காக போட்டி ஆரம்பமானபோது இரு அணியினரும் மிகுந்த உற் சாகத்தோடு விளையாடினர்.

இரு அணி வீராங்கனைகளும் தத்தமது அணிகளுக்காகக் கோல்களைப் பெற எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

இதன்போது மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய அணியினர் ஆட்டம் முடிவதற்கு 15 நிமிடங்கள் இருக்கையில் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி கோல் ஒன்றை அடித்தனர்.

ஆட்ட முடிவில் சென்.ஜோசப் மகா வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் விக்கினேஸ்வராக் கல்லூரியை வெற்றி கொண்டது.

மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலய அணி முதன் முறையாகப் பெண்களுக்கான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்கு கொண்டமை குறிப்பிடத் தக்கது. (ஐ-23)



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் அதன் எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழகம் முதலிடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

வெற்றியீட்டிய இந்தக் கழகத்துக்கு சிங்கர் நிறுவன சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் சி.அஜந்தன் பரிசில் வழங்குகிறார். யாழ்ப்பாண அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் ஆகியோரும் உள்ளனர் (ம-288)

## மரதன் ஓட்டம்

யாழ். கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய மாவட்ட மட்டத்தின் நடத்திய ஓட்டப்போட்டியில் யோ. நிரோஜன் (கொழும்புத்துறை), ஜெயானந்த் (மானிப்பாய்), யே.தர்சன் (கொழும்புத்துறை) ஆகியோர் வெற்றிபெற்றனர். (ஐ-135)

A.S.L.A.E.F.- UNIVERSITY OF KELANIYA - FRENCH EMBASSY

**SRI LANKAN DANCE PERFORMANCE**

களனிப் பல்கலைக்கழக Fine Arts மாணவர்கள் வழங்கும் 12 பகுதிகளைக்கொண்ட நடன நிகழ்வு.

துணைவேந்தர் **Prof. Sarath Amunugama**
கலந்துகொண்டு இந் நிகழ்வைச் சிறப்பிக்க உள்ளார்.

திகதி: Friday13 May 2011
நேரம்:- 2 to 4 p.m
இடம்:- Main Auditorium, University of Jaffna.

**அனுமதி இலவசம்**

அனுசரணை வழங்குவோர்:-
- The Sri Lankan French Alumni (ASLAEF)
- University of Kelaniya
- University of Jaffna
- Embassy of France
- Alliance Francaise de Jaffna.

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri - Nallur Road, Jaffna,
Phone:- 021-222 8093, e-mail:-
alliancejaffna@yahoo.com.
(4150)

## எல்லே போட்டியில் ஹாட்லி சம்பியன்

யாழ்ப்பாணம், மே 13

யாழ். மாவட்ட பாடசாலை களுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டியில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான எல்லே போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. வெற்றிபெற்ற பாடசாலைகள் வருமாறு:-

பருத்தித்துறை ஹாட்லிக் கல் லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி. (ம-23)

**பராட்டி வாழ்த்துகின்றோம்**



திருமதி
**ரூபா உதயரட்ணம்**

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராக இருந்து வலிகாம கல்வி வலய ஆரம்பக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ள இவர் மேலும் பல உயர்வுகள் பெற்று சேவையில் வளர பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர், ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள்,
ஆனைக்கோட்டை, நவாலிக்குடும்பம்.
(சி/575975)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**

அமரர்
**சபாபதி குமாரசாமி(V.C)**



தோற்றம்
*04.07.1940*

மறைவு
*13.04.2011*

13.04.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அத்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.05.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை கிழக்கு,
4ஆம் வட்டாரம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(கீர்த்தனா ஸ்ரோர்ஸ்)

## அரசாங்க அறிவித்தல்

### நிவாரண விநியோகத்துக்குரிய பொருள்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல்

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு மூன்று மாதங்களுக்குரிய நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்காக பின்வரும் பொருள்களை கொள்வனவு செய்வதற் கான கூறுவிலைகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன.

1. சிவப்பு நாட்டரிசி
2. கோதுமை மா
3. சீனி
4. பருப்பு

இப்பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறு விலைகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன. இப் பொருள்களை விற்பனை செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்புப் பணமாக ரூபா 5,000.00 உம், மீளளிக்க கூடியதான வைப்பாக ரூபா 50,000.00 உம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை புனர்வாழ்வு கிளையில் பெற்றுத் தபால் உறையின் மேல் மூலையில் ''நிவாரண விநியோகத்துக்குரிய பொருள்களுக்கான கூறுவிலை'' என குறிப்பிட்டு 27.05.2011 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு புனர்வாழ்வுகிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். கூறு விலைகள் சமர்ப்பிக்கப்படும் போது அப்பொருள்களுக்கான மாதிரி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொருள்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பொருள்களின் தரம், கேள்வி, நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பபடிவங்களை மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்துடன் தொடர்புகொண்டு 16.05.2011 ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளமுடியும்.

கூறுவிலைகள் 27.05.2011 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறு விலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும். பொருள்களை விநியோகிப்பவர்கள் கோரப்படும் தொகையினை கொள்வனவு கட்டளை வழங்கப்பட்ட தினத்தில் இருந்து ஒருவாரத்தினுள் நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

திருமதி இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயாவிளானில் மீளக்குடியமர்தலுக்கான கலந்துரையாடல்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 15.05.2011 இல் வயாவிளான் J/244, J/245, J/252 கிராம சேவையாளர்களுக்கான பிரிவினரது சந்திப்பு வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

கௌரவ மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா
(பாரம்பரிய கைத்தொழில்கள் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)
அவர்கள் கலந்துகொள்ளவுள்ளார்.

(40-20-50)(4145) தகவல்: ஏற்பாட்டாளர்கள்.



## கண்ணீர் அஞ்சலி



"எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
வே. இராசகுமார் அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி வேலன் வள்ளியம்மை**
11.05.2011ஆம் திகதி காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்."

பிரதேச செயலாளரும், சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும், நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பழை.



## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 | | 28 |
| ★ | | ★ |
| 12 | | 04 |
| ★ | | ★ |
| 1939 | | 2007 |



**தம்பு குணரத்தினம்**
(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் கமநல சேவை நிலையம், நல்லூர்)
திதி: ஏகாதசி

அப்பா,
நம் வாழ்க்கைக்கு வித்திட்டவர் நீங்கள்
துன்பத்திலும் இன்பத்திலும் வாழப்பழக்கியவர் நீங்கள்
இன்று வாழ பழகிவிட்டோம்
வாழ்வையும் வென்றுவிட்டோம் - ஆனால்
வாடுகின்றோம் உங்கள் நினைவால்
இறப்பு என்பது வாழ்வின் கட்டாயம் நீங்கள்
உடலால் மறைந்து - நம்
உணர்வுகளில் வாழ்கின்றீர்கள்.

*22/1, கனகரத்தினம் வீதி,
அரியாலை
(சாஸ்திரியார் லேன்), யாழ்ப்பாணம்.*

மனைவி,
பிள்ளைகள்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகில்
12.06.1977
விண்ணுலகில்
13.04.2011

அமரர் **தேவராஜா பிறிற்னோ** (விஜய்)

மண்ணுலகில் வந்துதித்தோர் மாய்வதில்
மாற்றம் இல்லை - எனினும்
கண்ணான உன் மனைவி கதிகலங்க
நீ பெற்றெடுத்த முத்துக்கள் பரிதவிக்க
உன்னை பத்து மாதம் சுமந்த
அன்னை கதறியழ
உன் உடன் பிறப்புக்கள் உணர்
விழந்து நிற்க ஈடுசெய்ய முடியாத
உன் இழப்பால் உறவுகள்
எல்லாம் நிற்கதி ஆயின ஐயா..!
எம்மை எல்லாம் ஏமாற்றி எங்கு சென்றாய் விஜய்!..?

இல.20, சென்.செபஸ்ரியன் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.


## மணவாளக் கோலவிழா

யாழ்ப்பாணம், மே 13

கொக்குவில் மாத்தனைக் கந்த சுவாமி கோயில் கும்பாபிஷேக தினத்தை ஒட்டி மணவாளக் கோல விழாவும், அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும் நாளை சனிக் கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளன.

முற்பகல் 11 மணிக்கு சங்காபிஷேகம், விசேட தீபாராதனையும் மாலை 5 மணிக்கு பூசைகளும், மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையினைத் தொடர்ந்து சுவாமி அலங்காரத்துடன் வீதி வலம் வருவதும் இடம்பெறவுள்ளன. (ஐ-323)

## சேவைநலன் பாராட்டு

மருதனார்மடம், மே 13

ஓய்வுபெறுகின்ற வலிகாமம் வலய சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் பொ. நாகரத்தினத்தின் சேவைநலன் பாராட்டு விழா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் எதிர்வரும் திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு வலிகாமம் வலய விஞ்ஞான ஆசிரியர் சங்கத் தலைவர் சி. கணேசகுமார் தலைமை வகிப்பார்.

இந்த நிகழ்விலே வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன், வலிகாமம் வலயக் கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு. சுந்தரசிவம், உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. கைலாசநாதன், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் தி. கந்தசாமி, சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் தி. துரை எங்கரசு, விஞ்ஞானபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. விஜேந்திரசர்மா ஆகியோர் சேவைநயப்புரை வழங்குவார்கள். (ஐ-55)

## மீன் தாக்கி மீனவர் காயம்

தென்மராட்சி, மே 13

கெற்பேலி கடலேரியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர் மீது மீன் பாய்ந்து முட்களால் அந்த நபரின் கையைத் தாக்கி காயப்படுத்திவிட்டு கடலில் வீழ்ந்து மறைந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். கிருஷ்ணபவன் (வயது - 24) என்பவர் கை புஜப் பகுதியில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (த-207)


### வீடு வாடகைக்கு

5, பண்டாரகுளம் ஒழுங்கை மேல்மாடி வீட்டில் கீழ் வீடு 2 அறை, Attach Bath, Kitchen (Gasonly) 6 மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு - 0776401699.

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

ஒரு கைப்பாவனையில் உள்ள பொக்சர் டபிள் சீற் (VDxxxx) மொடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
சுந்தரம் ஸ்ரோர்ஸ், சீனியர் லேன், யாழ்ப்பாணம்.

### தேவை

யாழ். நகரில் நீண்ட காலமாக பிரபல்யமாக இயங்கிவரும் Booking Centre ஒன்றுக்கு பணிபுரிவதற்கு பெண் பிள்ளை ஒருவர் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
**S. Dishanthan - 0779688006.**

### வேலைக்கு ஆள் தேவை

கைதடியில் உள்ள லங்கா எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பின்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.
1. லிகிதர் (பணம் கையாள்பவர்)
2. எரிபொருள் நிரப்புநர் (பம்பர்)

தொடர்புகள் கடிதம் மூலமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம், கைதடி.

### விற்பனைக்கு

பூச்சி நீக்கிய 45 நாள்கள் அல்செசியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொ.பே: 0778798596.


## வீட்டுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் அங்குரார்ப்பணம் இன்று ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 13

ஜனாதிபதிஅவர்களின்மகிந்த சிந்தனையின் பிரகடனத்துக்கமைய குடும்பங்களின் வருமானம் மற்றும் போசனையை அதிகரிக்கும் நோக்கில் வீட்டுகள் மட்டத்தில் விவசாயம் மற்றும் ஏனைய உற்பத்திகளை அதிகரிக்கும் வகையில் ஒரு மில்லியன் மனைப்பொருளாதார அலகுகளை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆரம்பக் கூட்டம் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரின் தலைமையில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதற்கட்டமாக ஏறத்தாழ 5 ஆயிரம் குடும்பங்கள் வரை அபிவிருத்தி நோக்கி கட்டியெழுப்புவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். (ஐ)


## S.L.E.A.S / S.L.A.S (open)
### இறுதிக் கருத்தரங்கு

S.L.E.A.S :- 15.05.2011 / 17.05.2011
S.L.A.S (open) :- 16.05.2011

நேரம்: காலை 9.00 மணி பி.ப. 2.00 மணி வரை

1. கொழும்பு நகரின் முன்னணி ஆசிரியரும் உயர் நிர்வாக அதிகாரியும் கருத்தரங்கினை நடத்துவர்.
(விவரங்களுக்கு: www.tips4mindfitness.blogspot.com)
2. Multimedia Projector மூலம் விளக்கங்கள்.
3. அச்சடித்த பாடக்குறிப்புக்கள்.

குறிப்பு:- பதிவுகள் 14.05.2011 பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:-

**E Tec Jaffna**

ரெக் ஸ்ரீலங்கா, மானிப்பாய் வீதி, கோப்பாய் சந்தி, கோப்பாய்.
T.P. No:- 0783619545. (சி/575983)



## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சின்னமணி
*(ஓய்வு பெற்ற புகையிரத ஊழியர்)*



மாவிட்டபுரம், கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சின்னமணி (12.05.2011) நேற்று வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வல்லிபுரம் - சின்னாச்சி தம்பதியரின் மகனும் கணபதிப்பிள்ளை- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தங்கச்சிப்பிள்ளையின் அன்புக்கணவரும், செல்வராசா, சரோஜினிதேவி, சாந்தாதேவி, சிறிஸ்கந்தராஜா, சிவானந்தராஜா, சகுந்தலாதேவி, சித்திராதேவி, சிவலோகராஜா, கிருபாகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் புஷ்பராணி, யோகேஸ்வரன், சிவகுமார், பத்சலா, சிவனேஸ்வரி, ஆனந்தகிருஸ்ணன், லக்சனா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.05.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (4156)

தகவல்:
குடும்பத்தினர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 19 | | 13 |
| ★ | | ★ |
| 04 | | 04 |
| ★ | | ★ |
| 1951 | | 2011 |



*கந்தசாமி சறோஜினிதேவி*

எங்கள் அன்புச் சகோதரியே
நீ பிரிந்து நாள்கள் 31 ஆனதம்மா
ஆறவில்லை எங்கள் உள்ளம்
புன்னகை பூத்த பூ முகத்தை
மறக்கமுடியவில்லையே சறோஜி
பாசத்தின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய்
கருணையின் ஊன்றுகோலாய்
நட்புக்கு எடுகோலாய்
நீ வாழ்ந்த நினைவுகளுடன்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சோமராந்தோட்டம்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (4155)

என்றும் நினைவுகளுடன்:
சகோதரர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும் உடனடியாகத் தேர்தலை நடத்த முடியாது என்று ஆணையாளர் கூறினார்.

தேர்தல் ஒழுங்குகளை மேற்கொள்வதற்குக் கால அவகாசம் தேவை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலுக்காக வேட்பு மனுக்கள் கோரப்பட்டு எதிர்வரும் 30ஆம் திகதியுடன் 6 மாதங்கள் பூர்த்தியடைகின்றன. பொதுவாக வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டு 6 மாத காலத்துக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் இல்லையேல், அந்த வேட்புமனுக்கள் செல்லுபடியற்றதாகும்.

எனினும் நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாகத் இந்தத் தேர்தல் பிற்போடப்பட்டதனால், அடுத்த மாத நடுப்பகுதியில் அல்லது மூன்றாவது வாரமளவில் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(உ)

## லசந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளார்.

அரசதரப்பு சாட்சியாக மாறி, லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையுடன் மூத்த இராணுவ அதிகாரி ஒருவரை சம்பந்தப்படுத்தும் வகையில் சாட்சியம் அளித்தால், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகவும், தனது வீட்டுக்கு போதிய பாதுகாப்பு வழங்குதாகவும் தீவிரவாத விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி தனக்கு வாக்குறுதி கொடுத்தார் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஆனால் லசந்தவின் கொலையுடன் சம்பந்தப்படுத்துமாறு கூறப்பட்ட இராணுவ அதிகாரியின் பெயரை அவர் வெளியிடவில்லை.

இதையடுத்து சாட்சியம் அளித்த முன்னாள் புலனாய்வு அதிகாரியை மே 26ஆம் திகதி வரை காவலில் வைக்க கல்கிசை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையுடன் சரத் பொன்சேகாவை சம்பந்தப்படுத்தும் முயற்சியில் இலங்கை பாதுகாப்பு அமைச்சு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந் தன என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## பரிந்துரைகளைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை விவகாரம் விவாதிக்கப்பட்டது.

நிபுணர் குழு அறிக்கையின் அடிப்படையில் அனைத்துலக சுயாதீன விசாரணை ஒன்றுக்கு ஐரோப்பிய நாடாளுமன்றம் அழைப்பு விடுக்கவேண்டும் என்று கூறும் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

எனினும் திருத்தங்களுடன் அப் பிரேரணையை ஏற்றுக் கொண்ட நாடாளுமன்றம் நிபுணர் குழு அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கை அரசு முழுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

போர் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் சிங்களவர்களுக்குச் சமமாகத் தமிழர்களும் வாழ்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தி தமிழர்களுக்கு பிரகாசமான, மகிழ்ச்சியான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தனது அறிக்கையில் ஐரோப்பிய நாடாளுமன்றம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நேர்மையான நம்பகத்தன்மை மிக்க வெளிப்படையான விசாரணையை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ)

மதிப்பு மிகு மருத்துவருக்கு பொருத்தமான கௌரவிப்பு
பாராட்டி வாழ்த்துகிறோம்



வைத்திய கலாநிதி
சின்னையா வேலும் மயிலும்
D.A.M & S பாலரோக வைத்திய நிபுணர் (Children Disease)

சமஸ்தலங்கா ஆயுர்வேத வைத்திய சம்மேளத்தின் 83 ஆம் ஆண்டுவிழா குருநாகலிலுள்ள வினோலி மண்டபத்தில் 03.04.2011 இல் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சுதேச வைத்தியத்துறை அமைச்சர் சாலிந்த திசநாயக்க அவர்களால் வைத்திய கலாநிதி சின்னையா வேலும் மயிலும் அவர்களுக்கு 'ஆயுர்வேத வைத்திய சிரோன்மணி பண்டித' என்னும் கௌரவப் பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

வேலும் மயிலும் ஒருகுறியீடு

தேரோடு வீதியெல்லாம் அங்கப்பிரதிஷ்டை
தேகமெல்லாம் சித்தர்கள் யோகிகளின்
ஆசிகள் பிரதிஷ்டை
வேர்களோடும் மூலிகைளோடும்
அவர் வாழ்க்கை;
கடினஉழைப்பு !
அதற்குள்ளேயும் அதற்குள்ளேயும்
தலைகவிழ்ந்து நோய் செவிமடுக்கும்

பரிவு; பணிவு
தளர்ந்த தேகம்; தளம்பவில்லா மனிதம்
சினம் இல்லை; புன்சிரிப்பு பிறவிச்சொத்து
வளரும் பிள்ளைக்கும் வாழும் பிள்ளைக்கும்.
'வைத்தியசிரோன்மணி பண்டித'
வேலும் மயிலும் ஒரு குறியீடு!

வாழிய .....
ம.அம்பிகைபாலன் குடும்பத்தினர்.
குமிழமுடி, அல்வாய். (சி/575988)

## உள்ளூராட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவு செய்யப்பட்ட கட்சியாக இருக்க, வேட்புமனுக்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்று போடப்பட்டிருந்ததால் எதிர்க்கட்சிகள் ஆட்சேபம் கிளப்பின. இதனால் அந்த மனுக்கள் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களால் நிராகரிக்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் ஐ.ம.சு. முன்னணி வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய மூன்று நகர சபைகளுக்கும் காரைநகர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வேலணை, வலி. தெற்கு, வலி. வடக்கு, வலி. மேற்கு, வலி. தென்மேற்கு, வலி. கிழக்கு, வடமராச்சி தென்மேற்கு, பருத்தித்துறை, சாவகச்சேரி, நல்லூர் ஆகிய பிரதேச சபைகளுக்குத் தாக்கல் செய்திருந்த வேட்பு மனுக்களே நிராகரிக்கப்பட்டிருந்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, கரைச்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளுக்கு ஐ.ம.சு.முன்னணி தாக்கல் செய்திருந்த வேட்பு மனுக்களும் அப்போது நிராகரிக்கப்பட்டிருந்தன.

உள்ளூராட்சித் தேர்தலையொட்டி ஐ.ம.சு.முன்னணி ஏனைய மாவட்டங்களில் தாக்கல் செய்த வேட்பு மனுக்களில் 35 நிராகரிக்கப்பட்டிருந்தன. இவை அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் நிராகரிக்கப்பட்ட 4 வேட்பு மனுக்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 3 வேட்பு மனுக்களையும் இரண்டு சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்களையும் ஏற்றுக் கொள்ளும்படியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவின் பிரஜைகள் முன்னணி முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச சபைக்குத் தாக்கல் செய்த மனுக்களையும் ஏற்றுக் கொள்ளும்படி நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அக்குரஸ்ஸ, மாவத்தகம ஆகிய பிரதேச சபைகளுக்கும் தாக்கல் செய்திருந்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் நிராகரிக்கப்பட்ட அனைத்து வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதை அடுத்து, இம்முறைத் தேர்தலில் அரச தரப்புக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலேயே பிரதான போட்டி இடம்பெறவுள்ளது. (உ)

## குற்றத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் 10 இலட்சம் கையொப்பங்களைத் திரட்டும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துள்ளது. மக்களிடம் இவர்கள் பலவந்தமாகக் கையொப்பங்களை வாங்குகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகுகின்றன. இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பாக அவர் 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிலர் குருதியில் கையொப்பம் இடுகின்றனர். அது மட்டுமின்றி நாட்டைப் பாதுகாப்பதற்காக தற்கொலைப் போராளிக் குழு ஒன்றைப் பயிற்றுவித்துள்ளோம் என்றும் கூறுகின்றனர்.

மற்றுமொரு தரப்பினர், நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக 10 இலட்சம் கையொப்பங்கள் வாங்கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். இவர்கள் வடக்கு,கிழக்கு உட்பட ஏனைய சிற்சில பிரதேசங்களில் மக்களை அச்சுறுத்தி பலவந்தமாகக் கையொப்பம் வாங்கியுள்ளனர் என செய்திகள் வெளியாகியுள்ளன.

நிபுணர் குழு அறிக்கையைத் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் அரசு மொழிபெயர்த்து முதலில் மக்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். அதன் பின்னர் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களிடமிருந்து கையொப்பம் வாங்கியிருக்கலாம்.

மாறாக, அறிக்கை தொடர்பில் மக்களுக்குத் தெளிவுப்படுத்தாமல், அறிக்கையை மொழிபெயர்த்து வெளியிடாமல் இவ்வாறான நடவடிக்கையை அரசு முன்னெடுப்பது பாரிய குற்றமாகும். இலங்கை ஜனநாயக நாடு எனக் கூறும் அரசுக்கு இது ஜனநாயக நடவடிக்கையா என நன்கு புரியும்.

அறிக்கையை எத்தனைபேர் முழுமையாக வாசித்திருப்பர்? எத்தனை பேருக்கு நாட்டில் ஆங்கிலம் தெரியும்?- என்ற கேள்விகளும் எமக்கு எழுகின்றன.

எனவே அரசின் இக் கையெழுத்து வேட்டை நடவடிக்கையானது வெற்றுப் பத்திரத்தில் கையொப்பம் இடுவதற்கு சமமானதாகும். அதுமட்டுமன்றி மக்களிடம் பலாத்காரமாக கையொப்பம் பெறுவது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

ஐ.நா. எமது அமைப்பு எனக் கூறும் அரசு அதற்கு எதிராகத் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதனைப் பயன்படுத்தி சிலர் நாட்டில் பிரிவினைவாதத்தைக் கட்டவிழ்த்து விட முயற்சிக்கின்றனர்.

சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளும் இலங்கையை ஐ.நாவுக்கு எதிராக செயற்பட வேண்டாம் என முன் எச்சரிக்கை விடுத்துள்ளன். அரசு ஐ.நாவை விளையாட்டுப் பொம்மையாகக் கருதக் கூடாது. அதன் பின்விளைவுகள் பாரதூரமானவையாகும்.

உலகில் ஜனநாயகம் மிக்க நாடு எனக் கூறப்படும் இந்தியா இலங்கை விடயத்தில் இன்னும் மௌனம் காப்பது ஆச்சரியப்பட வைத்துள்ள அதே வேளை சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஊடக அடக்குமுறை இல்லை எனக் கூறும் அரசு நாட்டில் உள்ள அனைத்து ஊடகங்களுக்கும் நிபுணர் குழு அறிக்கையை கையளித்ததா? இல்லை. மாறாக அரசுக்கு சார்பான ஊடகங்களுக்கே வழங்கியது. இது ஊடக அடக்குமுறையல்லவா?

ஐ.நா. நிபுணர் குழு இலங்கை மீது சுமத்தியுள்ள மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்புவதற்காக அரசு முன்னெடுக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயற்பாடுகளாகவே உள்ளன - என்றார்.

**தவறிவிட்டது**

கோப்பாய் பழைய தபாற்கந்தோருக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் வீட்டுத் திறப்பு ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 0772178699

**தவறிவிட்டது**

யாழ்ப்பாணத்துக்கும் - இருபாலைச் சந்திக்கும் இடையில் இல. N.P.V.M 5836 மோட்டார் வாகன பின்புற இலக்கத் தகடு தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0773084904/ 0774138397 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**காணவில்லை**

கடந்த (10.05.2011) அன்று முருக மூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் வயல் வெளியில் மேய்ந்துகொண்டிருந்த வேளையில் கறுப்பும் சிவப்பும் கலந்த ஒரு பெரிய ஆடு, ஒரு மண்நிற கடாய் ஆடு சிவப்பு நிறம், நெற்றியில் வெள்ளைநிறம் உடையதும், கறுப்புநிறம் உடையது ம் இரண்டு மறி ஆடுகளையும் காணவில்லை. இதனைக் கண்டவர்கள் கீழ்க்காணும் தொ.பே. இல. தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு:- 077 8680 366, 077 9288 263 மயூரன்.

லீகள், A4 பதிப்பு செய்யும்
மெசின்கள் முதற்தர சேவிஸ்சுடன்
ஓவ்செற் விற்பனைக்குண்டு
தொடர்புக்கு: 077 0760...
ஞாயிறு மட்டுமே பார்வையிடலாம்.
2 மட்டுமே உள்ளன.
ரூபா: 1,75,000/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

## இலங்கையில் பணியை முடித்து

# நாட்டு திரும்பும் நெதர்லாந்துத் தூதுவர் நேற்றுக் குடாநாட்டுக்கு இறுதி விஜயம்



யாழ்ப்பாணம், மே13

இலங்கையில் தனது பணியை முடித்து வெளியேறும் நெதர்லாந்து தூதுவர் திருமதி லியோனி நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். அவர் யாழ். செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று மாலை 5.00 மணிக்கு அரச அதிபரைச் சந்தித்த நெதர்லாந்துத் தூதுவர் சுமார் அரை மணிநேரம் கலந்துரையாடிய பின்னர் விடைபெற்றுச் சென்றார். இதன்போது அரச அதிபர் தூதுவருக்கு யாழ். குடாநாட்டின் வரைபடம் பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னத்தை வழங்கினார்.

கடந்த மூன்று வருடங்களாக இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவராகப் பணியாற்றிய திருமதி லியோனி ஊடாகவே யாழ். நகரிலுள்ள கோட்டையின் புனரமைப்புப் பணிகளுக்கு அதிகளவு நிதியை ஒதுக்கியிருந்தது நெதர்லாந்து அரசு.

அதுமட்டுமன்றி ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னாள் போராளிகளுக்கான சமூகப் பொருளாதார உதவி வழங்கும் திட்டங்களுக்கும் நெதர்லாந்துத் தூதுவர் ஊடாகவே நெதர்லாந்து நிதி ஒதுக்கீடு செய்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த மூன்று வருடங்களாக இலங்கையில் பணியாற்றிய இவர் தனது பதவிக்காலத்தை முடித்து வெளியேறுகிறார். தனது இறுதி விஜயமாக அவர் யாழ். வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-14)

## இருநாள் மின்வெட்டு

உயரழுத்த மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சாரசபை அறிவித்துள்ளது. (ஐ)

## 5 இலங்கையர் உட்பட 183 பேர் மெக்ஸிக்கோவில் கைது

ஐந்து இலங்கையர்கள் உட்பட 183 பேர் மெக்ஸிக்கோ பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் அனை வரும் கௌத் தமாலாவில் இருந்து அமெரிக்காவுக்குச் செல்லும் வழியிலேயே மெக்ஸிக்கோவில் தங்கியிருந்தனர். (த-சி)

# வடமராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அனைத்துத் தரப்பினதும் பங்களிப்பு அவசியம்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச செயலர் சத்தியசீலன்

யாழ்ப்பாணம், மே13

வடமராட்சிப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய இங்குள்ள அனைத்துத் திணைக்களங்களும் எம்முடன் பங்காளிகளாக மாற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயளாலர் சி.சத்தியசீலன்.

இப்பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒன்றிணைந்து, குழுவாக இயங்கி எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். கமநெகும திட்டம் போன்ற, ஜனாதிபதியால் வகுக்கப்பட்ட திட்டங்களின் வழிகாட்டலில் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துத் திணைக்களங்களும் பங்காளிகளாக இருந்து இப்பிரதேசத்தில் நிலையான, நீடித்த அபிவிருத்தியைப் பெற உதவவேண்டும்-என்றார்.

இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும், மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் திரையில் காண்பிக்கப்பட்டு அவற்றை நிறைவேற்றுவது தொடர்பாகவும், நிறைவேற்றப்பட்டமை தொடர்பாகவும் சபையோரின் கருத்துக்கள் மூலம் தெளிவாக ஆராயப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சிவஞானம் சிறிதரன், சில்வேஸ்திரி அலன்ரீன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறிதரன் ஆகியோர் பிரதேச செயலர் சி.சத்தியசீலனுடன் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்தனர்.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் முடிவுற்றதும் அங்கு சமுகமளித்திருந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரையும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன், சிறிதரன் ஆகியோர் சந்தித்து அளவளாவினர். சில பிரதிநிதிகள் அவர்களிடம் பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்தனர். அக்கோரிக்கைகள் தொடர்பாக சாதகமாக ஆராயப்பட்டு உரியநடவடிக்கைகள் எடுத்துத் தருவோம் எனவும் அவர்கள் உறுதியளித்தனர். (த-236-319)

## மதுபான நிலையங்கள் மூன்று நாள்கள் பூட்டு

வெசாக் (வைகாசி விசாகம்) தினத்தை முன்னிட்டு மதுபான விற்பனை நிலையங்கள் யாவும் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் மூடப்பட்டிருக்க வேண்டுமென மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## பல்கலைக்கழக பிக்கு முன்னணி நேற்று உயர்கல்வி அமைச்சு முன் ஆர்ப்பாட்டம்

அனைத்துப் பல்கலைக்கழகப் பிக்கு முன்னணி ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம் உயர்கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்று நண்பகல் நடைபெற்றது.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவிலிருந்து மு.ப. 10.30 மணி அளவில் பேரணியாக வந்த பிக்குகள் உயர்கல்வி அமைச்சுக்கு முன்பாக முற்பகலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனுராதபுரம் பௌத்த பிக்குகள் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற கட்டுகெந்தே சிறி சுணந்த தேரர் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டமைக்குப் பல்கலைக்கழக நிர்வாகமும், அதிகாரிகளும், அரசும் பொறுப்பேற்க வேண்டும் என பௌத்த தேரர்கள் குற்றம் சாட்டினர்.

தேரரின் பரீட்சைப் பெறுபேறுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையால் மனமுடைந்த தேரர் விஷம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார் என்றும் இதற்கான பொறுப்பை பல்கலைக்கழக நிர்வாகமே ஏற்கவேண்டும் என்றும் தேரர்கள் கோஷங்களை எழுப்பினர். (த-சி)

# மாணவரை மது போதையில் கண்டால் உடனடியாக எமக்கு அறிவியுங்கள்

## பொலிஸ் பொறுப்பதிகாரிகள் கோரிக்கை

பாடசாலை மாணவர்களை மது போதையில் இனங்கண்டால் எமக்கு உடன் அறியத்தாருங்கள். சட்டத்தின் முன் அவர்களுக்கு தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மாணவிகள் மீது சேஷ்டை புரிபவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு நெல்லியடி, வல்வெட்டித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரிகள் கூட்டாகத் தெரிவித்தனர்.

கரவெட்டிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதில் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மூன்று மதுச்சாலைகள் இங்கு உள்ளன. அதில் ஒன்றில் மட்டுமே மதுவை அமர்ந்திருந்து குடிக்கக் கூடிய வசதியுண்டு. ஏனைய இரண்டும் மது வகைகள்விற்கும் நிலையங்களே.

எனவே பாடசாலை மாணவர்கள் மது வாங்குவது இனங்காணப்பட்டால் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனை வழங்குவோம். இதனை விட மாணவிகள் மீது ஏற்கனவே சேஷ்டை விட்டவர்கள் நீதிமன்றில் நிறுத்தப்படவுள்ளனர்.

ஏனையவர்களுக்கும் விரைந்து நடவடிக்கை எடுப்போம்-என்றனர். (த-302)

# நிகழ்வுகள்

### செயலமர்வு

தென்மராட்சி, மே13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வுகள் இன்றும் நாளையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-207)

### வெளியீட்டு விழா

சோதிட ஆய்வு மன்றத்தின் அனுசரணையுடன் கலா ஆரணி வெளியீட்டகம் நடத்தும் இ.கந்தையாவின் நினைவு மலர் வரிசை - 2 என்னும் 'சோதிட வாசகம் முதலாம் புத்தகம்' வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரையை ஓய்வு பெற்ற அதிபர் ஆ.சபாரத்தினமும், சிறப்புரைகளை [illegible] ஆசிரியர் [illegible] ச.திருநாவுக்கரசு, ஆசிரியர் மு.அருளம்பலம், வலம்புரி ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோரும் ஏற்புரையை யாழ்.பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பொ.சந்திரசேகரமும் நிகழ்த்தவுள்ளனர். (ற)

### கூட்டம்

நவாலி சென். பீற்றர்ஸ் றோ.க.த.க பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அ.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்குப் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வில் பராக் ஒபாமா, ஹிலாரி கிளின்டன்

இம்முறை நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள முள்ளிவாய்க்கால் தமிழீழத் தேசிய துக்க நாளில் அமெரிக்க ஜனாதிபதி அதிபர் பராக் ஒபாமா, பாதுகாப்புச் செயலர் ஹிலாரி கிளின்டன், சட்டாமா அதிபர்கள், றொபேர்ட் ஓ பிளேக் போன்றவர்கள் கலந்துகொண்டு அந்த மக்களின் துயரில் பங்கேற்றுக்கொள்வதுடன் ஐ.நா வினால் வெளியிடப்பட்ட இலங்கையின் போர்க்குற்ற அறிக்கை தொடர்பாகவும் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் முக்கிய சிறப்பாளராக முன்னாள் ஐ.நா வுக்கான பேச்சாளர் கலந்து கொள்ளவுள்ளார். அவர் அங்கு மேலும் பல தகவல்களை வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஒருங்கிணைப்புப் பணிகளை நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் நேரடியாகச் செய்து வருவதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவலை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்குறித்த முக்கியமானவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டால் நாடு கடந்த அரசு அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசாக திகழும் என்பதும் உலகளாவிய ரீதியில் தமிழர்களின் விடுதலைப் போருக்கு கிடைத்த முதல் வெற்றியுமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-323) (தமிழ்வின்)

## போர்க் குற்றத்தில் தப்பிக்க 3000 பிக்குகள் பிரார்த்தனை

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும், படையினருக்கும் ஆசிவேண்டி ஜெய பிரித் எனப்படும் பாரிய பௌத்த மத பிரார்த்தனை நிகழ்வு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் உத்தரவின் பேரில் பாதுகாப்பு அமைச்சு இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க அனைத்துலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் அழைத்து வரப்பட்ட 3000 பௌத்த பிக்குகள் பங்கேற்றனர்.

அஸ்கிரிய பீடாதிபதி வண. உடுகம புத்தரகித்த தேரர், மல்வத்தைபீட அனுநாயக்கர் வண. நியங்கொட விஜிதசிறி தேரர், அமரபுர சங்கசபாவின் தலைவரும் தர்மபாலாராமயவின் பிரதம விகாராதிபதியுமான வண. கொட்டுகொட தம்மவன்ச தேரர் ஆகியோரும் இந்த மாபெரும் பிரார்த்தனையில் கலந்து கொண்டனர். (த-323) (புதினப் பலகை)

இணையச் செய்திகள்

# யுத்தத்தில் தமிழர்கள் தோற்றாலும் போராட்டத்தில் அவர்கள் வெல்வர்

இலங்கையில் யுத்தத்தில் தமிழர்கள் தோற்றாலும், நீண்ட காலத்தில் தமிழர்கள் தமது போராட்டத்தில் வெற்றி பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தை வேர்ல்ட் ஸ்கீத் நியூஸின் முன்னாள் பிரதம ஆசிரியர், பேராசிரியர் ஜக்மாஹன் சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கில் இடம்பெற்ற இன அழிப்பில், தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தற்போது பெரும்பாலான தரப்பினர் அறிந்துகொண்டுள்ளனர்.

இந்த நிலையில், இலங்கைக்கு எதிரான யுத்தக்குற்ற விசாரணையை மேற்கொள்ள வேண்டும். இந்தக் கோரிக்கையுடன், சர்வதேச நாடுகள் பல வற்றின் ஆர்வலர்கள் முன்வந்துள்ளனர்.

இதே கோரிக்கையுடன் தமிழகத்தின் எழுத்தாளர்கள், அரசியல் தலைவர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்களும் முன்வந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (த-323)

# சூசையைச் சரணடையுமாறு மனைவி ஊடாக அழுத்தம்

போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதி சூசையை அவரது மனைவி மூலம், இலங்கை கடற்படை தளபதி ஒருவர் சரணடையுமாறு அழுத்தம் கொடுத்துள்ளார்.

இலங்கையின் தகவல் திணைக்களப் பணிப்பாளர் வசந்த பிரிய ராமநாயக்க சிங்கள நாளிதழ் ஒன்றில் எழுதிய கட்டுரையிலேயே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கைக் கடற்படையினரால் நடுக்கடலில் வைத்து விடுதலைப் புலிகளின் படகு ஒன்று வழிமறித்துப் பிடிக்கப்பட்டது.

அதில் விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதி சூசையின் குடும்பத்தினர் இருந்தனர். அவர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லவே முயன்றனர்.

அப்போது சூசை இலங்கைப் படையினருடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தார். அவரே தனது குடும்பத்தினரைத் தப்பியோடுமாறு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அவர்களை இலங்கைக் கடற்படையினர் விசாரணைக்கு உட்படுத்திய போது, சூசை புதுமாத்தளனில் சண்டையிட்டுக் கொண்டிருந்த விடயம் தெரிய வந்தது.

சூசை உங்களுடன் வரமாட்டாரா என்று அவரது குடும்பத்தினரிடம் இலங்கைக் கடற்படை அதிகாரிகள் கேட்டனர். அதற்கு அவர்கள் இல்லை என்று பதிலளித்தனர்.

இதையடுத்து தனது கைத்தொலைபேசியை சூசையின் மனைவியிடம் கொடுத்த கடற்படை அதிகாரி ஒருவர், சூசையுடன் பேசுமாறு பணித்தார். சூசையையும் தம்மிடம் வந்து சரணடையுமாறு அவரது மனைவி மூலம் அந்தக் கடற்படை அதிகாரி அழுத்தம் கொடுத்தார்.

ஆனால் சூசை சரணடையவில்லை. அவர் தீர்க்கமான எண்ணத்துடன் போரில் ஈடுபட்டதாக வசந்தபிரிய ராமநாயக்க தனது கட்டுரையில் கூறியுள்ளார்.

சூசையை அவரது மனைவி மூலம் சரணடைய அழுத்தம் கொடுத்த இலங்கைக் கடற்படை அதிகாரியின் பெயரை அவர் குறிப்பிடவில்லை.

போரின் இறுதிக் கட்டத்தில் படையினருடன் இணைந்து செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஒரு சில அரச ஊடகவியலாளர்களில் வசந்த பிரிய ராமநாயக்கவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-323) (புதினப்பலகை)



மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது அதிகளவிலான இறால் பிடிபடுகின்றது. மட்டக்களப்பு, கல்லடிப் பாலத்திற்கு கீழ் ஐம்பதுக்கும் மேற்பட்ட தோணிகளில் மீனவர்கள் இறால் பிடிப்பதில் ஈடுபடுகின்றனர். இங்கு பல வகையான இறால்கள் பிடிபடுவதாகவும் இவற்றை நாளுக்கு கிராக்கி இருப்பதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்

# கிழக்கில் சிறுவர் கடத்தல்; இனியபாரதிக்குத் தொடர்பு

## ஐ.நா. அறிக்கையில் குற்றச்சாட்டு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இணைப்பாளர் இனிய பாரதி சிறார்களைக் கடத்திச் சென்றதாக, ஐ.நா பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு சிறார்கள் மற்றும் ஆயுதமோதல்கள் தொடர்பான ஐ.நா பொதுச்செயலரின் பிரதிநிதி ராதிகா குமாரசாமி அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையில், உலகில் பல்வேறு நாடுகளிலும் இடம்பெறும் சிறார்கள் கடத்தல், சிறார் படைச்சேர்ப்பு, சிறார்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாகவும், அதில் தொடர்புடைய குழுக்கள் தொடர்பான விவரங்களையும் பட்டியலிட்டிருந்தார்.

இதில் 2006ஆம் ஆண்டுக்கும் 2009ஆம் ஆண்டுக்கும் இடையில், இனியபாரதி சிறார்களை கடத்திச் சென்று படைகளில் சேர்த்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் சேர்ப்பதற்காக 18 வயதுக்குட்பட்ட 5 சிறார்கள் உள்ளிட்ட 13 பேரைக் கடத்திச் சென்றதாக, இனியபாரதி மீது குற்றச்சாட்டுகள் உள்ளன.

இதுதொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினர் நடத்திய விசாரணைகளின் போது இந்த 13 பேரும் எங்கிருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கருணாவுடன் சேர்ந்து இயங்கிய இனியபாரதி இப்போது ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளராகப் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது. (புதினப்பலகை)

# ராகுலுக்கு அருகில் வந்த பிஸ்ரல் நபரால் பரபரப்பு

காங்கிரஸ் பொதுச்செயலர் ராகுல் காந்தி நேற்றுமுன்தினம் இரவு பட்டா பர்சௌல் கிராமத்தில் கைது செய்யப்பட்ட பின்னர் அங்கு குழப்பமும், அடுத்தடுத்த பல்வேறு சம்பவங்களும் நிகழ்ந்தன. ராகுல் காந்தியின் பாதுகாப்பில் பெரிய குளறுபடி ஏற்பட்டது.

ராகுல் காந்திக்கு நெருக்கமாக "பிஸ்ரல்" துப்பாக்கியுடன் இருந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

ராகுலைச் சுற்றி இருந்த கூட்டத்தில் அவரும் இருந்தார். பின்னர் அவர் கைது செய்யப்பட்டு காஸ்னா காவல்நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டார். உரிய நேரத்தில் அவர் கைது செய்யப்பட்டதால் விபரீத சம்பவங்கள் எதுவும் நிகழாமல் தடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட அவரை விசாரணைக்காக ராகுல் காந்தியின் சிறப்புப் பாதுகாப்புக் குழுவிடம் உத்தரப் பிரதேச மாநிலப் பொலிஸார் ஒப்படைத்தனர்.



ராகுலின் பாதுகாப்பு மீறப்பட்டது குறித்து விரிவான அறிக்கை அளிக்குமாறு சிறப்புப் பாதுகாப்புக் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றக் காணியில் மீட்கப்பட்டவை மனித எச்சங்கள் தான் என்பது உறுதி

யாழ்ப்பாணம், மே.13

மல்லாகம் நீதிமன்றக் கட்டடம் அமைக்கப்பட்டு வரும் காணியிலிருந்து கடந்த 6ஆம் திகதி மீட்கப்பட்ட எச்சங்களில் சில மனித எச்சங்கள் தான் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த இடத்தில் மேலும் தடயங்கள் உள்ளனவா என்று நேற்றுச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மல்லாகம் நீதிமன்றக் கட்டடம் அமைக்கப்பட்டுவரும் காணியிலுள்ள கிணற்றிலிருந்து கடந்த ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி மண்டை ஓடு ஒன்று மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட மண்டை ஓட்டை தெல்லிப்பழைப் பொலிஸார் எடுத்துச் சென்றனர்.

இதன் பின்னர் இந்த மாதம் 5ஆம் திகதி குறித்த பகுதியில் கட்டடம் அமைப்பதற்கான அத்திவாரம் வெட்டும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த போது சிதைவடைந்த நிலையில் எலும்பின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பாகத் தெல்லிப்பழைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் குறித்த எச்சங்களை எடுத்துச் சென்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து எலும்பின் எச்சங்கள் மீட்கப்பட்ட இடத்துக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி, யாழ். போதனா வைத்தியசாலைச் சட்ட வைத்திய அதிகாரி, பொலிஸார் ஆகியோர் கடந்த 6 ஆம் திகதி வந்தனர்.

சம்பவ இடத்தில் மேலும் ஏதாவது தடயங்கள் இருக்கின்றனவா என்று சட்ட வைத்திய அதிகாரி சோதனை மேற்கொண்டார். அதன் போது சில எலும்பின் எச்சங்கள், பல் என்பன மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட எச்சங்களைப் பரிசோதித்து



அவை மனித எச்சங்களாக இருந்தால் தொடர்ந்து இந்த இடத்தில் சோதனை மேற்கொள்வோம் . என்று சம்பவ இடத்தில் கடந்த 6 ஆம் திகதி சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

சம்பவ இடத்தில் சட்ட வைத்திய அதிகாரியால் மீட்கப்பட்ட பல், மனிதப் பல் தான் என்பதை உறுதிப்படுத்தியிருந்தார் நேற்றுக் குறித்த இடத்தில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மல்லாகம் நீதிவான் ஜே. ஜுஹிதிபாலன், யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ். சிவரூபன், கே. ரட்ணசிங்கம் மற்றும் தெல்லிப்பழை பொலிஸார் ஆகியோர் சோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது நேற்றும் பல், விலா எலும்பு, தாடை எலும்பின் சிதைவடைந்த எச்சங்கள் என்பன மீட்கப்பட்டன.

அரை மணி நேரம் சோதனை நடவடிக்கை இடம்பெற்றது. பின்னர் நிறுத்தப்பட்டு எச்சங்கள் பகுப்பாய்வுக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து கட்டட வேலைகள் முன்னெடுக்கப்படும். ஏதாவது தடயங்கள் மீட்கப்பட்டால் அவை பற்றி அறிவிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. (த-15)

# பொன்சேகாவுக்கு சிகிச்சை அளிக்க நீதிமன்று உத்தரவு

கொழும்பு, மே 13

வெள்ளைக்கொடி வழக்கின் பிரதான பிரதிவாதியான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு முறையான சிகிச்சை அளிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நேற்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

வெள்ளைக்கொடி விவகார வழக்கு நேற்று மேல்நீதிமன்றில் நடைபெற்றது. வழக்கில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சுகயீனம் காரணமாக இருமியவாறு சாட்சியமளித்தார்.

இதனால் மேல் நீதிமன்ற நீதியரசர்கள் அவருக்கு 10 நிமிட இடைவேளை வழங்கினர். அத்தோடு குடிதண்ணீரும் வழங்கினர்.

இதனை அடுத்து தொடர்ந்து சாட்சியமளித்த சரத் பொன்சேகா மீண்டும் இருமிக்கொண்டே சாட்சியமளித்தார்.

இந்நிலையில், நீதியரசர்கள் சிறைச்சாலை அதிகாரியை அழைத்து சரத் பொன்சேகாவுக்கு முறையான சிகிச்சை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டனர்.

# 'லங்கா ஈ நியூஸ்' தடை நீக்கம் ஊடகவியலாளர் சாந்த விடுவிப்பு

'லங்கா ஈ நியூஸ்' இணையதளத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை பூகொடை நீதிமன்றம் நேற்று இரத்துச் செய்தது. அத்துடன் கைதுசெய்யப்பட்டிருந்த ஊடகவியலாளரான சாந்த விஜேசூரியவையும் நீதிமன்றம் விடுதலை செய்தது.

ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் பேரில் இவருக்கு இரண்டு வார விளக்கமறியல் தண்டனை விதிக்கப்பட்டது. 'லங்கா ஈ நியூஸ்' இணையதளத்தின் செயற்பாடுகளுக்கும் தடை விதிக்கப்பட்டது. மேற்படி வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது தனது குற்றத்தை அவர் ஒப்புக் கொண்டார். இதனை அடுத்து இணையத்தளம் மீதான தடையை நீக்கியதுடன் ஊடகவியலாளர் சாந்த விஜேசூரியவை எச்சரிக்கை செய்து நீதிமன்றம் விடுதலை செய்தது. (த-சி)

# 874 குடும்பங்கள் மாத இறுதியில் வடமராட்சி கிழக்கில் மீள் குடியமர்வு

யாழ்ப்பாணம், மே.13

வடமராட்சி கிழக்கில் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் 874 குடும்பங்கள் இந்த மாத இறுதியில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக் கேணி ஜே/434, முள்ளியான் ஜே/433, போக்கறுப்பு ஜே/432 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 874 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 582 பேர் இந்த மாத இறுதியில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதில் வெற்றிலைக் கேணியில் 212 குடும்பங்களைச் சேர்ந்த 908 பேரும், முள்ளியானில் 343 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 461 பேரும், போக்கறுப்பில் 319 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 213 பேரும் மீளக்குடிமர்த்தப்படவுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான அனுமதியை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தற்போது எனக்கு வழங்கியுள்ளார். எனினும் இந்த மூன்று பகுதிகளுக்கும் பொதுப்பாக உள்ள இராணுவ அதிகாரிகள் தற்போது விடுமுறையில் உள்ளமை காரணமாக உடனடியாக மக்களை மீளக்குடியமர்த்த முடியாதுள்ளது-என்றார் அவர். (த-14-4)

**Beacon**
**Clock Tower Road, Jaffna.**
"வணிகக்கல்வியில் "A"என்னும் அருங்கனியைப் பெற்றிட!!"
மாபெரும் தொடர் பரீட்சையும் கருத்தரங்கும்
S.K. Balasabesh
(H.N.Dip-in. Acc)
குறிப்பு: பழைய பாடத்திட்டம், புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக யாழ். மாவட்டத்தில் முதல் முறையாக நடத்தப்படுகிறது.
★பதிவுகள் அலுவலகத்தில் முன்கூட்டியே மேற்கொள்ளவும்
★பரீட்சை நடைபெறும்
திகதி : 13.05.2011 நேரம் : 8.30 a.m.

**கணக்கீடு**
**A/L 2013**
புதிய பிரிவு ஆரம்பம்
universal சுத்தாமம்
sat, sun 4 p.m
SHAMROCK
ஈச்சமோட்டை
Mon, Fri 4 p.m
NIRU கோண்டாவில்
sat,sun 9 A.m
"தனிப்பட அனுமதி"
S.தவா B.com
(Hons) (Acc.spl)

**பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்**
**பணிநிலை வேண்டுகை**
1. இணைய வழிகாட்டுனர் (ஆண்/பெண்).
2. முகாமை உதவியாளர் (ஆண்/பெண்).
**கல்வித்தகைமை**
1. O/L சித்தியுடன் போதிய கணினி அறிவு.
2. பருத்தித்துறை நகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.
20/05/2011 இற்கு முன் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.
பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்,
பஸ்நிலையம்,
பருத்தித்துறை.
T.P-0217900223, 0773222837
P.net
சிவன் கோயில் வீதி,
பருத்தித்துறை.

**SLAS இறுதிக்கருத்தரங்கு**
பொது உளச்சார்பு, பொது அறிவு, முகாமைத்துவ உளச்சார்பு கட்டுரையும் சுருக்கமும் ஆகிய விடயங்களுக்குரிய எதிர்பார்க்கை வினாத்தாள்கள் 17ம், 18ம் திகதிகளில் காலை 9.00 மணிதொடக்கம் மாலை 4.00 மணிவரை ஆராயப்படும்.
★ இடநெருக்கடிகளையும், அச்சடிக்கப்பட்ட மாதிரிவினாத்தாள்கள் கிடைப்பதை உறுதிசெய்யவும் பதிவை மேற்கொள்ளவும்.
தொடர்பு:0212223382
★ சனி (14/05) ஞாயிறு(15/05) தினங்களில் வழமையான வகுப்பு நடைபெறும் விரும்பியவர்கள் இவ்வகுப்புகளிலும் பங்குபற்றலாம்.
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டமளிப்பு மண்டப வீதி, யாழ்.
**SLEAS பரீட்சைக்கான புதிய பிரிவுகள்**
சனி(14/05)பிப 1 மணிதொடக்கம் 5 மணிவரை செவ்வாய்(17/05), புதன்(18/05) காலை 9.00 தொடக்கம் 4 மணிவரையும் நடைபெறும்.

**பணியாளர்கள் தேவை**
யாழ். நகரில் இயங்கும் ஹாட்வெயர்ஸ் விற்பனை நிலையத்துக்கு கீழ்க்காணும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவை.
I. விற்பனையாளர்கள்.
II. சிற்றூழியர்கள்.
★ அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது
★ விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தங்கள் சுயவிவரத்தினை அனுப்பிவைக்கவும்.
விளம்பர இலக்கம்: 4143 C/O உதயன் 361, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
(4160)

**கற்சுமி வெளியீடு**
முன்பள்ளி மற்றும் தரம் 1, 2, 3, 4, 5 மாணவர்களுக்குரிய ஏப்ரல் - மே மாத இதழ்கள்
வெளிவந்துவிட்டன
"உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்"
கற்சுமி வெளியீடு, 166, நாவலர் வீதி, யாழ்.

வடமாகாண அலுவலக உதவியாளர் - தரம் III போட்டிப் பரீட்சை வகுப்புகள்
(50 மணித்தியாலம்)
பிரிவு - I சனி, ஞாயிறு - 9.00 a.m
பிரிவு - II சனி,ஞாயிறு - 4.00 p.m
ஆரம்பம்:
14.05.2011 சனி 9a.m
மேலதிக தொடர்பு:-
0750469936.
திமு கல்வி நிறுவனம்,
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.

★6" மாபிள்களில் இருந்து 2 அடி அளவிலான மாபிள்கள் வரை சகல வர்ணங்களிலும்
★கிரனைட் கற்கள் (சகல அளவுகளிலும்) உத்தரவாதத்துடன் உடனுக்குடன் பெறுவதற்கு விரையுங்கள்.
**ஆர்க் என்ரபிறைசஸ்**

**GENERAL ENGLISH COURSE**
**for**
**G.C.E. ADVANCED LEVEL**
- A Comprehensive Course from the Basic Level
- Twice Weekly
- Commencing 14.05.2011 at 3.00 p.m
**NEW SCIENCE HALL**
**Kannathiddy -Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.